கோகுலம்

GOKULAM

அக்டோபர் 2000 ரூ. 6/-



பாட்டி, பாட்டி கதை சொல்லு!

ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடை: 1. நாயின் கண் 2. கூடையில் உள்ள பழங்கள் 3. சிறுவன் பிடித்திருக்கும் கயிறு 4. சிறுமியின் வளையல் 5. சிறுமியின் தோடு.


வண்ணம் தீட்டுங்கள் !






பிருந்தாவனம்

விடை: 1. அரிவாள் மனை 2. தட்டு கவிழ்ந்திருத்தல் 3. பையின் கைப்பிடி மாறியிருத்தல் 4. கத்தரிக்காயின் காம்புகள் வெண்டைக்காயில் மாறியிருத்தல்.



இவற்றில் ஒன்று மட்டும் வித்தியாசமானது எது?

விடை: நாய்
(வீட்டு விலங்கு)



கோகுலம்

2000

அக்டோபர்

மலர் : 18

இதழ் : 9

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

கிருஷ்ண ஜயந்தி, விநாயக சதுர்த்தி ஆகிய பண்டிகைகளைப் பிரமாதமாகக் கொண்டாடியிருப்பீர்கள்.

இதோ, நவராத்திரியும் தீபாவளியும் வந்து கொண்டேயிருக்கின்றன.


எல்லா பண்டிகைகளுமே சில விசேஷமான தின்பண்டங்களை நமக்கு வழங்கி மகிழ்விக்கின்றன. அம்மாவுக்குத்தான் கொஞ்சம் வேலை அதிகம். ஆனால் கூடமாட நீங்கள் உதவினால் அம்மாவுக்குச் சிரமமே தெரியாது!

கிருஷ்ண ஜயந்தி என்றால் சீடை, முறுக்கு; விநாயக சதுர்த்தி என்றால் கொழுக்கட்டை; நவராத்திரி என்றால் சுண்டல்; தீபாவளி என்றால் மைசூர்பாகு, ஜாங்கிரி, தேன்குழல், ஓலைபக்கோடா!

அடடா! படிக்கும்போதே நாக்கில் ஜலம் ஊறுகிறது அல்லவா?

எல்லா பண்டிகைகளின்போதும் இறைவனின் ஏதோ ஒரு வடிவத்தை வணங்கி, நாட்டுக்கும் நமக்கும் நல்லது நடக்க பிரார்த்திக்கிறோம்.

அடிப்படையில் இந்தக் கொண்டாட்டங்கள் எல்லாமே நமக்கு ஒரே விஷயத்தைத்தான் உணர்த்துகின்றன. அது, தீமைகள் அழிந்து நன்மைகள் பெருக வேண்டும் என்பதுதான்.



தீமைகளுடன் போராட நாம் தயாரானால் இறைவன் நமக்கு பக்கபலமாக இருப்பான். நன்மைகள் பெருக உழைத்துப் பாடுபட்டால் தோன்றாத் துணையாக இருந்து உதவுவான்.

இன்று நாம் பலவிதமான தீமைகளுடன் போராட வேண்டியவர்களாக இருக்கிறோம். முதலில் வீரப்பனும் அவனால் பிணைக்கைதியாக்கப்பட்டுள்ள ராஜ்குமாரும் மற்றவர்களும்தான் நினைவுக்கு வருவார்கள். விஜயதசமிக்கு முன்னதாக-நவராத்திரி தொடங்கும் முன்னரே கூட-அவர்கள் விடுவிக்கப்படவேண்டும் என்று மகிஷா சுர மர்த்தனியை வேண்டுவோம்.

வீரப்பன் தவிர வேறு பல பூதாகரமான பிரச்னைகளும் நம் நாட்டில் நிலவி, நம்மை அச்சுறுத்துகின்றன. லஞ்ச ஊழல், அறியாமை, வறுமை, பயங்கரவாதம், தீவிரவாதம், ஜாதி-மதப் பூசல்கள் என்று பலவிதமான அசுரர்களுடன் நாம் போராட வேண்டியிருக்கிறது.


இவற்றை வென்று இந்தியாவின் எதிர்காலத்தை வளம் மிக்கதாக அமைக்க வேண்டிய பொறுப்பு நம் எல்லோருக்கும் இருக்கிறது. இந்த மகத்தான பொறுப்பை நிறைவேற்ற மகிஷாசுரனுடன் போராடி வெற்றிபெற்ற பராசக்தி நமக்கும் உதவ வேண்டும் என்று நவராத்திரி சமயத்தில் பிரார்த்திப்போம்.


அன்புடன்,


கி. ராஜேந்திரன்,
ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.











கோகுலம்


அக்டோபர் 2000 இந்த இதழில்...



கோகுலம் சுழல் கோப்பை!

கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ, அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. செந்துறை, ஆண்டிபட்டி, லால்பேட்டை, பெரியதச்சூர், சென்னை, கூறைநாடு, பென்னாகரம் பள்ளிகளுக்கிடையே போட்டி நடைபெற்று வருகிறது. இன்னும் இரண்டே மாதங்களில் கோப்பையை வெல்லப்போகும் பள்ளி எது என்பது தெரிந்து விடும். காத்திருங்கள்!

ஹா, ஹா, ஹா!




"எறும்புக்கு இனிஷியல் இருக்கா?"

"ஏண்டா இப்படி கேட்கறே?"

"எங்க வீட்டுலே ஒரு ஈ எறும்பு கூட இல்லேன்னு முத்து சொல்றானே!"


— தஞ்சை தாமு



"கணபதிக்கும் கம்ப்யூட்டருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?"

"இரண்டிற்க்கு அருகிலேயும் மௌஸ் இருக்குமே!"

– பி. விஜயகுமார்



"நம்ம வகுப்பிலேயே ராமு மட்டும்தான் தலைக்கனம் இல்லாதவன்னு எப்படி சொல்றே?"

"வருஷா வருஷம் பழனி, திருப்பதின்னு மொட்டைப் போட்டுடறானே!"

– ஓரியூர் கே.சேகர்

கைமுறுக்கு விற்றேன்!

நான் பிறந்து வளர்ந்தது எல்லாமே அருப்புக்கோட்டையில்தான். என்னுடன் கூடப் பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள்; ஒரு சகோதரர். அப்பா பொதுப்பணித் துறையில் கடைநிலை ஊழியர். வீட்டின் பொருளாதார நிலை வாய்க்கும் கைக்குமாகத்தான் இருந்தது. இட்லி, தோசை போன்ற பலகாரங்களை தீபாவளி மற்றும் சில அமாவாசை நாட்களில் மட்டும்தான் வீட்டில் செய்வார்கள். நான் அம்மா செல்லம். அப்பாவைக் கண்டால் நடுக்கம்தான். சிறு தப்பு செய்தாலும் வெளுத்துக் கட்டி விடுவார்.




அருப்புக்கோட்டை நகராட்சிப் பள்ளியில்தான் என் படிப்பு துவங்கியது. சிறு வயதிலிருந்தே எனக்கு நல்ல நண்பர்கள் அமைந்தது என் அதிர்ஷ்டம். பலர் எனக்கு நெருக்கமாக இருந்தாலும் மருது, ஜெயராஜ், பொன்னுசாமி ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். பெரும்பாலும் அப்பாவுக்குப் பயந்து கொண்டு, புத்தகங்களோடு மருதுவின் வீட்டிற்குப் போய்விடுவேன். அங்கேயே இரவும் தங்கி விடுவதுண்டு. அவர்கள் வீட்டில் மாடுகள் வளர்த்து பால் வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். மருதுவுடன் சேர்ந்து கொண்டு, மாடுகளைக் கழுவுவது, பால் கறப்பது, தீனி போடுவது என்று எல்லா வேலைகளையும் செய்வேன். விடியற்காலையில் கறந்த பாலை எடுத்துக்கொண்டு கடைகளுக்கு ஊற்றிவிட்டு, அப்படியே பன், பிஸ்கட்

என் குழந்தைப் பருவம்

'நக்கீரன்' கோபால்



எல்லாம் சாப்பிட்டு விட்டு வீட்டிற்கு வருவேன். காலையில் வரும்போது ஞாபகமாக கையில் புத்தகத்தை எடுத்து வர வேண்டும். கையில் புத்தகம் இல்லாமல் வீட்டிற்குத் திரும்பினால் அடித்துத் துவைத்து விடுவார் அப்பா. விடுமுறை நாட்களில் சிறிய தட்டில் அம்மா தயார் செய்து கொடுக்கும் கடற்பாசி அல்வாவை கடைத் தெருவில் வைத்து விற்று வருவேன். சில சமயங்களில் கைமுறுக்கு செய்து கொடுப்பார்கள். இப்படி விற்று வரும் வருவாயில் தான் அம்மா மாத கடைசி நாட்களை ஓட்டுவார்.





பள்ளி நாட்களில் எனக்கு இரண்டு விஷயங்களின் மேல் தீவிரப் பற்று இருந்தது. ஒன்று, ஹாக்கி விளையாட்டு, அடுத்தது படம் வரைவது. ஒரு சம்பவத்தை எப்போதும் மறக்க முடியாது. எங்கள் ஊர் மைதானத்தில் கழுதை ரேஸ் என்று ஒன்று நடத்துவோம். ரேஸ் என்றால் கழுதைகளை வரிசையாக நிற்க வைத்து ஓட விடுவதல்ல; கழுதையின் முதுகின் மீது உட்கார்ந்து கொண்டு அதன் காதுகளை பிடித்துக்கொண்டு மைதானத்தைச் சுற்றிவர வேண்டும். யார் அதிக ரவுண்டுகள் சுற்றுகிறார்களோ அவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

அந்தக் கழுதை ரேஸில் நான் சென்ற கழுதையின் வாலில் நண்பர்கள் பனை ஓலையை கட்டி விட்டார்கள். கழுதை வெறித்தனமாக ஓடத் துவங்கியது. மைதானத்தைச் சுற்றி, சுற்றி வந்தது. நான் பயந்து அலறுவது கண்டு நண்பர்கள் உதவிக்கு வராமல் சிரித்துக் கொண்டிருந்தார்கள். நான் பிடியை விடாமல் கிட்டத்தட்ட கழுதையின் மேலேயே படுத்துக் கொண்டிருந்தேன். நாலு கால் பாய்ச்சலில் ஓடிய கழுதை ஓர் இடத்தில் தடுமாறி விழுந்தது. நான் மல்லாக்க விழுந்தேன். முதுகில் சப்பாத்தி சைஸுக்குக் காயம். அது தவிர முகவாய்க் கட்டையில் பலத்த அடி. பயந்துகொண்டே ரத்தக் கறை சட்டையுடன் வீட்டிற்குச் சென்றேன். கிழிந்து போன அந்தச் சட்டையை மீண்டும் தைத்தாலும் உபயோகிக்க முடியாது போலிருந்தது. வருடத்திற்கு இரண்டு முறைதான் எனக்கு டிரஸ் எடுத்துக் கொடுப்பார்கள். வாசலிலேயே

உட்கார்ந்து கொண்டிருந்த அப்பா முகவாய் கட்டைக் காயத்தைப் பார்த்தவுடன் "என்னடா இது?" என்று உறுமினார்.

"ஹாக்கி விளையாடும்போது தடுக்கிக் கீழே விழுந்துட்டேன்" என்று நடுங்கியவாறு சொன்னேன். நல்லவேளையாக முதுகுப் பக்கம் பார்க்கவில்லை. அப்படியே நைசாக வீட்டிற்குச் சென்று முதுகை சுவற்றின் பக்கம் வைத்துக் கொண்டு, கையில் புத்தகத்தை எடுத்துக்கொண்டேன். காயத்தால் ஏற்பட்ட வலி ஊசி குத்தியது போல் இருந்தது. என்னிடம் காயத்தைப் பற்றி விசாரித்த அப்பா கடைத் தெரு பக்கம் பின்னர் போயிருக்கிறார். மருதுவைப் பார்த்திருக்கிறார். "ஏண்டா... அடி படும்படி விளையாடுறீங்க...?" என்று விசாரித்திருக்கிறார். மருதுவுக்கு ஷாக். கோபால் கழுதை ரேஸ்ல அடிபட்டதைச் சொல்லிட்டான் போலிருக்கிறது என்று நினைத்துக்கொண்டு "இனிமேல் கழுதை ரேஸ் விளையாட மாட்டோம்" என்று அழாக் குறையாகச் சொல்லியிருக்கிறான். "என்னது கழுதை ரேஸா? பய ஹாக்கி விளையாடும்போது அடிபட்டதாகத்தானே சொன்னான்!" என்று அங்கே உறுமியிருக்கிறார் அப்பா. அதே கோபத்தோடு வீட்டிற்கு வந்தவர், நான் படித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தைப் பிடுங்கி, கையால், முதுகில் விட்டாரே பார்க்கலாம் 'பளார்' என்று அறை. அலறி துடித்து விட்டேன் நான். அப்படியும் முதுகில் அடிபட்டதைச் சொல்லவேயில்லை. அந்த முதுகுக் காயம் ஆறும்வரை, வீட்டில் குளிக்காமல், மில் கிணற்றில்தான் குளியல்.



நான் படங்களை நன்றாக வரைவேனாதலால் பள்ளியில் இன்ஸ்பெக்ஷன் நடப்பதற்கு ஒரு மாதம் முன்பிருந்தே ஆசிரியர்கள் என்னை வேலை வாங்கத் துவங்கி விடுவார்கள். வகுப்பறைகளில் மாட்ட வேண்டிய சார்ட்டுகளையெல்லாம் நான் தான் வரைவேன். எங்கள் பள்ளி இன்ஸ்பெக்ஷன் முடிந்தும் வேலை ஓயாது. பெரும்பாலான ஆசிரியர்களின் மனைவிமார்களும் ஆசிரியைகளாக இருப்பார்கள். அந்த ஆசிரியைகள் பள்ளிகளில் இன்ஸ்பெக்ஷன் வந்து விடும். என்னை அவர்கள் வீட்டிற்குக் கூப்பிட்டு சார்ட்டுகள் வரைந்து கொடுக்கச் சொல்வார்கள். பள்ளி விட்டதும் ஆசிரியைகள் வீட்டிற்குச் சென்று வரைந்து கொடுப்பேன். அங்கு காபி, பலகாரம் கொடுக்கப்படுமாதலால், மிகவும் ஆர்வத்துடன் செல்வேன்.



படிப்பில் நான் மிகச் சுமாரான மாணவன்தான். ஒவ்வொரு மாதமும் பரீட்சை முடிந்த பின் பிராக்ரஸ் ரிப்போர்ட் கொடுப்பார்களல்லவா! அப்பாவிடம் இருந்த பயம் காரணமாகவும் அவர் கொடுக்கும் அடிகளைத் தாங்கும் சக்தி இல்லாததாலும் துணிந்து ஒரு தவறை பல மாதங்கள் செய்து வந்தேன்.

ஒருநாள் அப்பா கடைத்தெரு வழியாகச் செல்லும்போது என் வகுப்பு ஆசிரியரைப் பார்த்திருக்கிறார். அவர் "என்னங்க... பையன் படிப்பைப் பத்தியெல்லாம் கண்டுக்கிறதில்லையா... படம் எல்லாம் நல்லாத்தான் வரையறான்; ஆனால் படிப்பிலே கோட்டை விட்டுடறானே... ரிப்போர்ட் கார்டைப் பார்ப்பதேயில்லையா?" என்று கேட்டிருக்கிறார். கோபத்துடன் வீட்டிற்கு வந்த அப்பா என் தங்கையிடம் விசாரித்திருக்கிறார். பள்ளியில் மாதா, மாதம் பரீட்சை நடத்தி ரிப்போர்ட் கார்டு கொடுக்கப்படுவதை அவள் சொல்லியிருக்கிறாள். இந்த விஷயமெல்லாம் எனக்குக் கீழே சொல்


லப்படும் சம்பவத்துக்குப் பிறகுதான் தெரிய வந்தது.

அந்தச் சமயம் எங்கள் ஊர் கோமதி தியேட்டரில் 'மூன்று தெய்வங்கள்' படம் போடப்பட்டிருந்தது. ஒரு மாலை பள்ளியிலிருந்து திரும்பியதும் அப்பா 35 பைசாவை கையில் கொடுத்து 'மூன்று தெய்வங்கள்' படம் பார்த்து விட்டு வரச் சொன்னார். எனக்கு இன்ப அதிர்ச்சி. 33 பைசாதான் டிக்கெட். இடைவேளையில் மீதி பைசாவுக்கு முறுக்கு வாங்கிச் சாப்பிட்டேன். படம் பார்த்து விட்டு குஷியாக வீட்டிற்குத் திரும்பினேன். அப்பா வாசலிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் 'திருவிளையாடல்' படத்தில் வருவது போன்று கேள்விகள் கேட்கத் துவங்கினார்.

"யார்...யார் நடித்தது?"

"சிவாஜி, முத்துராமன், நாகேஷ்."

''அவங்க மூன்று பேரும் எதற்காக சிறைக்குப் போகிறார்கள்?''



''கொலைக்குற்றத்துக்காக ஒருவரும் கள்ளச் சாவி போட்டதற்காக ஒருவரும் மூன்றாமவர் கள்ளக் கையெழுத்து போட்டதுக்காகவும் சிறைக்குப் போறாங்க...''



"அது சரி... கள்ளக் கையெழுத்து போட்டதுக்காக சிறைக்குப் போவது யார்?"

"நாகேஷ்"

இந்தப் பதிலைச் சொன்னதும் எனக்கு விழுந்தது ஒரு அடி... என் வாழ் நாளுக்கும் அந்த அடி நினைவில் இருக்கும். அதன் பிறகு முயற்சி செய்து முதல் பத்து ராங்க்குகளுக்குள் எடுத்தேன். இந்தச் சம்பவத்தை இப்போது நினைத்தாலும் எனக்கே அவமானமாக இருக்கிறது. அப்பாவுக்குப் பயந்து ப்ரோகிரஸ் கார்டை அவருக்குக் காட்டாமல், அவரைப் போன்றே கையெழுத்துப் போட்டதை ஒரு அசட்டுத் துணிச்சல் என்றுதான் சொல்ல வேண்டும். மாணவ, மாணவிகளுக்கு என் வேண்டுகோள் என்னவென்றால், பெற்ற தாய், தந்தையிடத்தில் எதையும் மறைக்க வேண்டாம். ஒரு தவறு பல தவறுகளுக்கு வழி வகுக்கும். எந்தச் சூழ்நிலையிலும் உண்மையைச் சொல்லத் தயங்க வேண்டாம். அந்தச் சம்பவம் என் பள்ளி வாழ்வில் ஒரு திருப்புமுனை என்று சொல்லலாம்.



என் உறவினர் ஒருவர் இறந்துபோய் காரியங்கள் நடந்து கொண்டிருந்த சமயம்,



"என்னை உனக்குத் தெரிகிறதா?"
"தெரியலையே!"
"என்ன, உன் முன்னால் நிற்கிறேன். தெரியலை என்கிறாயே?"

— எஸ். மோகன்

அப்பா என்னிடம் காசு கொடுத்து கடையில் டீ வாங்கி வரச் சொன்னார். நான் தூக்கில் டீ வாங்கிக் கொண்டு திரும்பி வரும்போது, எதிரில் என் நண்பன் வந்தான். கோலி விளையாட்டில் எனக்கு அவன் இரண்டு பைசா தர வேண்டும். அவன் சட்டைக் காலரைப் பிடித்துக்கொண்டு ''எங்கேடா இரண்டு பைசா?'' என்று அவனை உலுக்கினேன். அந்தச் சமயம் பார்த்து தலையில் ஏதோ இரும்பு பொருளால் யாரோ 'நங்'கென்று தட்டினார்கள். அந்த அதிர்ச்சியில் கையிலிருந்த டீ தூக்கு கீழே விழுந்து டீ கொட்டிவிட்டது. திரும்பிப் பார்த்தால் காக்கிச் சட்டையில் மின் இலாகா ஊழியர் ஒருவர். அழுதுகொண்டே அவர் சட்டையைப் பிடித்துக்கொண்டேன். அடித்த இடத்தில் கை வைத்தால் நச, நசவென்று ரத்தம். வெளியில் யாரிடமும் அடி வாங்கி வந்தால் என் அப்பாவிடம் எனக்கு நான்கு அடி கிடைக்கும். அந்தச் சமயம் பார்த்து அப்பாவுக்குத் தெரிந்த போலீஸ்காரர் ஒருவர் வந்தார். ''என்னடா... என்ன விவகாரம்?'' என்று கேட்கவே.... ''இந்த ஆள் என்னை அடிச்சிட்டாரு'' என்று சொன்னேன். அவ்வளவுதான்! இரண்டு பேரையும் ஸ்டேஷனுக்குத் தள்ளிக் கொண்டு போய் விட்டார்கள். அதற்குள் செய்தி அப்பாவுக்குப் போக அவர் ஸ்டேஷனுக்கு வந்தார். அப்பா பொதுப்பணித் துறையாதலால், அவர் அலுவலக பொறியாளர்களுடன், மின்துறை பொறியாளர்கள் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தினர். கடைசியில் எனக்குப் புது டிரவுசரும் சட்டையும் அந்த மின் ஊழியர் எடுத்துத் தர வேண்டும் என்று முடிவாகியது. அப்பா முதுகில் செல்லமாகத் தட்டினார்; அது முதல் முதலாக வாங்கிய செல்லத் தட்டு! அடி பட்டதால் உண்டான வலி கூட மறைந்து விட்டது.

பத்தாவது வகுப்பில் செக்ரடேரியல் கோர்ஸில் சேர வேண்டும் என்று ஆசை. ஆனால் ஆசிரியர்கள் நான் நன்றாகப் படம் வரையும் காரணத்தால் பயாலெஜி பிரிவில் என்னைச் சேர்த்து விட்டார்கள். எங்கள் தலைமையாசிரியர் சுந்தரத்தை மறக்க முடியாது. ஆங்கில வார்த்தைகளை எப்படி அழகாக உச்சரிக்க வேண்டுமென்று கற்றுக் கொடுப்பார். பள்ளி இறுதி வகுப்பு படிக்கும்போதெல்லாம் என் ஓவியத் திறமையைப் பயன்படுத்தி சுயமாகச் சம்பாதிக்கவும் செய்தேன். கடை விளம்பரங்களைச் சுவற்றில் எழுதி வருமானம் தேடிக்கொண்டேன். வாய்க்கு ருசியாக ஹோட்டலில் சாப்பிடவும், பாடங்களுக்கு நோட்ஸ் வாங்கவும் அந்தப் பணம் மிகவும் உதவியாக இருந்தது. என் கல்லூரிப் படிப்பும் அருப்புக்கோட்டையிலேயே முடிந்தது.


கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வீரப்பனால் கடத்தப்பட்ட ஒன்பது வனத்துறை ஊழியர்களை மீட்டபோது தமிழ்நாட்டில் பல பள்ளி, கல்லூரிகளில் எனக்குப் பாராட்டு விழா நடந்தது. ஆனால் நான் படித்த கல்லூரியில் என்னை அழைத்துப் பாராட்டவில்லையே என்ற ஏக்கம் இருந்தது. மதுரைப் பல்கலைக் கழக துணைவேந்தர் சாலிகு அவர்கள் எங்கள் கல்லூரியில் இது குறித்துப் பேசியிருக்கிறார். உடனே விழித்துக்கொண்டு பாராட்டு விழா நடத்தினார்கள். நாம் படித்த கல்லூரியே பாராட்டுவது எவ்வளவு பெரிய விஷயம்! எனது வெற்றிக்கான காரணம் கடின உழைப்புதான். அதேசமயம் சோர்ந்து விட்ட சமயங்களில் தூக்கிவிட்ட நண்பர்களை என்றும் மறக்க முடியாது.

சந்திப்பு: **ப்ரியன்**


கர்வம்

கதை:
எஸ். துர்கா காத்யாயினி,
தூத்துக்குடி.

படம்:
மகேஷ்






ஓட்டப் பந்தயம் வச்சுப் பொன்னியைத் தோற்கடிச்சிடலாம்.
நம்மை விட ஓடுவதில் சிறந்தவள் பொன்னி.
இது வெறும் ஓட்டப் பந்தயம் மட்டுமில்லை. சூழ்ச்சிப் பந்தயம்.
என்ன சொல்றே?
இதில் கலந்து கொள்ளப் போறது பொன்னியும் முனியனும்தான்!
நான் மாட்டேன்.
யானையார் தனது திட்டத்தை விளக்கினார்.
நாளைக்கே போட்டி நடத் துங்கள்.
ஆஹா! அற்புதம்!
பொன்னியைச் சந்தித்தார் குரங்கார்.
யார், யாருடன் போட்டி போடுவது என்ற விவஸ்தையே கிடையாதா?
எப்படியும் நீதான் ஜெயிக்கப் போறே. இன்னும் பெருமை கூடும். முனியன் திமிரை அடக்கலாமே!


மறுநாள் பொன்னியும் முனியனும் ஓடுவதற்குத் தயாராக நின்றன.
ஆலமரத்தைத் தொட்டுட்டு வரணும். ரெடி! ஒன்... டூ... த்ரீ...
வெயில் கண்களைக் கூச மான் ஓடுவதில் கவனம் செலுத்தியது. சிறிது தூரம் சென்றதும் –
முனியனைக் காணோம். என்னோட போட்டியிட முடியுமா?
ஆலமரத்தை அடைந்த பொன்னி அதிர்ந்தது.
முனியன் எப்படி எனக்கு முன்னால்?
சரி வேகமாகத் திரும்பி ஓடலாம்...
பொன்னி ஓடி வர கரகோஷம் அதிர்ந்தது.
சப்! சப்!
என்னைப் பாராட்டி கை தட்டறாங்க. முனியன் இனிமேல் காட்டிலேயே இருக்கக் கூடாது.
அருகில் வந்ததும்
முனியன் வாழ்க!
முனியன் வாழ்க!
முனியனா எப்படி?
இனிமேல் இங்கே நான் வசிக்க மாட்டேன். வரேன்.
முனியனை இங்கேயும் அவன் தம்பியை ஆலமரத்தடியிலும் நிற்க வைத்து நடத்திய நாடகம் வெற்றி.

பிருந்தாவனம்

நிலவைவிட பூமி அதிகமாக ஒளிரும்!



மனித மூளை தன் ஆயுட்காலத்தில் பத்துக் கோடி செய்திகளைச் சேமித்து வைக்கும் திறன் கொண்டது.

மனித உடலில் ஆக்ஸிஜனை உடலுக்குள் கொண்டு செல்லும் சிவப்பணுக்கள் 20 கோடியும் நோய்க் கிருமிகளை எதிர்க்கும் வெள்ளை அணுக்கள் 300 கோடியும் உள்ளன.

– எஸ். மோகன்ராஜ், சீர்காழி.





'சலாம் அலைக்கும்!' – இது இஸ்லாமிய சகோதரர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் வாழ்த்து. இதன் பொருள்: 'உங்களுக்கு எல்லா நலன்களும் அமைதியும் உண்டாகட்டும்' என்பது. 'மணியான செய்திகள்' நூலிலிருந்து.


– பாலு, சென்னை.



தூக்கம் என்பது எல்லா உயிர்களுக்கும் ஒன்றாக அமைந்து விடுவதில்லை. மனிதன் சராசரியாக எட்டு மணி நேரம் தூங்கியாக வேண்டும். ஆழ்ந்து உறங்கும்போது மனிதன் சுமார் நாற்பது தடவை புரண்டு படுக்கிறான்.

இந்தியக் கரடியும் சில வகைப் பாம்புகளும் இருபத்தியிரண்டு மணி நேரம் தூங்குகின்றன. யானை மூன்று மணி நேரம் தூங்குகிறது. ஐரோப்பாவில் உள்ள சில பறவைகள் ஆகாயவெளியில் இறகுகளை விரித்தபடி காற்றில் மிதந்தவாறே தூங்குகின்றன.

– ராமகிருஷ்ணன், காயக்காடு.



வாசனையுள்ள திரவப் பொருள் யூடிகோலான். சுத்தமான ஆல்கஹாலில், நறுமணப் பொருள்கள், மூலிகைகள், மலர்கள் அனைத்தையும் நன்கு காய்ச்சி, பின் அதை வடித்து தயாரிக்கப் படுகிறது.


ஜெர்மானிய நாட்டிலுள்ள 'கோலான்' என்னும் இடத்தில் தயார் செய்யப்படுவதால், இதற்கு 'யூடிகோலான்' என்று பெயர் வந்தது.

ஆதாரம்: பொது அறிவுச் சிந்தனைகள்.

– ஏ. எல். சாதிக், காரைக்கால்.

மூட்டைப்பூச்சி குளிர்ப்பிரதேசமான அண்டார்டிகா தவிர உலகெங்கும் காணப் படுகிறது. பறவை மற்றும் பாலூட்டிகளின் ரத்தமே மூட்டைப் பூச்சியின் உணவு. மூட்டைப்பூச்சி வாரம் ஒருமுறை மட்டும் ரத்தம் குடிக்கும். உணவு கிடைக்காவிட்டால் ஒரு ஆண்டு வரை பட்டினி கிடக்கவும் செய்யும். தேள் போல் இரவில் மட்டும் உணவிற்காக வெளிவரும் மூட்டைப் பூச்சியைப் பகலில் கண்டால் அதற்கு அகோரப்பசி என்று அர்த்தம்.

– கனகா கெங்கை முத்து, அருப்புக்கோட்டை.





நிலவை விட பூமிதான் அதிக ஒளியுடையது. நிலவில் நின்று கொண்டு பூமியை நோக்கினால் எட்டு பௌர்ணமி நிலவுகள் எவ்வளவு பிரகாசமாக இருக்குமோ அவ்வளவு பிரகாசமாக பூமி இருக்கும்!

- ஆர். ஆர். பூபதி, கன்னிவாடி.

- சோமாலியா நாட்டு சிங்கங்களுக்குப் பிடரி மயிர் இருப்பதில்லை.
- ஸ்பெர்ம் திமிங்கலத்தின் மூளை எடை 9 கிலோ.
- எட்டு மாதங்கள் சேர்ந்தாற் போல் பறக்கும் பறவை 'டெர்ன்'
- கறையான் நாளொன்றுக்கு 80,000 முட்டைகள் இடும்.
- வீட்டுப் புறா மணிக்கு 94.2 மைல்கள் பறக்கும்.
- சுவாசிக்காமல் உயிர் வாழும் ஒரே உயிரினம் 'ஈஸ்ட்'

ஆதாரம்: ஒரு வரிச் செய்திகள் என்ற நூல்

- ஔவை ஏ.எஸ். யோகானந்தம்
ஔவையார்பாளையம்.

உலகத்திலேயே மிக நீளமான சுரங்கப் பாதை ஜப்பானில் உள்ளது. இது ஒரு கடலடிச் சுரங்கப்பாதை. ஜப்பானில் ஹான்ஹு தீவிலுள்ள பிப்பிசாகி என்னும் இடத்திற்கும் ஹொக்கேடோ தீவிலுள்ள ஃபுகுசிமா என்னும் இடத்திற்கும் இடையே அமைக்கப்பட்டுள்ள இந்தச் சுரங்கப்பாதையின் நீளம் 55 கிலோ மீட்டர்.

- க. பூங்கொடி, ஈரோடு.

காளானிலிருந்து பென்சிலின் மருந்து தயாரிக்கப்படுகிறது. பென்சிலியம் என்ற லத்தீன் சொல்லிலிருந்து பென்சிலின் என்னும் சொல் உருவாகியது. இச் சொல்லுக்கு 'சிறு துடைப்பம்' என்பது பொருள். பூதக் கண்ணாடியின் மூலம் பார்க்கும்போது காளானின் நார் நுனிகள் துடைப்பம் போலத் தோற்றமளித்தன. அதனால்தான் அதற்குப் பென்சிலின் என்று பிளமிங் பெயர் சூட்டினார்.

ஆதாரம்: அறிவியல் தகவல்கள்

- நெ. இராமன்,
சென்னை.



வெட்டுக்கிளி 'விவசாயிகளின் விரோதி' எனப் படுகிறது. காரணம் கூட்டமாகப் பறந்து சென்று தோட்டத்தையே நாசம் செய்து விடுகின்றன.


உலகில் மொத்தம் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட வெட்டுக்கிளி வகைகள் உண்டு என்றாலும் இவற்றில் ஒன்பது பிரிவுகள் மட்டுமே பயிர்களை அழிக்கின்றன.



இது ஒரே நேரத்தில் 30 முதல் 100 முட்டைகளை இடும். இரண்டு மாதம் கழித்து முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளி வரும். இவை தண்ணீர் குடிக்காது. ஆனால் எப்போதும் எதையாவது கொறித்துக்கொண்டே இருக்கும்.

வெட்டுக்கிளிகளால் அதிக வெப்பத்தைத் தாங்க முடியும். எனவே இவற்றை அழிப்பது







என்பது சாதாரண விஷயமல்ல!

– சரவணபாலாஜி,
மேற்கு தாம்பரம், சென்னை.

- திமிங்கலத்தின் வாயில் சுவை நரம்புகளே கிடையாது.
- ஒரு சிப்பிக்குள் ஒளிமிக்க ஒரு முத்து முழுமையாக உருவாக 15 ஆண்டுகள் ஆகும்.
- பசிபிக் பெருங்கடலில் தான் தீவுகள் மிக அதிகம். இப் பெருங்கடலில் ஓஷியானா என்ற பெயரில் 30 ஆயிரம் சிறு தீவுகள் உள்ளன.
- வட இந்தியாவில் சம்பல் நதி ஒட்டிய பகுதியில் வாழ்பவர்களும் அந்தமான் ஆதிவாசிகளும் தென் ஆப்பிரிக்கக் காட்டுவாசிகளும் வில் அம்பு கொண்டே மீன் பிடிக்கிறார்கள்!

– அண்ணா அன்பழகன்,
அந்தணப்பேட்டை



ஆயிரம் வருடங்களாக ஒரு மலை எரிந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் நம்புவதற்குக் கஷ்டமாக இருக்கிறதல்லவா? ஆஸ்திரேலியாவிலுள்ள நியூ சவுத் வேல்ஸ் பகுதியில் இந்த அதிசயம் நடந்து கொண்டு இருக்கிறது.

முதலில் அது ஒரு எரிமலை என்று கருதப்பட்டது. இல்லை என்பது பின்னர் தெரிய வந்தது. மலைக்கு 500 அடி கீழே ஒரு நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. மின்னல் தாக்கி தீப்பற்றிய மரம் ஒன்று அதன் திறந்த வாய் வழியே உள்ளே விழுந்துவிட்டது. அதனால் நிலக்கரியில் தீப்பற்றி அது கனன்று எரிந்து கொண்டிருக்கிறது. அடியிலுள்ள நிலக்கரி முழுவதும் தீரும் வரை அது எரிந்து கொண்டிருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒன்பதாவது கோளான, 'ப்ளூட்டோ'வைக் கண்டுபிடித்தவர் அமெரிக்க விஞ்ஞானி 'க்ளைட் டேம்பாக்' என்பவர். 1930ம் ஆண்டு இதைக் கண்டு பிடித்தார். சூரியனிலிருந்து ப்ளூட்டோ 5970 மில்லியன் கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.





ஆதாரம்: 'அதிசய உண்மைகள்' என்ற நூல்.

– ஏ.கே. நாசர்,
லெட்சுமாங்குடி.

'கார்க் ஒக்' மரத்திலிருந்து நாம் பயன்படுத்தும் மிக மெலிதான 'கார்க்' வகை தக்கைகள் கிடைக்கின்றன. இத்தக்கைகள் மேற்கண்ட மரத்தின் வெளிப்பட்டையிலிருந்து எடுக்கப்படுகின்றன. ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் நாடுகளில் மிக அதிகளவில் இம் மரங்கள் வளர்கின்றன. மரங்கள் 20 வயதானவுடன் அதன் பட்டைகள் வெட்டப்படுகின்றன. பின் ஒவ்வொரு பத்து வருடமும் இவ்வாறு வெட்டப்படுகின்றன. ஆனால் மரத்துக்கு இதனால் தீங்கு ஏதும் நேருவதில்லை. 'கார்க்' வகை மரங்கள் மிகக் குறைந்த எடையுள்ளவை.


– கே. சங்கரகிருஷ்ணன்,
கோயம்புத்தூர்–4.


முதன்முதலாக காகிதத்தை உருவாக்கியவர் சீனாவைச் சேர்ந்த சாய் லூன் என்ற அறிஞராவார். இவர் கந்தைத் துணிகளை ஊற வைத்தார். அவற்றின் நூல் இழைகள் தனித்தனியாகப் பிரிந்து கனி போல ஆனது. இதைத் தொட்டி நீரில் கரைத்து, தட்டையான சல்லடை அச்சை நீரினுள் அமிழ்த்தி வைத்தார். அதன்பின் நீரை அகற்றியதும் அச்சின்மேல் நூல் இழைகள் அடுக்கடுக்காக படிந்திருந்தன. இதை உலர வைத்தார். காகிதம் உருவாகியது. இக் காகிதத்தை உருவாக்கிய ஆண்டு கி.பி. 105 ஆகும்.

– சா. ஆனந்தகுமார்,
பேச்சிப்பாறை.



குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. போர்ட்பிளேயரைத் தலைநகரமாகக் கொண்ட தீவு (5)

5. மாட்டினத்தில் ஆண் (3)

8. மதுரைக்கு மீனாட்சி, ________க்கு காமாட்சி (3)

11. யானையைத் தன் சொல்படி கேட்டு நடக்க பழக்கி வைத்திருப்பவர் (3)

15. கம்ப்யூட்டர் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)

வலமிருந்து இடம்

3. பாடத்தில் இது உண்டானால் உடனே ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். (3)

6. நிறங்களில் ஒன்று, கண்ணுக்குக் குளிர்ச்சி (3)

9. இவன் போரில் புறமுதுகிட்டு ஓட மாட்டான் (3)

12. பெரிய மரங்களின் சிறிய செடிகளை இப்படி அழைப்பார்கள் (3)

16. மண், உலோகம் ஆகியவற்றால் ஆன கொள்கலன் (5)

மேலிருந்து கீழ்

1. ஒவ்வொரு மாதமும் நிலவின் ஒளி பூமியில் ________யின் போது தெரியாது (4)

2. திருப்பூர் குமரன் ________யை மீறி கொடியைக் காத்தார் (2)

3. மாதங்களில் ஒன்று. தீபாவளி இதில் வரும் (4)

10. பலர் கூடும் சபை (4)

13. கைகேயியின் மனதை மாற்றிய கிழவி (2)

14. நடந்து செல்லும் வழி (2)

கீழிருந்து மேல்

4. புனித மந்திரம் (2)


7. பாண்டவர்களின் மூத்த சகோதரன் (4)

15. கவசகுண்டலத்துடன் பிறந்த கொடை வள்ளல் (4)

16. உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கும் தோட்டங்கள் இங்கு இருந்தன (4)

— சிவமணவழகி,
திருச்சிற்றம்பலம்.

விடை: 62 ம் பக்கம்



கமலவேலன்

"தந்தையே! நான் தயாராகி விட்டேன். நாங்கள் கிளம்பலாமா?" – உத்தரவு கேட்டபடி தன் தந்தையின் அருகில் வந்தான் பத்து வயது ராஜ குமாரன் கமலவேலன். அவனுக்குப் பின்னால் அவனுடைய தோழர்கள் நான்கு பேர். அவர்களுக்குப் பின்னால் நான்கு வீரர்கள்.

"மன்னரே! வீரர்களாகிய நாங்களும் துணைக்குச் செல்வதால் இளவரசரைப் பத்திரமாக அழைத்து வருகிறோம்."

"ஆம் தந்தையே! கவலையேபடாதீர்கள். முன் மாலைப் பொழுதிற்குள் வந்து விடுவோம்."

"கமலவேலா! காட்டைச் சுற்றிப் பார்க்க நீ ஆசைப் பட்டதால்தான் உன்னைத் தகுந்த துணையோடு அனுப்புகிறேன். காட்டிற்குள் வெகு தூரம் செல்லாதீர்கள். ஜாக்கிரதையாகப் போய் வாருங்கள்."

அனைவரும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினர்.

ஆனால்... சொன்னபடி... முன் மாலைப் பொழுதில் யாரும் திரும்பவில்லை. பின் மாலைப் பொழுதில்தான் திரும்பினர். காட்டைச் சுற்றிப் பார்க்கச் சென்றவர்களில் கமலவேலனைத் தவிர மற்ற அனைவரும் சோகம் கப்பிய முகத்தோடும் அச்சம் நிறைந்த உள்ளத்தோடும் மன்னரின் முன் தலைகுனிந்தபடி வந்து நின்றனர்.

"மன்னரே! பகல் நேரம் வரை இளவரசர் எங்களுடைய கண்காணிப்பில்தான் இருந்தார். உணவு உண்ட பிறகு காட்டின் கிழக்குப் பகுதியை நோக்கிச் சென்ற போதுதான் அவரைக் காணவில்லை. எங்கள் பார்வையிலிருந்து எப்படி மாயமாய் மறைந்தார் என்றே தெரியவில்லை. அந்தப் பகுதி முழுவதும் சல்லடை போட்டுச் சலித்து விட்டோம். எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை" – விழிகள் கலங்க அச்சமும் துக்கமும் தொண்டையை அடைக்க அந்த வீரனால் மேற்கொண்டு பேச முடிய

வில்லை.

மன்னர் அதிர்ச்சியில் சிலையானார். அரசியோ, "அரசே! என் மகனைக் காட்டிற்கு அனுப்ப வேண்டாம் என்று தங்களிடம் கேட்டுக் கொண்டேன். ஆனால் தாங்களோ, கமலவேலன் காட்டைச் சுற்றிப் பார்த்து விட்டு வரட்டும். அப்பொழுதுதான் அவனுக்குத் தன்னம்பிக்கை, துணிவு, விடாமுயற்சி, வீரம் போன்ற நற்பண்புகள் பெருகும் என்று என்னிடம் சொன்னீர்கள். இப்பொழுது என்ன வாயிற்று? ஒருவேளை... ஒருவேளை... என் மகனை காட்டு மிருகம் ஏதாவது அடித்துப் போட்டிருக்குமோ? ஐயோ நான் என்ன செய்வேன்! கமலவேலா" என்று அரற்றியபடி மூர்ச்சையாகிக் கீழே சாய்ந்தார்.

செய்தியை அறிந்த நாடும் சோகத்தில் ஆழ்ந்தது.

டி. ஜானகி

எங்கே?

இரண்டு நாட்கள் நத்தை போல் ஊர்ந்து சென்றன. மூன்றாவது நாள். வழக்கம் போல அரசவை கூடியது. ஆனால் கலகலப்பு இல்லை. ஓரே அமைதி.

அப்போது அண்டை நாட்டு மன்னன் வீரேந்திரனின் தூதுவன் மன்னர் மகேந்திரனிடம் ஒரு விகிதத்தைக் கொடுத்தான்.

பிரதம மந்திரி அதைப் பிரித்து உரக்கப் படித்தார்.

"மன்னர் மகேந்திரனுக்கு,

அண்டைநாட்டு மன்னன் வரையும் மடல். இப்பவும் தங்கள் மகன் கமலவேலன் என் பாதுகாப்பில் பத்திரமாக இருக்கிறான். அவனை உயிருடன் நீங்கள் அடைய விரும்பினால் நான் கேட்பதைக் கொடுத்து விட வேண்டும். என்ன என்று கேட்கிறீர்களா?

"தங்கள் நாட்டில் இருக்கும் சாமந்தி மலை நகரத்தை என் வசம் ஒப்படைத்து விட வேண்டும். என் நாட்டின் எல்லைப் பகுதிக்கு அருகில் இருப்பதால் அதை என் நாட்டோடு சேர்த்துக் கொள்ள விரும்புகிறேன். தங்களிடம் இரண்டு முறை சாமந்தி மலை நகரத்தை எனக்கு விட்டுத் தரும்படி கேட்டேன். ஆனால் தாங்கள் மறுத்து விட்டீர்கள். அதை எப்படியும் அடைந்தே தீருவது என்று நான் எடுத்த முயற்சிதான் தங்கள் நாட்டு வருங்கால இளவரசன் என்னிடம் இருக்கிறான்.

"ஆம்! என் நாட்டு வீரர்கள், ஒற்றர்கள் சிலர் தங்கள் நாட்டில் இருக்கின்றனர். கமலவேலன் காட்டைச் சுற்றிப் பார்க்கச் சென்ற போது, சமயம் பார்த்து என் வீரர்கள்



அவனைக் கடத்திக் கொண்டு வந்தனர். போர் செய்தால் பல வீரர்கள் மடிவார்கள். அதனால்தான் இந்த முறையைக் கையாண்டேன்.

"சாமந்தி மலை நகரத்தை என்வசம் ஒப்படைத்த மறுநொடியே தங்கள் மகன் பத்திரமாகத் தங்கள் நாட்டிற்குத் திரும்பி விடுவான்.

"மகனா? சாமந்தி மலையா? எது முக்கியம்? யோசித்து முடிவு எடுக்க தங்களுக்கு ஒரு வாரம் அவகாசம் கொடுத்திருக்கிறேன்.

இப்படிக்கு,

மன்னர் வீரேந்திரன்."

மந்திரி படித்து முடித்தாரோ இல்லையோ... மறுநொடியே...

"நம்மோடு சண்டை போட்டால் கட்டாயம் தோற்றுப் போய்விடுவோம் என்று பயந்து கொண்டுதான் இவ்வாறு செய்திருக்கிறான். இவனுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்" என்று கோபத்தில் வெடித்தார் சேனாதிபதி.

"சாமந்திமலை அழகும் செல்வமும் நிறைந்த வளமான பகுதி. அதை அண்டை நாட்டிற்கு விட்டுத் தரக்கூடாது" உறுமினார் உதவி சேனாதிபதி.

"மன்னரே! ஆணையிடுங்கள். ஒரு பெரும் படையோடு சென்று அந்தப் பேராசைக் காரனின் முகத்தில் கரியைப் பூசி நம் இளவரசரை மீட்டுக் கொண்டு வருகிறேன்" மீண்டும் படபடத்தார் சேனாதிபதி.

"கமலவேலன் இந்நாட்டின் வருங்கால மன்னர். அவர் உயிர்தான் முக்கியம்" - அவையில் ஒருவர் எழுந்து நின்று கூறினார்.

"எலிப்பொறியில் சிக்கிய எலி மாதிரி நம் கமலவேலன் அண்டை நாட்டில் வசமாக மாட்டிக் கொண்டிருக்கிறான். நாம் படையோடு வருகிறோம் என்று கேள்விப்பட்ட உடனேயே வீரேந்திரன் நம் இளவரசனின் உயிருக்கு ஊறுவிளைவித்தால் என்ன செய்வது? வீரேந்திரனை நாம் போரிலே வென்றாலும் நமது கமலவேலனை மீண்டும் உயிருடன் பார்க்க முடியுமா? ஆத்திரமான உணர்ச்சியில் எடுக்கப்பட வேண்டிய முடிவு இல்லை. இது அறிவுபூர்வமாகச் சிந்தித்து நிதானித்து செயல்பட வேண்டியது" என்றார் சற்று வயதான மந்திரி.

"நமக்கு இன்னும் ஒரு வாரம் அவகாசம் இருக்கிறது. மந்திரியார் கூறுவது போன்று யோசித்து நல்ல முடிவு எடுப்போம். இத்துடன் இன்று அவை கலைகிறது" - கூறிய மன்னர் தம் அறையை நோக்கி நடக்கலானார்.

அண்டை நாட்டு மன்னர் வீரேந்திரனின் அரண்மனையில் நன்கு அலங்கரிக்கப்பட்ட ஒரு அறைக்குள் கமலவேலன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். அவ்வப்பொழுது அவன் முகத்தில் சிந்தனை ரேகை மின்னி மின்னி மறைந்தது.

"என்ன கமலவேலா? எந்த கோட்டையைப் பிடிக்க இந்த பலமான யோசனை?" வினவியபடியே மன்னர் வீரேந்திரன் உள்ளே நுழைந்தார்.

"மரத்தின் உச்சியில் உள்ள தேன்கூட்டை நான் மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்த போது, எங்கள் நாட்டு வீரர்கள் அணியும் உடையை அணிந்து வந்திருந்த தங்கள் நாட்டு வீரர்கள் திடீரென்று என் முகத்தில் மயக்கத்தை உண்டாக்கும் மூலிகைப் பொடியைத் தெளித்ததால் மயங்கி விட்டேன். என்னைத் தாங்கள் கடத்தி வந்த காரணத்தை இன்று காலையில்தான் கூறினீர்கள். அதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் கமலவேலன்.

"உன் தந்தைக்கு ஒரு வார கால அவகாசம் கொடுத்து இன்றோடு நான்கு நாட்கள் ஆகின்றன. இதுவரை எந்தப் பதிலும் இல்லை. அதனால் அவருக்கு இன்று மீண்டும் ஒரு மடல் அனுப்பப் போகிறேன்" என்றார் வீரேந்திரன்.

"மன்னரே! தங்களிடம் ஒரு சிறிய வேண்டுகோள்."

"சொல்."

"என் தந்தைக்கு மடல் எழுத விரும்புகிறேன். எழுதுவதற்குத் தேவையான

"நான் போட்டிருக்கிற ஜீன்ஸ் பேண்ட் எப்படியிருக்கு?"

"உன்னைப் போலவே இருக்கு!"

"நிஜமா அழகாக இருக்கிறதா?"

"இல்லை லூசாக!"

- நெ. இராமன்



உபகரணங்கள் கொடுக்க முடியுமா?"

"இதோ... கொடுத்தனுப்புகிறேன்" மன்னர் வெளியேறினார்.

மறுநாள்...

அறைக்குள் நுழைந்த மன்னர் வீரேந்திரனிடம், "மன்னரே! என் தந்தைக்கு தாங்கள் அனுப்பும் மடலோடு இதோ என்னுடைய இந்த மடலையும் சேர்த்து அனுப்பி விடுங்கள்."

தான் எழுதி முடித்த மடலைக் கொடுத்தான் கமலவேலன்.

'என்ன எழுதியிருக்கப் போகிறான்? சாமந்திமலை நகரத்தைக் கொடுத்து விடுங்கள். என்னை மீட்டுச் செல்லுங்கள்' என்று தான் எழுதியிருப்பான். எதற்கும் ஒருமுறை படித்துப் பார்த்து விட்டால் நல்லது என்று மனதிற்குள் எண்ணிய வீரேந்திரன் தன் அறைக்குச் சென்று நிதானமாகப் படிக்கலானார்.



'வணக்கத்திற்குரிய தந்தைக்கு,

ஒரு குடிமகனுக்குத் தாய் எப்படி உயர்ந்தவரோ, அதே போல தாய்நாடும் உயர்ந்தது. ஏன் தாயை விட தாய்நாடுதான் மிகவும் உயர்ந்தது என்று என்னுடைய ஆசான் கூறியிருக்கிறார். நம்முடைய தாய்நாட்டின் ஒரு அங்கம்தான் சாமந்தி மலை. அது நான் பிறந்த பூமி. ஏன் நீங்களும் பிறந்து வளர்ந்த பொன்னான பூமி. நம் மக்கள் அனைவரையும் ஆளாக்கிய மணியான பூமி.

எனக்காக, என் உயிரைக் காப்பாற்றுவதற்காக நம் தாய்நாட்டை இழக்காதீர்கள். மன்னர் வீரேந்திரன் என்னைக் கொல்ல வந்தால் சத்தியமாக நான் அழ மாட்டேன். ஏன் தெரியுமா? தாய்நாட்டிற்காக உயிரைக் கொடுப்பவர்கள் நிச்சயம் வீர சொர்க்கம் அடைவார்கள் என்று என் ஆசான் சொல்லியிருக்கிறார்.

இன்னொரு செய்தி. நான் கொல்லப்பட்ட செய்தியைக் கேட்டதும் இந் நாட்டின் மீது படையெடுத்து மன்னர் வீரேந்திரன் மகனை - என் வயதை ஒத்த அந்தச் சிறுவன் ஆதித்யனை தயவுசெய்து கொன்று விடாதீர்கள். பழிக்குப் பழி வாங்குபவன் வீரன் அல்ல. பகைவனையும் மன்னிப்பவன்தான் மாவீரன் என்று என் குருநாதர் கூறியிருக்கிறார்.

என் தாய்நாட்டிற்காக உயிரை விடத் தயாராக இருக்கிறேன். என் அன்னைக்கும் ஆசானுக்கும் என் வணக்கத்தைக் கூறுங்கள். மகிழ்ச்சியோடு தங்களிடம் விடைபெற்றுக் கொள்ளும் மகன் கமலவேலன்.'

மடலை ஒருமுறை அல்ல... பலமுறை படித்தார் வீரேந்திரன். ஒவ்வொரு வரியும் சம்மட்டிக் கொண்டு தன்னைத் தாக்குவது போல உணர்ந்தார். அவரது உள்ளத்தில் உணர்ச்சி அலைகள் படீர் படீர் என்று மோதின. அவரையும் அறியாது அவரது விழிகளில் கண்ணீர் வெள்ளம்.

'கமலவேலா! உன்னை மகனாக அடைந்ததற்கு உண்மையிலேயே உன் தந்தை புண்ணியம் செய்திருக்கிறார். என்னுடைய பேராசையினாலும் கோழைத்தனத்தினாலும் உன்னைக் கடத்தி வந்தேன். ஆனால்... பத்து வயது பாலகனான நீ பகைவனையும் மன்னிக்கும் உயர்ந்த உள்ளத்தைப் பெற்றிருக்கிறாய். இப்பொழுது என் விழிகளில் வருவது கண்ணீர் அல்ல. என் உள்ளத்து மாசுகளைக் கழுவி வரும் நீர். என் செய்கைக்குப் பிராயசித்தமாக இப்பொழுதே உன்னை உன் தந்தையிடம் அனுப்ப ஏற்பாடு செய்யப் போகிறேன். உன் தந்தையிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு நேசக்கரம் நீட்டப் போகிறேன். மாவீரனே... இது உண்மை.'

தான் எடுத்த முடிவை செயலாக்குவதற்காகத் தன் இருக்கையை விட்டு எழுந்தார் மன்னர் வீரேந்திரன்.



புதிர் உலகம்

I. ஏழு கொய்யாப் பழங்களை 12 பேருக்குச் சமமாகப் பங்கிட வேண்டும். ஒரு பழத்தை அதிகமாக 4 துண்டுகள் வெட்டலாம். அதற்கு மேல் வெட்டக் கூடாது.

– க. கண்ணகி, மீட்டூர்.

II. உங்கள் நண்பரை ஏதாவது ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். அவர் நினைத்த எண்ணை மூன்றால் பெருக்கச் சொல்லுங்கள். பெருக்கி வந்த எண்ணை மறுபடியும் நான் கால் பெருக்கச் சொல்லுங்கள். இப்போது உங்கள் நண்பரிடம் பெருக்கி வந்த விடையைச் சொல்லச் சொல்லுங்கள். உங்கள் நண்பர் சொன்ன விடையை நீங்கள் பன்னிரண்டால் வகுத்து அவர் நினைத்த எண்ணைச் சரியாகச் சொல்லி விடலாம்!

– எ.எல். பாத்திமா, காரைக்கால்.

III. 9ன் சிறப்பை என்னவென்று பார்ப்போமா... 9ஐ எந்த எண்ணுடன் பெருக்கி வரும் விடையின் எண்களைக் கூட்டினால் வரும் விடையும் ஒன்பதாகவே இருக்கும். 9X2 = 18 = 1+8 = 9, 9X3 = 27 = 2+7 = 9, 9X9 = 81 = 8+1 = 9, 9X10 = 90 = 9+0 = 9, 9X15 = 135 = 1+3+5 = 9.

- ஔவை ஏ.எஸ். யோகானந்தம் ஔவையார் பாளையம்

IV. 10989ஐ 9 ஆல் பெருக்குங்கள்! இதற்கு ஒரு சுலபமான வழி உண்டு.

– சேந்தன்குமடி மா. பானுமதி

V. ஒரு தோட்டத்தில் மயில்களும் முயல்களும் இருந்தன. ஒருவர் அங்கிருக்கும் மயில்கள் எத்தனை? முயல்கள் எத்தனை? என அறிய விரும்பினார். அவர் கால்களை மட்டும் எண்ணினார். மொத்தம் இருநூறு கால்கள் இருந்தன. அப்படியெனில் அங்கிருந்த மயில்கள், முயல்கள் எத்தனை?

- பெ. இராமசாமி, பன்னிரண்டாம் வகுப்பு, 'அ' பிரிவு, அரசு மேல்நிலைப்பள்ளி, செந்துறை, திண்டுக்கல் மாவட்டம்.

VI. ஒரு தட்டில் பத்துக் காசுகள் இருந்தன. பத்துப் பேருக்குத் தலைக்கு ஒரு காசு தானம் கொடுக்க வேண்டும். கொடுத்து தட்டிலும் 1 காசு இருக்க வேண்டும், எப்படி?

– ஆர். சுமதி, நாமகிரிப்பேட்டை.

VII முனியனின் பழத் தோட்டத்திற்கு ஏராளமான கிளிகள் வந்தன. அவற்றைப் பார்த்து "கிளிகளே உங்களுக்குப் பழங்கள்


று எண்ணுகிறேன். நீங்கள் நூறு பேர் இருப்பீர்களா?'' என்றார் முனியன். அதற்குத் தலைமைக் கிளி ''ஐயா நீங்கள் சொன்ன நூறு எண்ணிக்கை வர வேண்டுமானால் எங்களை இரண்டு முறை கூட்டணும். பிறகு எங்களில் பாதியைக் கூட்டி, அந்த விடையில் பாதியை மீண்டும் கூட்டி ஒன்று சேர்த்தால் விடை வரும்'' என்றது. முனியனுக்குப் புரியவில்லை. எங்கே நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்!

– மா. மணி, பன்னிரண்டாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
செந்துரை, திண்டுக்கல் மாவட்டம்.

VIII கட்டத்தில் கலைந்துள்ள வார்த்தைகளை ஒழுங்குபடுத்தியபின் வட்டமிட்ட எழுத்து களை மட்டும் வரிசைப்படி சேர்த்தால் நமக்கு அவசியமான பொருள் ஒன்று கிடைக்கும்.

த்	பு	தா	டு	ண்		○				
ம்	ர	த்	ச	தி			○			
ஞ்	ர்	சா	வூ	த		○				
ச	ம்	ர	க	க்				○		
ச	த	ம்	ப்	கா						○

– ஆர். சுமதி, நாமகிரிப்பேட்டை.



I. 4 கொய்யாப் பழங்களை 3 துண்டு களாக வெட்டினால் 12 துண்டுகள் ஆகும். ஆளுக்கொன்று தர வேண்டும். மீதியுள்ள 3 பழங்களை ஒவ்வொன்றையும் 4 துண் டாக வெட்டி பன்னிரண்டு துண்டுகளை ஆளுக்கொன்றாகத் தர வேண்டும்.

II. 3x3 = 9
9x4 = 36
36/12 = 3

IV. பேப்பர் பேனாவைத் தேட வேண்டாம்! 10989ஐத் திருப்பிப் போடுங்கள். 98901 – இதுதான் விடை.

V.

மயில்கள்	44 X 2	88
முயல்கள்	28 X 4	112
		200

VI. கடைசிக் காசைத் தட்டுடன் கொடுத்து விட வேண்டும்.

VII. மொத்தம் 36 கிளிகள்

இரண்டுமுறை கூட்ட 36 . 36 =	72
மொத்தத்தில் பாதியைக் கழிக்க 36/2 =	18
பாதியில் பாதியை எழுத =	9
ஒன்று சேர்க்க =	1
	100

VIII.

(பு)	த்	தா	ண்	(டு)
ச	(த்)	தி	ர	ம்
(த)	ஞ்	சா	வூ	ர்
ச	க்	(க)	ர	ம்
ச	கா	ப்	த	(ம்)

புத்தாண்டு
சத்திரம்
தஞ்சாவூர்
சக்கரம்
சகாப்தம்

புத்தகம்

தீய நண்பர்களுடன் சேராதே!

லால் பகதூர் சாஸ்திரி தொடக்கப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடச் சென்றார். நண்பர்கள் எல்லாரும் அருகில் இருந்த பழத் தோட்டத்திற்குள் நுழைந்தனர். பழங்களைத் திருடித் தின்றனர்.

ஆனால் லால் பகதூர் பழங்களைப் பறித்துச் சாப்பிடவில்லை. அருகில் இருந்த மலர்ச் செடியிலிருந்து அழகிய மலர் ஒன்றைப் பறித்தார். அதன் அழகை ரசித்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் தோட்டக்காரன் தோட்டத்திற்குள் வந்து கொண்டிருந்தான். சிறுவர்கள் தோட்டக்காரனைக் கண்டு, மரத்திலிருந்து கீழே குதித்து ஓடி மறைந்தனர். தோட்டக்காரன் வந்ததையோ, மற்ற சிறுவர்கள் ஓடியதையோ சாஸ்திரி கவனிக்கவில்லை. தோட்டத்தின் அழகையும் பூவின் அழகையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார்.

தோட்டக்காரன் ஓடி வந்து, நின்று கொண்டிருந்த சாஸ்திரியைப் பிடித்துக் கொண்டான். சாஸ்திரி நிமிர்ந்து பார்த்தார். தோட்டக்காரன் பிடியில் இருப்பதையும் நண்பர்கள் ஓடிவிட்டதையும் உணர்ந்தார். அவருடைய உடல் நடுங்கியது. பயத்தால் வேர்த்துக் கொட்டியது. அச்சத்துடன் தோட்டக்காரனைப் பார்த்து, ''ஐயா நான் தெரியாமல் செய்து விட்டேன். என் தவறை மன்னித்து விடுங்கள். இனி ஒருபோதும் தவறு செய்ய மாட்டேன்'' என்று பணிவோடு கூறினார்.

இதைக் கேட்டுத் தோட்டக்காரனின் உள்ளம் இளகியது. சாஸ்திரிக்கு ஒரு தீங்கும் செய்யாமல் அனுப்பி வைத்தான்.

சாஸ்திரிக்கு தோட்டக்காரனின் அறிவுரை நன்னெறியை ஊட்டியது. அன்று முதல் தீய நண்பர்களுடன் பழகுவதை விடுத்தார். நல்ல நெறிகளைக் கடைப்பிடித்தார்.



நீலநிறம் ஏன்?

ஒருமுறை சுவாமி விவேகானந்தர்

சென்னைக்கு வந்திருந்தார். அவர் இராஜகோபாலன் தங்கியிருந்த விடுதியிலேயே தங்கியிருந்தார். ஒருநாள் விவேகானந்தர் அங்கு தங்கியிருந்த மாணவர்களின் அறைகளுக்கு வருகை புரிந்தார்.

அப்போது ராஜகோபாலன் தங்கியிருந்த அறைக்கும் சென்றார். சுவாமி விவேகானந்தரை அவர் அன்போடும் பணிவோடும் வரவேற்றார். அவரது அறையின் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கண்ணபிரானின் திருவுருவப் படத்தைக் காட்டி, "கண்ணன் வண்ணம் ஏன் நீலநிறமாக இருக்கின்றது? அதற்கு உன்னால் காரணம் கூற முடியுமா?" என்று ராஜகோபாலனைக் கேட்டார் விவேகானந்தர். உடனே, "வானமும் கடலும் எல்லையற்றவை. அவற்றின் நிறம் நீலம். கண்ணனும் எல்லையற்றவன். எங்கும் என்றும் எல்லாமுமாய் இருப்பவன். அதனால்தான் கண்ணனை நீல வண்ணமாக உருவாக்கி இருக்கிறார்கள்" என்றார்.

விவேகானந்தர் அந்த விளக்கம் கேட்டு வியந்தார். ராஜகோபாலனின் அறிவுக் கூர்மையைப் புகழ்ந்தார். "இந்த இளைஞர் எதிர்காலத்தில் மிகவும் சிறந்து விளங்குவார்" என்று வாழ்த்தி அறையை விட்டுச் சென்றார். பி.எல். படிப்பில் தேர்வு பெற்று வழக்கறிஞர் ஆனார் ராஜகோபாலன் என்ற மூதறிஞர் ராஜாஜி.

ஆதாரம் : தியாகப் பொன்மலர்கள் என்ற நூல்
தகவல் : மிட்டூர் க. கண்ணகி



கூனாதே, குழையாதே!

தங்கப்பெருமாள் பிள்ளை என்பவர் அவரது ஊரிலே ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து பாரதியாரைப் பேசவும் அழைத்திருந்தார். விடிகாலை ரயிலில் பாரதி வருகிறார் என்று மாலையும் கையுமாக பாரதியை வரவேற்க பல இளைஞர்கள் ரயிலடிக்குச் சென்றார்கள். பெட்டி பெட்டியாகத் தேடியும் பாரதியார் கிடைக்கவில்லை.

உடனே பிள்ளையவர்களிடம் சென்று இளைஞர்கள், "ஐயா! வண்டியிலே தேடினோம் பாரதி வரவில்லை" என்றார்கள்.

பெருமாள்பிள்ளை சிரித்தார். அவர் பின்னாலிருந்து குரல் எழுந்தது. "யாரடா வரவில்லை. பாரடா பாரதியை. வண்டி வந்தது; போனது; பாரதி வந்தான்; இருக்கிறான்" என்று கர்ஜித்தார்.

பயந்து நடுங்கினார்கள் இளைஞர்கள். உடம்பெல்லாம் கூனிக்குறுகி, கும்பிடு போட்டார்கள்.

கண்டார் பாரதி; தீப்பொறி பறக்க விழித்தார். "அடேய்! கூனாதே! குழையாதே. கும்பிடு போடாதே! கும்பிடு போட்டுப் போட்டுக் குட்டிச்சுவராய்ப் போனது போதும். நிமிர்ந்து நில்!" என்றார்.

ரயிலிலிருந்து இறங்கிய இந்த முண்டாசுப் பேர்வழியைப் பாரதி என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. கவிராயர் என்பதற்கேற்ப மகரகண்டியும் பட்டுப் பீதாம்பரமுமாக இருப்பார் பாரதி என்று கருதி ஏமாந்து விட்டார்கள்.

முறுக்கு மீசை முண்டணிந்த கவிஞர் அவர்கள் கண்களுக்கு கவிஞராகத் தோன்றாததில் வியப்பில்லை.

ஆதாரம் : **பாரதி விழாவில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
தகவல் : **டி.எஸ். பாலு, சென்னை.**

விடுகதைப் பக்கம்



III

1. சுத்திச் சுத்தி வருவாள்;
ஓரத்தில் ஒதுங்கி இருப்பாள் - அவள் யார்?
2. ஈரேழு பதினாலு குழி
இது தச்சனார் செய்த குழி
தேடி எடுத்தவர்களுக்கு
வைரத்தின் முத்துகள் - அது என்ன?
3. நீந்தத் தெரியும் மீனல்ல;
நடக்கத் தெரியும் மனிதனல்ல;
இறக்கையுண்டு தேனியல்ல;
இறகுகொண்டு பறக்காது. - அது என்ன?

- சிவ. நந்தினி, மேலகரம், தென்காசி.

IV

1. ஏழு ஊரைச் சுமப்பான்; வீதிக்குள் வர மாட்டான் – அவன் யார்?
2. வாயில்லாதவனுக்கு உடம்பெல்லாம் பல் – அது என்ன?
3. தீப்பட்டால் சிவப்பக்காள்; நீர் பட்டால் கறுப்பக்காள் – அது என்ன?

– துரைமுருகன், காரமடை.

நூற்கும் ராட்டையல்ல; நெய்யும் தறியும் அல்ல-அது என்ன?

I

1. பூத்தபோது மஞ்சள், காய்ந்தபோது சிவப்பு,பழுத்தபோது கறுப்பு-அது என்ன?
2. நூல் நூற்கும் ராட்டையல்ல நெய்யும் தறியும் அல்ல – அது என்ன?
3. வாலுள்ளவன்; காற்றுக்குப் பறப்பான். – அவன் யார்?
4. வாழ்நாள் முழுக்க வாயைத் திறந்தபடியே இருப்பான் – அவன் யார்?
5. உயிரில்லா மனிதன் தொட்டாலும் விட்டாலும் பிடிக்கிறான் – அது என்ன?

– தி. சே. அறிவழகன், திருப்புலிவனம், உத்திரமேரூர் – 603 406.

II

1. பட்டப் பகல் கடல் கொள்ளையன்; உடல் குளிர்ந்தால் ஊரெல்லாம் நீர் தெளிப்பான் – அவன் யார்?
2. வெளியில் போகும் போது நண்பன் வீட்டுக்குள் வந்தால் விரோதி – அவன் யார்?
3. காது போனால் வாழ்வு போகும் – அது என்ன?
4. தலையைச் சீவச் சீவ தம்பி சிறிதாகிக் கொண்டே போகிறான் – அவன் யார்?

– சு. துர்கா காத்யாயனி, எட்டாம் வகுப்பு 'அ' பிரிவு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

V

1. உருவமில்லாதவன். உலகமெல்லாம் சுற்றுவான் விசா இல்லாமல். – அவன் யார்?
2. இரவில் வைக்கும் பொட்டு, பகல் வந்தால் சென்றுவிடும் நெத்தியை விட்டு – அது என்ன?
3. உடலில் கை இல்லை. ஆனால் முகத்தில் உண்டு – அவன் யார்?
4. இவனால் எல்லாவற்றையும் பார்க்க முடியும். இவனை மட்டும் இவனால் பார்க்க முடியாது – அவன் யார்?
5. தொட்டால் வெட்கப்படுவாள். ஆனால் பெண் இல்லை. – அவள் யார்?

– பாரதி செல்வம், சென்னை – 93.

விடைகள் :

I 1. ஈச்சம்பழம், 2. சிலந்தி, 3. பட்டம், 4. தபால் பெட்டி, 5. மின்சாரம்.

II 1. மேகம், 2. செருப்பு, 3. வாளி, 4. பென்சில்.

III 1. ஆட்டுரல் – குழவி, 2. பல்லாங்குழி, 3. வாத்து.

IV 1. புகைவண்டி (ரயில்), 2. சீப்பு, 3. விறகு, அடுப்புக் கரி

V 1. காற்று, 2. நிலா, 3. யானை, 4. கண், 5. தொட்டாச்சிணுங்கி செடி.



மாங்கனி நகரம்!


எங்கள் ஊர் சேலம். சேலம் என்றதும் நமக்கு நினைவிற்கு வருவது மாம்பழம். இங்கே ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் அதிக அளவில் மாம்பழங்கள் விளைகின்றன. சேலத்திலிருந்து வேறு இடங்களுக்கு மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சேலத்தில் ராஜகணபதி கோயில், ஈசுவரன் கோயில் மற்றும் கோட்டை மாரியம்மன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயில்கள் ஆகும். கல்கி அவர்கள் எழுதிய பொய் மான் கரடு எங்கள் ஊரின் அருகில்தான் உள்ளது. இங்கே மாரியம்மன் பண்டிகை மிகவும் விமரிசையாக நடைபெறும். சேலத்தின் அருகே கந்தாஸரமம் உள்ளது. அங்கு உள்ள முருகன் சிலை மிகவும் அழகாக இருக்கும்.

சேலத்தின் அருகே ஏற்காடு மலையும் உள்ளது. ஏற்காடு மலை ஒரு புகழ்பெற்ற சுற்றுலாத் தலம்.' ஏற்காடு மலையில் கண்ணாடி மாளிகை, தாவரவியல் பூங்கா, ஏரி போன்ற கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் இடங்கள் உள்ளன.

சேலத்தில் ஒரு உருக்காலையும் உண்டு. இங்கு தயாரிக்கப்படும் எவர்சில்வர் பாத்திரங்கள் உலகத் தரம்வாய்ந்தவை. இங்கே ஒரு மருத்துவக் கல்லூரியும் சட்டக் கல்லூரியும் உண்டு. சேலத்தில் கைத்தறி நெசவு மிகவும் முக்கியமான தொழிலாகும். சேலத்திற்கு மாங்கனி நகரம் என்ற மறு பெயரும் உண்டு. சுதந்தரப் போராட்ட வீரர் மற்றும் காங்கிரஸ் தலைவர் திரு. விஜயராகவச்சாரியார் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். எங்கள் ஊருக்கு வந்து பல கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் இடங்களைக் கண்டு மகிழுங்கள்! ருசியான மாம்பழத்தையும் சுவைத்துப் பாருங்கள்!

– எஸ். அபர்ணா, ஆறாம் வகுப்பு 'ஆ' பிரிவு, புனித தூதர் மேல்நிலைப் பள்ளி, சேலம்.

எங்கள் ஊருக்கு வாருங்கள்!



ஒவ்வொரு வரியும் கவிதை!

✉ கும்பகோணத்திலிருந்து எம். ராதாமணி "அலியின் தங்க நாணயங்கள் படக்கதையில் படம், வண்ணம், கதை மூன்றும் அருமையாக இருந்தன. பல வகைச் சிலந்திகளின் அணிவகுப்பு கண்களைக் கவர்ந்தன" என்கிறார்.

✉ "ஒரு சராசரி கிராமத்து மாணவருக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் படிக்கும்போது பிரமிப்பு ஏற்பட்டது. அவர் சொல்லிய ஒவ்வொரு வரியும் கவிதை. ஆர்வமும் உழைப்பும் இருந்தால் எவ்வளவு உயர்ந்த இடத்தையும் எட்டலாம் என்பதை உணர்த்தியது வைரமுத்து அவர்களின் குழந்தைப் பருவ அனுபவங்கள்" என்கிறார் உசிலம்பட்டியிலிருந்து **கே.என். ரவீந்திரன்.**

✉ தேனியிலிருந்து **முருகேசன்** "நூலகத்தின் மூலம் தான் வளர்ந்த விதத்தை அற்புதமாகக் கூறி இன்றைய மாணவர்களுக்குப் பயன் உள்ளதாக ஆக்கியிருக்கிறார் வைரமுத்து. வைரமுத்துவின் குழந்தைப் பருவ அனுபவங்களைப் படித்ததும் என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. காரணம், நான் படித்த தாமரைக்குளம் பள்ளியில்தான் அவரும் படித்திருக்கிறார் என்பதே" என்கிறார்.

✉ "இன்று பல மேடைகளில் அருமையாகப் பேசும் வைரமுத்து அவர்கள் ஆரம்பத்தில் பேசும்போது ஏற்பட்ட கஷ்டங்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்படக் கூடியதே. பிரபலமானவர்களின் குழந்தைப் பருவ அனுபவங்கள் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றன" என்கிறார் பாண்டிச்சேரியிலிருந்து **சி. ஜெயந்தி.**

✉ மதுராந்தகத்திலிருந்து **எஸ். பாஸ்கரன்** "நகம் கடிப்பதில் சிறந்தவன் கதை மிகவும் நகைச்சுவையாக இருந்தாலும் இனி யாரும் நகம் கடிக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். ஒலிம்பிக்ஸின் வரலாற்றை சுருக்கமாகவும் வண்ணப் புகைப்படங்களுடனும் தந்திருப்பதற்குப் பாராட்டுகள்" என்கிறார்.

✉ கனவில் உருவங்கள் வருவது ஏன்?, கண்களை மூடித் தூங்குவது ஏன்? போன்று நமக்கு எழும் சராசரி சந்தேகங்களுக்கு ஏன், எப்படி? என்ற பகுதியில் விளக்கம் கொடுத்திருப்பது நன்று. இது போன்ற விஷயங்களை அதிகம் எதிர்பார்க்கிறோம்" என்கிறார் கோவையிலிருந்து **பி. தங்கமணி.**

✉ அருப்புக்கோட்டையிலிருந்து **என். கலாஸ்ரீ** "ஆளப்பிறந்தவன் புதிய படக்கதை ரொம்பவும் விறுவிறுப்பாக உள்ளது. மோகன் யார்? அவனை ஏன் கடத்துகிறார்கள்? என்று பல கேள்விகள் மண்டையைக் குடைந்துகொண்டிருக்கின்றன" என்கிறார்.

✉ "ஆழியின் பிராணிகளுக்கு இப்படி ஓர் அறிவு என்ற அறிவியல் படக்கதையைப் படிக்கும்போது வியப்பேற்பட்டது. அட்டையில் வந்த கிருஷ்ணர் நன்றாக இருக்கிறார். மற்ற கிருஷ்ணர்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்" என்கிறார் திருப்பத்தூரிலிருந்து **வி. மகேஸ்வரன்.**

கோட்டைப்பட்டியில் அமைந்திருக்கும் கோகுலம் சிறுவர் சங்கத்திலிருந்து பன்னிரண்டு பக்க கையெழுத்து பத்திரிகை ஒன்று கோகுலத்திற்கு வந்தது. படக்கதை, கதை, ஆறு வித்தியாசங்கள், செய்து பார் என பல விஷயங்கள் இதில் இடம் பெற்றிருந்தன. இதில் பல மாணவர்களின் பங்களிப்பு உள்ளது. நன்றாக இருந்தது. தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். கோகுலத்துக்கும் எழுதுங்கள். சிறுவர் சங்கத்தினருக்கும் இதழ் தயாரித்தவர்களுக்கும் எங்களின் பாராட்டுகள்!

— ஆர்


சுண்டெலி வரையுங்கள்!

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எண்ணும் எழுத்தும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் சுண்டெலி கிடைத்துவிடும்.

உடல்: E18→ M10→ Q12→ T15→ T18→E18

காது: J15→L13→N14→M16→L15

வால்: T18→V16→ V13 →P8→ U7→W6



நன்றி: லிட்டில் ஆர்க்

2 ஆளப்பிறந்தவன்!

கதை: ராஜி படம்: லலிதா





நண்பர்களின் பேச்சைக் கேட்ட குப்பன்–
ஹா... ஹா... மோகன் இருக்கும் இடத்தை உங்களால் கண்டு பிடிக்கவே முடியாது. அவன் இனி வர மாட்டான்.
மோகனின் நண்பர்கள் குப்பனின் பேச்சினால் மனம் தளரவில்லை. உயிர்த் தோழனைத் தேடிக் கிளம்பினர். நீண்ட பயணத்துக்குப் பின் –
சோமு! அதோ அந்தக் கோட்டையில் ஒருவேளை மோகன் சிறை வைக்கப்பட்டிருக்கலாம்.
அருகில் சென்று பார்ப்போம். விரைவாக வாருங்கள்.


கட்டுக்காவல் பலமாக இருக்கிறது. ஒருவேளை மோகன் அங்கிருந்தால் எப்படி நம் வருகையைத் தெரிவிப்பது?
எனக்கு ஒரு யோசனை... விளையாடும்போது பாடுவோமே, அந்தப் பாட்டைப் பாடலாம்!
நிச்சயம். இந்தப் பாட்டு உதவும்.
பாடிக் கொண்டிருக்கும்போது –
அதோ பாருங்கள். உப்பரிகையின் ஜன்னலில் ஒரு உருவம். யார் அது?
நண்பர்களின் முயற்சி பலன் தந்தது. தன் தோழர்களைக் கண்ட மோகன் உற்சாகத்துடன் கையசைத்தான்.


இந்த அம்பில் கயிறு கட்டி உப்பரிகையை நோக்கிக் குறி வைக்கலாம்.
கயிற்றுடன் கூடிய அம்பு மோகனை நோக்கி வந்தது.
ம்... சரியா அம்பு எய்து என் கைக்குக் கிடைக்கும்படி செய்துட்டாங்களே!
அம்புடன் வந்த கயிற்றின் ஒரு முனையை மோகன் ஜன்னலில் கட்ட, மறுமுனையை...
ஏய்... நல்லா கட்டுடா... அங்கேயிருந்து மோகன், கயிற்றில் தொங் கிக்கிட்டு வரணும்.
அதோ மோகன் தப்பிச் சென்று கொண்டிருக்கிறான். பிடியுங்கள்!
(தொடரும்)

அழகன்,



5. ஃபைல் காணவில்லை!

குமரன் பின் தொடர, உற்சாகமாக மலை ஏறத் தொடங்கினான் செந்தில். வழியில் ஆட்டிடையர் எவரும் தென்படவில்லை. இன்று இந்த மலை தன்னுடையது என்று சந்தோஷ மிதப்புடன் நினைத்தான். இன்று என்ன? இந்த மலை என்றும்... என்றுமே தன்னுடையதுதான்!

'இல்லை செந்தில்!' என்று அவனுள் இன்னொரு குரல் எழுந்தது. இப்போது இந்த மலைக்குச் சில சதிகாரர்களும் வருகிறார்கள். மலை உச்சியில் உரிமையுடன் கத்தியை மறைக்கிறார்கள். சுருட்டுப் பிடிக்கிறார்கள். ஏதோ சதித் திட்டமுடன் கூடிப் பேசுகிறார்கள். சடுதியில் மறைந்தும் விடுகிறார்கள்!

யார் அவர்கள்? என்ன அவர்கள் நோக்கம்? எப்படி அவர்களைக் கண்டு பிடிப்பது? எப்படி சதியை முறியடிப்பது? நல்லவேளையாக பள்ளியில் பரீட்சை எதுவும் சமீபத்தில் இல்லை. செந்தில் சுதந்திரமாகச் செயல்படலாம்.

சரி. கண்டுபிடித்ததும், சிறுவனாகிய தன்னால் என்ன செய்ய முடியும்? அந்தக் கவலை அப்புறம். முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

மலை உச்சி. உஷ்ணமில்லாத வெய்யில். மென்மையான காற்று. எத்தனை வகைப் பூக்கள்! எத்தனை நிறங்கள்! இயற்கைக்கு ஈடு எதுவுமே, என்றுமே இல்லை. செந்தில் பரவசமுடன் பார்த்தான்.

ஐந்து நிமிடம் கூடச் சென்றிருக்காது. துல்லியமாக அவனுக்கு அந்த ஒலி கேட்டது! சருகுகள் மிதி பட, எவரோ நடமாடும் ஓசை! ஏறக்குறைய அந்தப் பொந்து இருக்கும் இடத்திலிருந்து வருவது போல்தான் அவனுக்குத் தோன்றியது.

விடைத்துக் கொண்ட காதுடன், குமரனும் அந்தத் திசையையே பார்த்துக் கொண்டிருந்தது. குமரன் 'வள்' என்று குரைக்கவும் –

செந்தில் பதட்டமானான். நண்பா! குரைத்துக் காரியத்தைக் கெடுத்து விடாதே! தன் உதட்டின் மீது விரல் வைத்து 'உஷ்' என்று எச்சரித்தான்.

உடனே குமரன் மௌனமாகியது! 'புரிந்து கொண்டேன்!' என்று தெரிவிக்க வாலையும் ஆட்டியது.

செந்தில் பூனை போல் பாதம் வைத்து நடந்தான். குமரனும் மெல்லப் பின் சென்றது.

பத்மா ரவிசங்கர்



செந்தில், குமரன்!

அந்தப் பொந்தின் அருகே ஒருவன் இருந்தான்! அவன் செந்திலுக்கு முதுகு காண்பித்தபடி, மலையின் மறுபுறத்தை வெறித்துக்கொண்டிருந்தான். மறுபுறமுள்ள காட்டினுள் இறங்கிச் செல்லப் போகிறானா? அல்லது அவ்வழியாக வரும் எவருக்கேனும் காத்திருக்கிறானோ?

செந்திலும் குமரனும் சற்றுத் தொலைவில் ஒரு அகன்ற மர மறைவிலிருந்து கொண்டு எட்டிப் பார்த்தனர்.

சில நிமிடங்கள் சென்றதும், அவன் மெல்லத் திரும்பினான்.

அவனுக்கு மாநிறம். தாடி வைத்திருந்ததையும் செந்தில் கவனித்தான். அடுத்து அவன் செய்த காரியம் செந்திலை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அவன் நிதானமாகத் தன் தாடியை முகத்திலிருந்துப் பிய்த்து எடுத்தான்! தாடையில் சொறிந்து கொண்டான். ஒட்டுத் தாடியைப் பிய்த்து எடுத்ததும் மிகவும் மாறுதல் அடைந்திருந்த அவன் முகத்தைச் செந்தில் உற்றுக் கவனித்தான். அவனை எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது. எதற்காக இந்த மாறு வேடம்? அவன் முகத்தை, செந்தில் தன் மனத்தில் நன்கு பதிய வைத்துக்கொண்டான்.

சிறிது நேரம், அவன் தீவிரமாக ஏதோ யோசிப்பவன் போலக் காணப்பட்டான். பிறகு, மறுபடி அந்தத் தாடியை முகத்தில் ஒட்டிக் கொண்டான்.

மலையின் மறுபுறம் இறங்கிச் செல்லத்

தொடங்கினான். செந்தில் அவனைப் பின் தொடர வேண்டாமென்று முடிவு செய்தான். ஆயுதம் உள்ள அவனிடம் மாட்டிக்கொள்வது புத்திசாலித்தனமல்ல.

தாடிக்காரன் சென்ற பிறகு, செந்தில் சுற்றிலும் தேடிப் பார்த்தான். புதிதாகத் தடயம் ஏதும் கிடைக்கவில்லை. அந்தப் பொந்தினுள் கத்தி இன்னமும் இருந்தது.



மறுநாள் வகுப்பில் ஓர் இட மாறுதல் நிகழ்ந்திருந்தது! அழகன், தற்சமயம் செந்திலின் பக்கத்து இருக்கைக்கு இடம் மாறியிருந்தான்.

''செந்தில்! ஏன் நேத்து வரலை?''

''அம்மாவுக்குக் கொஞ்சம் உடம்புக்கு முடியாமல் இருந்தது.''

"அட! இதுலயும் நமக்குள்ளே ஒற்றுமை பார்த்தியா? என் அம்மாவுக்கும் உடம்பு சரி இல்லைன்னுதான் அன்னிக்கு நான் லீவு!"

"உன் அம்மாவுக்கு என்ன, ஜுரமா?"

"இல்லை செந்தில்! வீசிங்! அடிக்கடி மூச்சுத் திணறல் வந்து கஷ்டப்படுவாங்க. அம்மாவோட இருக்கணும்னு தான் சென்னைல படிச்சிக்கிட்டிருந்த கான்வென்ட்டை விட்டுட்டு இங்கே வந்து படிக்க சேர்ந்தேன். உன் நட்பும் எனக்குக் கிடைச்சது!" என்று செந்திலின் கையைப் பற்றிக் கொண்டான்.

செந்தில் மிதமிஞ்சிய மகிழ்ச்சி வசமானான்.

மதியம் இருவரும் சேர்ந்து 'லஞ்ச்' சாப்பிட்டார்கள். அழகன் பாடங்களில் அவ்வப்போது சந்தேகங்கள் கேட்டான். செந்தில் விருப்பமுடன் விளக்கினான்.


மாலை வழக்கம் போல் அழகன் கூடைப்பந்து பயிற்சி செய்ய, செந்தில் மைதானம் ஓரம் அமர்ந்து ஹோம் ஓர்க் செய்துகொண்டிருந்தான்.

இருவரும் பேசியவாறே வீட்டிற்குக் கிளம்பினர்.

அழகனின் பங்களா மிக மிகப் பெரியதாக இருந்தது. முழுவதும் சுற்றிப் பார்க்கவே கால் வலிக்கும் என்று செந்தில் எண்ணினான்.

அழகனைப் போலவே, அவன் பெற்றோரும் விசால மனமுடையவர்களாக இருந்தனர்.

"வா செந்தில்!" என்று செந்திலைத் தன் அருகே அமர்த்திக்கொண்டார் சுந்தரம், அழகனின் அப்பா.



செந்தில் சொன்னான்.

சுந்தரம் மலர்ச்சியாக, "ஓ... தியாகராஜன்தான் உன் அப்பாவா?" என்றார்.

அப்போது போன் ஒலித்தது. எடுத்துப் பேசிவிட்டு சுந்தரம் செந்திலிடம், "ஓகே செந்தில். நான் கிளம்பறேன். ஃபாக்டரில ஒரு அவசர வேலை. உன்னைச் சந்திச்சதுல ரொம்ப சந்தோஷம். இனி இதுவும் உன் வீடுதான். எப்போ வேண்டுமானாலும் இங்கே வரலாம்."

விடை பெற்றுக்கொண்டு நடந்து செல்லும் சுந்தரத்தை நெகிழ்ச்சியுடன் பார்த்தான் செந்தில். அவரிடம்தான் எவ்வளவு பணம்! எவ்வளவு பெருந்தன்மை! எவ்வளவு எளிமை! ஊரிலேயே பெரும் பணக்காரர். இருந்தும் சிறிதும் செருக்கு இல்லை.

பணியாள் ஒரு ட்ரே கொண்டு வந்து வைத்தான். தட்டில் அல்வா; முந்திரி பக்கோடா; உயரமான டம்ளரில் க்ரேப் ஜூஸ்.

பார்வதி அன்புடன், "எடுத்துக்க செந்தில்!" என்றாள்.

"அழகன் எப்போதும் உன்னைப் பத்தியே சொல்லிக்கிட்டிருப்பான்! க்ளாஸ்ல நீதான் ஃபர்ஸ்டாமே?" என்றாள் அழகனின் அம்மா, பார்வதி.

"அன்னிக்கு அழகனுக்குச் சமயத்துல செய்த உதவிக்கு தேங்ஸ்!"

வெட்கத்துடன் நெளிந்த செந்திலையே பெருமிதத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான் அழகன்.

"செந்தில் உன் வீடு எங்கே இருக்கு? அப்பா பேரு என்ன? எங்கே வேலை செய்யறார்?"

காலை பாஸ்கர், அறிவியல் பாட வரை படங்களை வரைந்து பார்ப்பதும், சரியாக வராமல் பேப்பர்களைக் கசக்கித் தூக்கி எறிவதுமாக இருந்தான். "சட்! சனியன் பிடிச்ச டிராயிங்ஸ்!" என்று கோபமுடன் கத்தினான்.

அவன் அருகே வந்த அம்மா பூரணி "என்னடா பாஸ்கர்? என்ன உன் பிரச்னை?" என்று கனிவுடன் கேட்டாள்.

"இந்த டிராயிங்ஸ் எல்லாம் ரொம்ப கஷ்டமா இருக்கும்மா! எங்கே ஆரம்பிச்சு எப்படி வரையறதுன்னே தெரியலை. இன்னிக்கு க்ளாஸ்ல வரையச் சொல்வாங்க. நான் அவ்வளோதான்!" என்றவன் முகத்தில் டென்ஷன்; கவலை. செய்வதறியாது கைகளைப் பிசைந்து கொண்டான்.

அம்மா மௌனமாகச் சென்று அலமாரியிலிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து வந்து பாஸ்கரிடம் கொடுத்தாள்.

அந்தப் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்த பாஸ்கர் பிரமித்தான். அதில், அவன் பாட வரை படங்கள் எல்லாம் எளிய வழிமுறைகளுடன் வரையப்பட்டிருந்தன! ஒவ்வொரு படமும் பல பகுதிகளாகப் பகுக்கப்பட்டு புரியும்படி வரையப்பட்டிருந்தன.

"வரையறது இனி ஈஸியம்மா!" என்ற பாஸ்கரின் முகத்தில் பதட்டம் விலகி புன்சிரிப்பும் மலர்ந்திருந்தது. "யாரும்மா இதை வரைஞ்சது? நீயாம்மா?"

"இல்லைடா! உனக்காக செந்தில் வரைஞ்சு

வெச்சிருந்தான்!''

''இவ்வளவுமா?'' என்றான் வியப்புடன்.

வாசலில் செந்தில் படித்துக்கொண்டிருந்தான். ஏதோ சத்தம் கேட்கவும் திரும்பினான். பக்கத்தில் பாஸ்கர்! அவன் கையில் அந்த சைன்ஸ் நோட்டுப் புத்தகம்! இரண்டு இரவுகள் கண் விழித்து வரைந்தது... தம்பி என்ன செய்யப் போகிறான்? விசிறி முகத்தில் அடித்து விடுவானோ?

''தேங்ஸ் செந்தில்!''

சொன்ன பாஸ்கர் முகத்தில் முதன் முறையாக இறுக்கம் இல்லை. அலட்சியம் இல்லாததையும் செந்தில் கவனித்தான். தம்பியின் முகத்தில் அதிசயமாக லேசாகப் புன்னகையும் தவழ்ந்தது.

''தேங்ஸ் எல்லாம் சொல்லாதே பாஸ்கர்!'' என்று கூறிய செந்தில் மனசுக்குள் மகிழ்ச்சிப் பொங்கியது.

அடுத்து வந்த நான்கு நாட்களில், இரண்டுமுறை செந்தில், அழகன் வீட்டுக்குச் சென்று வந்தான். அதில் ஒரு விசிட், குமரனுடன்!

அழகனைத் தன் நண்பன் என்று குமரனுக்கு அறிமுகம் செய்து வைத்தான் செந்தில். உடன் புரிந்துகொண்ட குமரன் அழகனைத் துள்ளலுடன் சுற்றிச் சுற்றி வந்தது. அழகன் மகிழ்ச்சியுடன் நாயைத் தடவிக் கொடுத்தான். பின், உள்ளே சென்று கை நிறைய பிஸ்கட்டுகள் கொண்டுவந்து ஆசையுடன் குமரன் முன் வைத்தான்.

''இனிமே நாம் மூவரும் ரொம்ப க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ்!'' என்றான் அழகன் மிகுந்த சந்தோஷத்துடன்.

''அழகன், செந்தில், குமரன்!'' என்று செந்தில் உரக்க உற்சாகமாக உச்சரித்தான்.

அன்று புதன். மாலை ஆறு இருக்கும். அப்பா தியாகராஜன் அலுவலகத்திலிருந்து சீக்கிரமே வந்து விட்டிருந்தார். அறையில் அமர்ந்து அப்பா மும்முரமாக ஆபீஸ் வேலையில் ஈடுபட்டிருந்ததை செந்தில் கவனித்தான். அப்பா எதிரே ஒரு சிவப்பு ஃபைல், பக்கத்தில் கால்குலேட்டர், இறைந்திருந்த பேப்பர்கள். அவ்வப்போது குறிப்பெடுத்தார்; கணக்குகள் போட்டார்; அந்தச் சிவப்பு ஃபைலைப் புரட்டினார்.

ஏதோ முக்கிய அலுவல் போலும். அப்பா முகம் தீவிரமாக இருந்தது. ஒலி எழுப்பாமல், அந்த அறையிலிருந்து செந்தில் வெளியேறினான்.


வாசலுக்கு வந்தான். குமரன் சற்று மந்தமாக இருந்ததைக் கவனித்தான். வெளியே ஒரு 'வாக்' அழைத்துச் சென்றால் சரியாகிவிடும். சங்கிலியை அவிழ்த்து விட்டான்.

குமரனுடன், கால் போன போக்கில் ஊர் சுற்றினான். ஏறக்குறைய ஒரு மணி நேரம் கழிந்ததும் வீடு திரும்பினான்.

செந்தில் அதிர்ச்சியானான். வீடு ஒரே களேபரமாயிருந்தது. அப்பா பேயறைந்தவர் போல் காணப்பட்டார். கவலையுடன் அம்மா, காரணம் சொன்னாள்:

''அந்தச் சிவப்பு ஃபைலைக் காணவில்லையாம்!''

(தொடரும்)



ஓவியப் போட்டி

இந்தியாவின் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது ஆக்ராவில் உள்ள தாஜ்மஹால். உலகெங்கும் போற்றப்படுகிறது. ஷாஜகான் கட்டிய தாஜ்மஹால்தான் இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு. படம் நிச்சயமாக வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் ஆறுதல் பரிசுகள் இரண்டும் வழங்கப்படும். உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதுங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி **20.10.2000**

கோகுலம் க்விஸ்



1. நவீன ஒலிம்பிக்ஸின் தந்தை ________

2. கண்ணகி ________ மாநகரை எரித்தாள்.

3. ஈரமான இடங்களில் வளரும் ஆல்கா என்பது ஒரு வகையான ________

4. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ________

5. எக்ஸ்ரேயைக் கண்டுபிடித்தவர் ________

6. உலகிலுள்ள மலைத் தொடர்களில் மிகவும் நீளமானது ________ மலைத் தொடர்.

7. ஃபிரான்ஸின் தலைநகர் ________

8. வளையம் உடைய கோள் ________

9. இந்திய செஸ் போட்டியில் முதல் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற பெண் ________

10. இங்கிலாந்து பிரதமர் ________

மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குச் சரியான விடைகளைக் கண்டுபிடியுங்கள். விடைகளை எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். கடைசி தேதி *31.10.2000*

ஆசிரியர்,
கோகுலம்,
47. ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 97.



ஏன்? எப்படி?



ஆண்டிற்குப் பன்னிரண்டு மாதங்கள் ஏன்?

வேட்டையாடி நாடோடியாகக் குகையில் வசித்து வந்த ஆதி மனிதன் வகுத்தது இது எனலாம். அன்று அவன் வானில் கீற்று போல் தோன்றிய நிலா ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வட்டமாகி மீண்டும் தேய்ந்து மறைந்ததைக் கவனித்திருக்க வேண்டும். பின்னர் அவர்களில் சிலர் நிலாவின் போக்கைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தனர். ஒரு முதல் பிறை நிலாவிலிருந்து அடுத்த முதல் பிறை நிலா வரை ஒவ்வொரு நாள் இரவும் ஒரு எலும்புத் துண்டில் வடு குறியிட்டுக் குறித்து வந்திருக்கின்றனர். இவ்வாறு வடு குறியிட்ட எலும்புத் துண்டுகளை ஐரோப்பாவில் அறிவியலாளர்கள் கண்டெடுத்துள்ளனர். இந்த எலும்புத் துண்டுகள் ஏறக்குறைய 13,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

ஒரு குளிர்கால ஆரம்பத்திலிருந்து மறு குளிர்காலம் ஆரம்பிக்கும் வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் 12 முறை முதல் பிறை நிலா தோன்றுவதை அன்றைய வான் நோக்கர்கள் கண்டறிந்து கொண்டனர். இதைக் கொண்டு அவர்கள் ஆண்டுப் பிறப்பைக் கணிக்க ஆரம்பித்தனர். எழுதத் தெரிந்து கொண்டபின் நிலவை அடிப்படையாகக் கொண்டு பன்னிரண்டு பிரிவுகளுடன் காலண்டரை கணித்தனர். ஒரு ஆண்டில் 12 நிலாக்கள் என்ற கணக்கு சரியாக வரவில்லை. பாபிலோனியர்களும் எகிப்தியர்களும் அதிகப்படியான நாட்களை விடுப்பு நாட்கள் என்று ஒதுக்கி வைத்தனர்.

இன்றைய காலண்டர்களுக்கு, முதல் பிறை நிலாக்களைக் கொண்டு பிரிக்கப்பட்ட இந்தப் பன்னிரண்டு பிரிவுகளே மாதங்களாக அமைந்தன. நாமும் மாதத்தை 'திங்கள்' என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

வாரத்திற்கு ஏழு நாட்கள் வந்ததெப்படி?

முன்பு புத்தபிட்சுகள் மத சடங்குகளை ஏழு நாள் கொண்ட பிரிவாகப் பிரித்துக் கடைப் பிடித்தனர். இதுவும் நிலாவின் தோற்றத்தில் ஏற்படும் மாறுதல்களின் அடிப்படையில் எழுந்தது தான். முதல் நாளில் பிறை நிலா மெல்லிய கீற்றாகத் தோன்றி ஏழாவது நாள் அரை வட்ட நிலாவாக வளர்கிறது.

அடுத்த ஏழாவது நாளில் முழுவட்ட நிலாவாக உருவாகிறது. பின்னர் கொஞ்சங்கொஞ்சமாக தேய்ந்துக் கொண்டே வந்து ஏழாவது நாளில் மீண்டும் அரை

வட்ட நிலாவாகக் காட்சியளிக்கிறது. அதன்பின் படிப்படியாகத் தேய்ந்து கொண்டே வந்து அதற்கடுத்த ஏழாவது நாளில் மீண்டும் முதல் பிறை நிலாவாகத் தோற்றம் கொடுக்கிறது. ஒவ்வொரு ஏழாவது நாளும் அந்த மதத்தினர் ஓய்வெடுத்துக் கொண்டனர். அல்லது ஏதாவது ஒரு விழா கொண்டாடினர்.

படைப்புக் கதையோ கடவுள் இந்த உலகை ஆறு நாட்களில் படைத்துவிட்டு ஏழாவது நாளில் ஓய்வெடுத்துக் கொண் டார் என்று கூறுகிறது. கிருஸ்துவர்களும் யூதர்களும் இதற்குத் தகுந்தபடி தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டனர். சீனர்களோ முதலில் பத்துநாள் பிரிவுகளைக் கடைப்படித்தனர். விருந்து நாட்கள் என்று வகுக்கப்பட்ட நாட்களைத் தவிர ஓய்வு நாட்கள் என்று தனியாக அவர்கள் எந்த நாளையும் ஒதுக்கவில்லை. ஆப்பிரிக்காவிலும் தென்னமெரிக்காவிலும் வாழ்ந்த மக்கள் சந்தை கூடும் நாட்களை அடிப்படை யாகக் கொண்டு வாரங்களை வகுத்திருந் தனர். அவர்களது வாரங்கள் முறையே மூன்று நாட்கள், நான்கு நாட்கள் ஐந்து நாட்கள் கொண்டதாக இருந்தன. இன்று உலகமெங்கும் ஏழு நாட்கள் கொண்ட வாரமே கடைப்பிடிக்கப்படுகிறது.

— நாகூர் ஆர்.லோகநாதன்.

செங்கல்

கட்டடங்கள் கட்டப் பயன்படுத்தப் படும் செங்கற்களை மனிதன் சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே, உபயோகப் படுத்தியிருக்கிறான்.

செங்கற்கள் மண்ணிலிருந்து தயாரிக்கப் படுகின்றன என்பது உங்களுக்குத் தெரி யும். மண்ணும் ஒரு வகை கனிமம். பெரு மலைகள், வெடித்துச் சிதறி சிறு கூழாங் கற்களாகி, அவை குறு மணலாகி, குறு மணல்கள் மேலும் நசித்து மண் உரு வானது என்பதுதான் அறிவியல் வரலாறு. மண்ணோடு நீரைக் கலக்கும் போது அது சேறும் சகதியுமாக மாறுகிறது. அதே வேளை அதோடு தண்ணீரைக் கலக்காமல் அப்படியே உலர்நிலையிலிருக்கும்போது கெட்டியான நிலையினை அடைகிறது. இதே மண்ணை, சூடுபடுத்தும்போது, (சுமார் 450 சென்டிகிரேட் வெப்பத்தில்) இராசாயன மாற்றமடைந்து நீண்ட காலத் திற்கு, நிலைத்த கெட்டித் தன்மையைப் பெறுகிறது.

தண்ணீரோடு குழைத்த மண்ணை எந்த வகையில் வேண்டுமானாலும் வடிவமைக் கலாம். அப்படி வடிவமைக்கப்பட்ட மண்ணை சூடுபடுத்தும்போது சிவப்பு நிறமாக மாறுகிறது. 450 முதல் 535 சென்டிகிரேட் வெப்ப நிலையில் சூடு படுத்தும்போதுதான் செங்கற்கள் நல்ல சிவப்பு நிறமாக மாறிக் கண்ணைக் கவரும். அதற்கும் மேலே உஷ்ண நிலை அதிகரிக்குமேயானால் செங்கற்கள் கருமை நிறமாகிவிடும்.

செங்கற்களை உலகிற்கு அறிமுகப்படுத் தியவர்கள் எகிப்தியர்கள்தான்!

— ஈழம் மலர்மன்னன்,
இரும்புவயல்,
சிவகங்கை மாவட்டம்





* ஸ்ரீவாஸ்,
ஆதம்பாக்கம், சென்னை.



* ஆர். திவ்யா,
வழுவூர் அஞ்சல், நாகை மாவட்டம்.



* கே. ரம்யா,
டி.எம்.எஸ். புரம்,
திண்டுக்கல்.

* சி.வி. கௌதம்
கிருஷ்ணா,
சிதம்பரம்.





* ஜெ. பாலாஜி,
ரெட்டியூர்,
சேலம் மாவட்டம்.

கிருஷ்ணர் வேடப்போட்டி



* கே.எஸ்.எஸ். சக்கரவர்த்தி, கவுந்தப்பாடி, ஈரோடு மாவட்டம்.



* வி.விபுசிதா, எழும்பூர், சென்னை.




* பி.எஸ். நந்தினி, சேலம்.

ஆகஸ்ட் இதழில் கிருஷ்ணர் வேடப் போட்டியை அறிவித்திருந்தோம். அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட புகைப்படங்கள்.

திருப்தியற்ற

கந்தன் ஆடு மேய்த்து பிழைத்து வந்தார். அவருக்கு மூன்று மகன்கள். கந்தனுக்கு வயதாகிவிட்டதால் முன்பு போல் ஆட்டு மந்தையை மேய்த்து வர முடியவில்லை. மூத்த மகனை அழைத்தார். ''மகனே! இன்று முதல் நீதான் ஆடு மேய்த்து வர வேண்டும். ஆடு மேய்ப்பது என்பது சுலபமாகத் தோன்றலாம். ஆனால் நினைக்கிறபடி அவ்வளவு சுலபமல்ல. புல் உள்ள இடத்திற்கு ஓட்டிச் செல்ல வேண்டும். எப்போதும் ஆட்டு மந்தைக்கு அருகிலேயே காவலாக இருக்க வேண்டும். சற்று அசந்து மறந்தால் நரியோ, ஓநாயோ ஆட்டுக் குட்டிகளை இழுத்துச் சென்றுவிடும். இருட்டுவதற்குள் வீடு திரும்பிவிட வேண்டும். அடுத்தவர்கள் வயலில் புகுந்து மேய்ந்துவிடாமல் கவனமாக இருக்க வேண்டும்'' என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

அவனும் உற்சாகமாக ஆடுகளை ஓட்டிக் கொண்டு சென்றான். நன்கு மேய்த்து மாலை வீடு திரும்பினான். ஆடுகள் நன்றாக வயிறாற புல் மேய்ந்தனவா? தண்ணீர் குடித்ததா? எண்ணிக்கை சரியாக இருக்கிறதா என்று மகனிடம் கேட்டுவிட்டு ஆட்டு மந்தைகளின் தலைவனாக இருந்த தலைமை ஆட்டிடம், ''நீங்கள் நன்றாக புல் மேய்ந்தீர்களா? என் மகன் உங்களை நல்லபடியாக கவனித்துக்



ஆடு!

கொண்டானா?" என்று கேட்டார் கந்தன்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்? புல் இல்லாத இடத்தில் எங்களை மேய விட்டால் நாங்கள் எதை மேய்வது? அவன் பாட்டுக்கு மரத்தடியில் படுத்துத் தூங்கினான். நரிக்கும் ஓநாய்க்கும் எங்கே இரையாகி விடுவோமோ என்ற பயத்தில் நாங்கள் சரியாக மேயவில்லை. தூங்கி எழுந்ததும் புல்லாங்குழல் வாசிக்க ஆரம்பித்து விட்டான். பாட்டு என்ன பாட்டு, பாட்டுக் கேட்டால் வயிறு நிரம்புமா? ஆக இன்று நாங்கள் எல்லோரும் பட்டினிதான்'' என்றது தலைமை ஆடு.

கந்தனுக்கு மகன் மீது கோபம் வந்து விட்டது. "துப்புக் கெட்ட பயலே! ஆட்டைக்கூட சரியாக மேய்க்கத் தெரியாத நீ இருந்து என்ன பயன்? போ... என் கண் முன்னால் நிற்காதே, நீ எனக்கு மகனும் இல்லை. நான் உனக்குத் தந்தையும் இல்லை'' என்று அவனை வீட்டை விட்டுத் துரத்தியடித்தார்.

அடுத்த நாள் இரண்டாவது மகனை ஆடு மேய்க்க அனுப்பினார். அவனோ முதல் நாள் அண்ணனுக்கு நேர்ந்த கதியை மனதில் கொண்டு ஆட்டை நல்லபடியாக மேய்த்துத் திரும்பினான்.

''ஆடுகளே... இன்று உங்களுக்குத் திருப்திதானே? இவன் உங்களை நன்றாக கவனித்துக் கொண்டிருப்பானே?" என்று விசாரித்தார் கந்தன்.

"இவன் எங்களை கவனித்துக் கொண்டானா? எங்கள் பக்கமே திரும்பவில்லை. மரத்தில் மாங்காய் அடித்துத் தின்பதும் நாவல் பழம் பொறுக்கித் தின்பதுமாக அவனுக்கே நேரம் போதவில்லை. இவனை நினைத்தால் இவன் அண்ணனே பரவாயில்லை என்று தோன்றுகிறது'' என்றது ஆடு.

"வெட்டிப் பயலே... மாங்காய் பறித்துத் தின்னவும் நாவல் பழம் பொறுக்கித் தின்னவுமா உன்னை அனுப்பினேன். போடா உருப்படாத பயலே..." என்று அவனையும் வீட்டை விட்டுத்துரத்தி விட்டார் கந்தன்.

மூன்றாவது நாள் மூன்றாவது மகனை ஆடு மேய்க்க அனுப்பி வைத்தார். அவனும் இரண்டு அண்ணன்களுக்கு ஏற்பட்ட கதியை நினைத்து நன்றாக மேய்த்து வீடு திரும்பினான். கந்தன் ஆட்டைக் கேட்க ஆடு வழக்கம்போல் பல்லவி பாடியது.

''இவனைப் பார்த்தால் அவர்கள் இரண்டு பேருமே பரவாயில்லை. எங்கள் தலைவிதி'' என்று அலுத்துக் கொண்டது.

மூன்றாவது மகனையும் துரத்தினார். இனி பயல்களை நம்புவதில் பயனில்லை. நாமே தான் மேய்க்க வேண்டும் என்று நினைத்து கந்தனே ஆடுகளை ஓட்டிச் சென்று மேய்த்து வந்தார்.

''ஆடுகளே இன்று உங்களுக்குத் திருப்திதானே?" என்று கேட்டார் கந்தன்.

"என்ன திருப்தி? நீ எங்களைக் கவனித்துக் கொண்ட லட்சணத்தைப் பார்த்தால் உன் மகன்களே பரவாயில்லை என்றுதான் தோன்றுகிறது" என்றது ஆடு. கந்தனுக்கு ஒரே கோபம்.

"திருப்தியற்ற ஆடே! நான் நன்றாக மேய்த்தும் குறை சொல்கிறாய். உன் பேச்சைக் கேட்டு என் மகன்களைத் துரத்தியடித்து விட்டேனே" என்று ஆட்டின் மீது கோபித்து ஆட்டைத் தடியால் ஒரு போடு போட்டார்.

ஆட்டின் பொய்யான வார்த்தையை நம்பி மகன்களை இழந்து விட்டமைக்காக அழுது கொண்டிருந்தார் கந்தன்.

"அப்பா, நீங்கள் சொன்னபடி நாங்கள் ஊரை விட்டு ஓடிப் போகவில்லை. என்னதான் நடக்கிறது என்று பார்க்கலாம். உண்மை ஒருநாள் உங்களுக்குத் தெரிய வரும் என்பதால் இந்த ஊரில்தான் இருந்தோம். இப்போது உங்களுக்குப் புரிந்து விட்டது. இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்களே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறோம்" என்று மகன்கள் ஆறுதல் கூறினர்.

அடுத்த நாள் முதல் ஆடு வாயே திறப்பதில்லை. வாயைத் திறந்தால் பொய் தான் வருகிறது என்பதால் புல் மேயும் நேரம் தவிர மற்ற நேரங்களில் வாயை மூடிக் கொண்டது.

— என். ஜெகநாதன், பன்னிரண்டாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மேல் நிலைப் பள்ளி, சங்ககிரி.



கடலில் வாழும் மீன் இனங்களில் மிகப் பெரியது சுறா. காடுகளில் சிங்கம், புலி போன்ற விலங்குகள் பிற விலங்குகளைக் கொன்று தின்பது போல் கடலில்



சுறா மீன் பிற உயிர்களைப் பிடித்து தின்னும். ஸ்கேட், ரே போன்ற மீன்களின் எலும்புகள் குருத்தெலும்புகளால் ஆனவை. குருத்தெலும்பு என்பது மிகவும் மென்மையானது. நமது காதுகள் குருத்தெலும்புகளால் ஆனவைதான்! அதே போல் சுறாமீனின் எலும்புகளும் குருத்தெலும்புகளால் ஆனவை.

சுறா மீன்கள் நமக்கெல்லாம் ரொம்ப ரொம்ப சீனியர்கள். இவை 35 கோடி ஆண்டுகளாக பூமியில் வசித்து வருகின்றன. ஆரம்ப காலத்தில் இருந்த சுறாவுக்கும் இப்போதுள்ள சுறாவுக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. இன்றுள்ள சுறாக்களைப் போல் பல மடங்கு பெரிய சுறாக்கள் இருந்திருப்பதை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் படிமங்கள் மூலம் கண்டறிந்துள்ளனர்.

சுறாமீன்களுக்குச் சிறப்பான ஒரு சக்தி உண்டு என்றால் அது மோப்ப சக்திதான். கடலில் அடிபட்ட மீன்

மீன்களின்







சுறா!


எஸ். சுஜாதா

அல்லது பிராணிகளின் ரத்தம் கலந்தவுடன் பல மைல்களுக்கப்பால் இருந்தாலும் விரைவாக வந்து அந்தப் பிராணியை இரையாக்கிக் கொள்கின்றன. இவற்றின் உணர்திறனும் குறிப்பிடத்தக்கது. மீன்களின் அசைவினால் உண்டாகும் ஒலி அலைகளைக் கூட நுட்பமாக உணர்ந்து அந்த இடத்தை அடைந்து அவற்றை இரையாக்கிக் கொள்கின்றன.

மிகவும் சுறுசுறுப்பானவை இந்தச் சுறாமீன்கள். புதிய மாமிசத்தையும் ரத்தத்தையும் பெரிதும் விரும்புகின்றன. உடல் உருளையாக இருக்கும்.







தலையிலிருந்து வால்பக்கம் தடவினால் தோல் வழுவழுப்பாக இருக்கும். வாலிலிருந்து தலைப் பக்கம் தடவினால் சொர சொரப்பாக இருக்கும்.


பெரிய, சிறிய மீன்கள் கடல் பிராணிகள், இறந்த உயிரினங்கள் போன்றவையே சுறா மீன்களின் முக்கிய உணவு. சுறாக்களுக்குப் பசி வந்து விட்டால் எதிர்ப்படும் அனைத்து உயிரினங்களையும் பிடித்துத் தின்னும் இயல்புடையவை. சில வேளைகளில் தமது இனத்தையும் மனிதர்களையும் கூட சாப்பிடுவதுண்டு.


பற்கள் மிகவும் கூர்மையானவை. இரையைக் கடித்து விழுங்கும்போது பல் தேய்ந்து போனாலோ, விழுந்து விட்டாலோ அந்த இடத்தில் புதுப்பல் முளைத்துவிடும். இப்படி சுறாக்களுக்கு இறக்கும்வரை பற்கள் முளைத்துக் கொண்டே இருக்கின்றன. ஒரு சுறா தன் வாழ்நாளில் குறைந்த பட்சம் 20,000 பற்களை உபயோகித்து விடுகிறது.

சுறாமீன்களின் உடலோடு பைலட் மற்றும் சிமோரா மீன்கள் ஒட்டிக் கொண்டிருக்கும். இந்த மீன்களை மட்டும் சுறா கண்டுகொள்ளாது. ஏனென்றால் சுறாவின் பற்களையும் செதில்களையும் இவை சுத்தப்படுத்துகின்றன.

எல்லா உயிரினங்களுக்கும் இருக்கும் பாதுகாப்பு உணர்வு சுறாக்களுக்கும் உண்டு. தங்களை வேட்டையாட வருவதை அறிந்தவுடன் மிகவும் கோபம் கொள்கின்றன. எதிரே வருபவர்களைத் தாக்க ஆரம்பிக்கின்றன. எனவே அடிபட்ட சுறாமீனின் ரத்தம் நீரில் கலந்தவுடன் மீனவர்கள் மீன் பிடிப்பதை நிறுத்தி விட்டுத் திரும்பி விடுகின்றனர். இல்லையென்றால் ரத்தவாடை தேடி வரும் சுறாக்களின் பிடியில் சிக்க வேண்டியிருக்கும்.

சுறாமீன்களுக்குப் பார்வை மந்தம். வெளிச்சமான நேரத்தில் பார்வை சரியாகத் தெரியாது. மாலை நேரங்களில் நன்றாகத் தெரியும்.





சுறாமீனின் முட்டைகள் ஒரு பை போன்ற அமைப்பில் இருக்கின்றன. சுறா மீனின் முட்டைகள் அந்தப் பையில் பாதுகாப்பாக வளர்கின்றன. சுமார் பத்து மாதங்களில் சுறா குட்டிகள் வெளியே வருகின்றன. சில சுறாக்கள் குட்டிகளாகவே ஈனுவதும் உண்டு. குட்டிகளைத் தாய் கவனிக்காது.

சுறாவின் பற்களில் மாலைகள்; தோலில் செருப்புகள், பணப்பை; ஈரல் கொழுப்பிலிருந்து எண்ணெய்; இறைச்சி என சுறாவின் அனைத்து உறுப்புகளும் பயன்படுகின்றன. இந்தப் பயன்பாட்

டாலேயே இவை அதிகமாக வேட்டையாடப்பட்டு வருகின்றன. 'அரி' என்ற ஒரு வகை சுறா இனம் இன்று காணாமலே போய்விட்டது.

சுறா ஓர் குளிர் ரத்தப் பிராணி. இதில் 300 வகைகள் உள்ளன. 30 வகைகளே மனிதர்களைத் தாக்கக் கூடியவை.

இவற்றால் மாதக் கணக்கில் பட்டினி கிடக்க முடியும். உடம்பு இளைக்காது. ஈரலில் சேமித்து வைக்கப்பட்டுள்ள கொழுப்பும் எண்ணெய்யும் உயிரைப் பாதுகாத்து விடும். ஆழமான பகுதிகளில் வசிக்கக் கூடியவை. 4000 மீட்டர் ஆழத்தில் கூட சுறாக்கள் இருக்கின்றன.

பரவலாகக் காணப்படும் சுறா வெண் சுறா (Great white shark). இதன் நீளம் 5 மீட்டர். கார்ச்சாரடன் (carcharadon) என்ற சுறா மீன் மனிதனைப் பிடித்துத் தின்னும் இயல்புடையது. வாய் அகன்று உளி போன்ற பற்களுடன் காணப்படும்.


ரைனொடான் சுறா (Rhineodon) மிகப் பெரியது. 30 அடிக்குக் குறையாமலிருக்கும். இதன் உணவோ மிகச் சிறிய மிதவை உயிர்களும் சிறிய மீன்களும்தான்!

ஸ்டிகோஸ்டோமா (stegostoma) என்ற புலிச் சுறா, புலியைப் போன்ற வண்ணக் கோடுகளைப் பெற்றுள்ளது.

சுத்திச் சுறா (Hammerhead) என்று அழைக்கப்படும் கொம்பன் சுறாவின் தலை சுத்தியலைப் போன்று தோற்றம் அளிக்கும். இது திருக்கை மீன்களைப் பிடித்துத் தின்னும்.

லாப்டன் என்ற சுறா மீன்தான் உலகிலேயே மிகச் சிறிய சுறாமீன் ஆகும். இதன் உடலின் நீளம் சுமார் 20செ.மீ. மட்டும்தான்!

மீன்களிலேயே வலிமைவாய்ந்த இந்த முரட்டுச் சுறாக்கள் மட்டும் இல்லையென்றால் கடல் சாதாரண மீன்களால் நிறைந்து விடும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.



முக்கண் முனிவர்!

ஒற்றைக் காலை ஊன்றி மண்ணில்
உயர்ந்து நிற்கும் அன்னை
பெற்றுப் பேணி வளர்த்த பிள்ளை
பிறர்க்க ளிப்பார் தன்னை!

பற்றி நாமும் தலையைச் சீவின்
பருகு தற்குப் பானம்
வற்றி நாவும் வறளும் போது
வழங்கி டுவார் தானம்!


சுற்றம் சூழப் பந்தி, பழம்,
சுகந்த பாக்கு, முல்லை
வெற்றி லையோ டிவரில் லாது
விழாக்கள் ஏதும் இல்லை!

வெற்று வேடக் காவி ஆடை
வெண்ணி றேந்தார் புனிதர்!
முற்றும் சவுரி முடிக்குள் மூடும்
முக்கண் 'தேங்காய்' முனிவர்!

— **தளவை இளங்குமரன்**


காலுவின் கால்!

வேணுவாரியத்





உடனே கந்தன் ஆற்றில் குதித்துக் காலுவைக் காப்பாற்றினார்.
விழுந்தியா, உனக்கு நல்லா வேணும்.
ஆற்றில் குதித்ததால் காலுவின் காலில் காயம் ஏற்பட்டது.
இந்தக் கால் உடைந்த கழுதையால் ஒரு பிரயோஜனமும் இல்லை.
கந்தன் கழுதையை விட்டு விட்டு வீட்டை நோக்கி நடந்தார்.
இனிமேல் வேலை எதுவும் செய்ய வேண்டாம். அவரைப் பழிவாங்கியாச்சு. ஆ... ஐயோ... எப்படி நடப்பேன்? சாப்பிடுவேன்...?
email:saifea



இனிக்கு ஒருதலை எப்போது?



சென்டிமெண்ட்?


அன்று விடுமுறை. எல்லோரும் ஸ்வீட், காரம் சாப்பிட்டபடி டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தோம். என் அண்ணன் தங்கையை எப்பொழுதும் சீண்டிக் கொண்டே இருப்பான். அப்பொழுதும் தங்கையின் ஸ்வீட், காரங்களை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தான். என் தங்கைக்கு ஆத்திரமாக வந்தது. ஆனாலும் அதை வெளிக் காட்டாமல் "இந்தப் பண்டங்களை நான் சாப்பிட்டால் என்ன, என் அருமை அண்ணன் சாப்பிட்டால் என்ன?'' என்றாள். அவளைப் பார்த்து இரக்கப்பட்ட அண்ணன் தட்டை அவளிடமே கொடுத்து விட்டு நகர்ந்தான். தங்கை எங்களிடம் "இந்த சென்டிமெண்ட் சூப்பரா வேலை செய்யுதே!" என்றாள் மகிழ்ச்சி பொங்க. "அப்படியா! மறுபடியும் எடுக்கட்டுமா?" என்று அண்ணன் குரல் கொடுக்க தங்கை அமைதியானாள். நாங்கள் சிரித்தோம்.

– இரா. வீ. மயில்வாகனன்,
பத்தாம் வகுப்பு,
டான்பாஸ்கோ உயர்நிலைப்பள்ளி,
மதுரை.

ஏன் வரவில்லை?


அன்று ஞாயிற்றுக்கிழமை. காலை ஏழு மணியாகியும் சூரியன் உதிக்காமல் மேக மூட்டமாக இருந்தது. என் சித்தப்பா வாசலில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். நான் அவரிடம் சென்று "இன்னிக்கு ஏன் இன்னும் சூரியன் வரலை?" என்று கேட்டேன். உடனே சித்தப்பா "நீ ஏன் ஏழு மணிக்குத் தூங்கி எழுந்தே?'' என்று கேட்டார். "இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமையாச்சே! அதனாலதான் லேட்டாக எழுந்தேன்" என்றேன். "அதுபோலதான் சூரியனும் லேட்டாகத்தான் வரும்" என்று கூற அருகிலிருந்தவர்கள் சிரித்துவிட்டனர்.

– ப. சௌந்தர்யா,
ஐந்தாம் வகுப்பு,
பிரின்ஸ் மெட்ரிகுலேஷன்,
மடிப்பாக்கம், சென்னை.




எப்போது?

பக்கத்து வீட்டில் கிளி ஜோசியரை அழைத்து ஜோசியம் பார்த்துக் கொண் டிருந்தனர். நானும் தம்பியும் அங்கு போய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். ஜோசியர் நிறைய பேசிவிட்டு "இப் பொழுது நீங்கள் கஷ்டத்திலிருந்து விடு தலை அடைந்து விடுவீர்கள்" என்றார். உடனே என் தம்பி "அது சரி, கூண்டி லிருக்கும் இந்தக் கிளிக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கும்?" என்றான் ஜோசி யரிடம். சற்று திகைத்த ஜோசியர் சுதாரித் துக் கொண்டு "என்னிடமிருந்து வறுமை விடுதலையாகும்போது இந்தக் கிளிக்கும் விடுதலை கிடைத்துவிடும்" என்றார்.



"அப்படியா?" என்ற தம்பி கூண்டிலிருக் கும் கிளியைப் பரிதாபமாகப் பார்த் தான்.

– ராமகிருஷ்ணன்,
ஆவணத்தாங்கோட்டை,
புதுக்கோட்டை மாவட்டம்.




மாமா சீவல்

எங்கள் ஊரில் நேரு என்பவர் பெட்டிக்கடை வைத்திருக்கிறார். அவரை நாங்கள் மாமா என்றுதான் அழைப்போம். தாத்தா ஒரு நாள் என்னிடம் "பெட்டிக்கடையில் சீவல் வாங்கிட்டு வா" என்று அனுப் பினார். நான் பெட்டிக்கடைக்குச் சென்று "மாமா சீவல் கொடுங்க" என்று கேட்டேன். "மாமா சீவல் எல் லாம் இங்கு இல்லை. ஏ.ஆர்.ஆர். சீவல்தான் இருக்கு" என்றார் மாமா சிரித்தபடி. சுற்றி நின்றவர்களும் சிரித்தனர். எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. "சீவல் கொடுங்க மாமா" என்றேன். "பரவாயில்லையே! உடனே வார்த்தைகளைத் திருப்பிப் போட் டுட்டியே" என்றார் அவர்.

– ப. காளிதாசன்,
நீர்விளங்குளம்,
புதுக்கோட்டை
மாவட்டம்.






பாதை மாறியது!

பக்கத்து வீட்டுச் சிறுவன் நவீன் எல்.கே.ஜி. படிக்கிறான். அன்று திண்ணையில் உட்கார்ந்து பாடம் படித்துக்கொண்டிருந்தவன் திடீரென என்னிடம் வந்தான். "அண்ணா ஏபிசி சொல் லட்டுமா?" என்று கேட்டான். "ஏபிசிதான் உனக் குத் தெரியும்னு எனக்குத் தெரியுமே! அ, ஆ, இ சொல்" என்றேன். அவனும் "அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஜெ, கே, எல்" என்று அப் படியே ஆங்கிலத்திற்குப் பாதை மாறியவுடன் என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை!

– ம. மகேஷ்,
நங்கவள்ளி, சேலம் மாவட்டம்.


முதல் பரிசு
என்.எஸ். கோபால், பத்தாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, இராசா நகரம்
(கிழக்கு), திருவள்ளூர் மாவட்டம்



ஆகஸ்ட் இதழில்
‘ரயில்’ என்ற தலைப்பில்
ஓவியப் போட்டி
அறிவித்திருந்தோம். அதில்
பரிசு பெற்ற
ஓவியங்கள்



இரண்டாம் பரிசு
பி. அந்தோணி,
திருநெல்வேலி.




மூன்றாம் பரிசு
என். கார்த்திகேயன், பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி,
அயோத்தியாபட்டணம், சேலம்.

ஓவியப் போட்டி

முடிவுகள்

ஆறுதல் பரிசு
ஜெ. செந்தில்குமார்,
பன்னிரண்டாம் வகுப்பு, விருதுநகர் இந்து நாடார்
மேல் நிலைப் பள்ளி, மதுரை.



ஆறுதல் பரிசு
க. பரசுராமன்,
ஏழாம் வகுப்பு,
பெத்தி செமினார் மேல்நிலைப் பள்ளி,
பாண்டிச்சேரி



கதை கேட்டல் என்பது சுவாரசிய மான விஷயம். அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, மாமா, மாமி, ஆசிரியர், அக்கம் பக்கத்தினர் என எல்லோரிடமும் கதை கேட்டு வளர்கிறோம். கதை கேட்பது அல்லது சொல்வதின் மூலம் குடும்பப் பாசம் வளரும். கற்பனை வளம் பெருகும். தாத்தாவோ பாட்டியோ கதை சொல்லும் போது கேட்பவர்களின் கற் பனைத் திறனுக்கேற்ப மனக் காட்சி அமைப்பும் மாறும். கதையில் ஏற்படும் சந்தேகங் களை உடனுக்குடன் கதை சொல்லிகளிடம் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம். அதோடு கதை சொல்லிக் கொண்டிருக் கும்போது தூக்கமோ, வேறு வேலைகளோ வந்து விட்டால் கதையை நிறுத்தி விடலாம். மறுநாள் விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்கச் சொல்லிக் கேட்கலாம். இப்படி நிறைய நல்ல விஷயங்



கதை கேளுங்கள்; கதை சொல்லுங்கள்!

கள் கதை கேட்டலில் உண்டு. நம் நாட் டில் வாய் வழியாக மட்டும் சொல் லப்பட்டு வந்த கதைகள் ஏராளம்! இக் கதைகளை புத்தகங்களில்கூட பார்க்க முடியாது. வழி வழியாக அந்தக் கதைகள் சொல்லிச் சொல்லியே நிலைத்து நின்றிருக்கின்றன.

ஆனால் இன்றோ நிலைமை வேறு. அவசர யுகம். வீட்டில் பெரியவர்கள் எந்நேரமும் 'வேலை, வேலை' என்று ரொம்பவும் பரபரப்பாக இருக்கிறார்கள். பள்ளி விட்டு வந்த பிள்ளைகளிடம் பேசவோ, கதை சொல்லவோ முடியாமல் டி.வியில் கார்ட்டூன் நிகழ்ச்சிகளைப் போட்டு விட்டு விடுகின்றனர். கார்ட் டூன்களை விரும் பும் குழந்தைகளும் சமர்த்தாக டீ.வி முன் அமர்ந்து அதில் லயித்து விடுகின்றனர். பெற்றோர்களை அநாவசி யமாகத் தொந்தரவு செய்வதில்லை. பெற்றோர்களுக்கும் வசதி. இப்படி செய்வதால் குழந்தைகளிடம் செலவிடும் நேரம் மிகவும் குறைந்து போய்விடு கிறது. கதை கேட்டல், விளையாட்டு, புத்தகங்கள் வாசித்தல் போன்ற நிகழ்வு களுக்கு முக்கியத்துவம் தராமல் கார்ட் டூன்களைப் பார்ப்பதில் மட்டுமே குழந்தைகளின் கவனம் சென்று விடுகிறது.

சரி, பாட்டி கல்பகம் தன் பேரன் ரோஹித்துக்குச் சொன்ன கதையை நீங்களும் கேளுங்களேன்:

முனியன் மிகவும் ஏழை. பக்கத்துக்

காட்டில் விறகு வெட்டிப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தான். விறகு வெட்டியாக இருந்தாலும் மரங்கள் மேல் அவனுக்குப் பிரியம் அதிகம். தளதள வென்று வளர்ந்த பச்சை மரங்களை ஒருபோதும் வெட்ட மாட்டான். பட்டுப் போன மரங்கள், ஒடிந்த கிளைகள் என வீணாகிப் போனவற்றையே வெட்டிக் கொண்டு வருவான்.

முனியன் கொண்டு வரும் விறகுகள் சாதாரணமாக இருந்ததால் மிகக் குறைந்த விலைக்கே போகும். இதனால் முனியனின் மனைவி முனியம்மாவுக்குப் பயங்கர கோபம் வரும்.

ஒரு நாள் பருத்த பெரிய மரங்களை வெட்டிக்கொண்டுதான் வீட்டிற்கு வர வேண்டும் என்று கறாராகச் சொல்லி விட்டாள் முனியம்மா.

முனியனுக்கோ வருத்தமாக இருந்தது. மிகவும் சோகமாகக் காட்டை அடைந்து ஒரு பெரிய மரத்தை வெட்டப் போனான். அப்போது "முனியா என்னை வெட்டாதே" என்ற குரல் கேட்டது.

முனியன் திகைத்தான். பின் சுதாரித்துக்கொண்டு "என்னை மன்னித்து விடு மரமே! எனக்கு வேறு வழியில்லை" என்றான்.

"உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். உன் நிலை புரிகிறது. என் வேருக்கு அருகில் மண்ணைத் தோண்டு. ஒரு சொம்பும் குடமும் இருக்கிறது. அதில் ஏதாவது ஒன்றை எடுத்து சந்தோஷமாக வாழ்க்கை நடத்து" என்றது மரம்.

முனியன் தோண்டினான். பெரிய குடத்தை வைத்து விட்டு சிறிய சொம்புடன் நடந்தான்.

வீட்டை அடைந்ததும் சொம்பைத் திறந்து பார்த்தான். அதில் விலை மதிப்பற்ற ஐந்து வைரக்கற்கள் இருந்தன. இதைப் பார்த்த முனியம்மாவுக்கு சந்தோஷத்தில் வாய் அடைத்தது. சிறிது நேரம் கழித்து எப்படி கிடைத்தது என்று கேட்டாள். முனியனும் நடந்ததைச் சொன்னான்.

"பெரிய குடத்தை எடுக்காமல் இப்படி வந்து நிக்கறீங்களே! நாளைக்கு நான் போய் குடத்துடன் வர்றேன்" என்றாள் முனியம்மா.

"வேண்டாம். பேராசைப் படாதே. இதுவே நம் வாழ்நாள் முழுவதிற்கும் போதுமானது" என்றான் முனியன்.

மறுநாள் முனியன் பேச்சைக் கேட்காமல் காட்டிற்குச் சென்று அந்த மரத்தை அடைந்தாள் முனியம்மா. கோடரியால் மரத்தை வெட்டப் போனாள். மரமும் முனியனிடம் கூறியதைப் போல் கூறியது. முனியம்மா மண்ணைத் தோண்டி பெரிய குடத்தை



எடுத்தாள். அங்கேயே திறந்து பார்த்தாள். அவ்வளவுதான்! பானையில் இருந்த பாம்புகள் சீறிக் கொண்டு வரவே உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு எடுத்தாள் ஓட்டம். அன்றிலிருந்து முனியம்மா காட்டுப்பக்கம் தலை வைத்தே படுக்கவில்லை!

அட்டையில்: **ரோஹித், கல்பகம்**
வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**



SLOGAN, SHORT STORY CONTEST RESULTS

THE BANDICOOT BRIGADE
- A Jayabalan story

THE MISSING COUSIN
— HOLIDAY EXPERIENCE

THE MAGIC PEN

PLUS
PETPALS, PUZZLES, CREATIVE CORNER, VIEWPOINT


Rs.6/- only

OCTOBER 2000

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 97



கூடு விட்டுக் கூடு பாய்ந்தவன்!

மாலதி

திருமநந்தனுக்கு இரண்டு பிள்ளைகள். இருவரையும் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார் அரசர். அசந்த நேரம் எதிரி படையெடுத்து வரவே தன் மனைவி, பிள்ளைகளுடன் சுரங்கப் பாதை வழியே தப்பினார் மன்னர்.

காடு மலையெல்லாம் தாண்டி ஒரு பட்டணத்தை அடைந்தார். அங்கே கல்வியில் விற்பன்னரான ஒரு குருவுக்குப் பிள்ளையில்லை என்ற செய்தி காதில் விழுந்தது. தன் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு அவரிடம் சென்று வணங்கினார்.

"குருதேவா! இவர்கள் என் குமாரர்கள். மூத்தவன் பார்த்திபன், இளையவன் விக்ரமன். விதிவசத்தால் நாடிழந்து நாடோடியாய் அலைகிறேன். இதில் இவர்களை நல்ல முறையில் வளர்க்க முடியும் என்று தோன்றவில்லை! இவர்கள் இருவருக்கும் கல்வி போதித்து வளர்த்து வாருங்கள். ஒரு பிள்ளையை உங்களுக்குக் குருதட்சணையாகத் தந்து விடுகிறேன்'' என்றார்.

குருதேவர் மூன்று, ஐந்து வயதிலுள்ள அவர்களை ஆழ்ந்து பார்த்தார். ராஜ



களையும் புத்தி சாலித்தனமும் பளிச்சிட்டன. ஒப்புக் கொண்டார்.

இரு குழந்தைகளையும் விட்டு விட்டு மனமில்லாமல் விடைபெற்றார் மன்னர். அரசன் மூத்த மகனையே கேட்பான் என கணக்கிட்டார் குருநாதர். தவிரவும் அவனுக்கு வயது ஐந்தானதால் பெற்றோரிடம் இருந்த அனுபவங்கள் லேசில் மறையாது என நினைத்தார்.


இளையவன் விக்ரமனுக்கே அக்கறையாய் கல்வி போதித்தார். மூத்தவன் மற்ற மாணவர்களுள் ஒருவனாக இருந்தான். அவன் சரியாகப் படிக்காவிட்டாலும் கண்டிக்க மாட்டார். மூத்தவனைக் கடுமையாக வேலை வாங்கினார். ஓசிச் சாப்பாடுதானே! வேலை பார்க்கட்டும் என்று நினைத்தார்.

விக்ரமனுக்கு அஷ்டமா சித்திகளையும் கற்றுக் கொடுத்தார். கூடு விட்டுக் கூடு


பாய்தல், மாந்த்ரீகம், ஞானதிருஷ்டியால் நடக்கும் நிகழ்ச்சிகளை அறிய மேற்கொள்ள வேண்டிய பயிற்சி அனைத்தையும் இருபது வயதிற்குள் முறைப்படி கற்று வல்லவனானான் விக்ரமன்.

சாணை தீட்டப்படாத கத்தியாய் இருந்தான் பார்த்திபன். குன்றிலிட்ட தீபமாய் பிரகாசித்தான் விக்ரமன்.

குருதேவரின் ஓரவஞ்சனையைப்



புரிந்து கொண்ட விக்ரமன், பெற்றோர் எங்கே இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்று ஞானதிருஷ்டியில் ஆராய்ந்தான். ஒரு ஊரில் இறைவன் புகழைப்



பாடி பிச்சையெடுப்பதைக் கண்டு அவன் மனம் பாகாய் உருகியது.

மறுநாள் ஆற்றுக்கு நீராடச் செல்லும் போது ஒரு காகம் இறந்து கிடப்பதைக் கண்டு அதை எடுத்துக் கொண்டு ஒரு பாழ்மண்டபத்துக்குச் சென்று மறைவாகக் கூடு விட்டுக் கூடு மாறினான்.


பிறகு பறந்து பெற்றோர் முன் நின்றான். "அம்மா, அப்பா! காக்கை பேசுகிறதே என வியப்படையாதீர்கள்! நான் உங்கள் இளைய மகன் விக்ரமன். கூடு விட்டுக் கூடு பாய்ந்திருக்கிறேன். என் உடலை மற்றவர் காணும் முன் போக வேண்டும்'' என்றான்.

பெற்றோர் மகிழ்ச்சியுடன், "ரொம்ப சந்தோஷம். உன் தமையன் எப்படி இருக்கிறான்?'' என்று கேட்டனர்.

"அதற்காகத்தான் வந்தேன். அண்ணன் சாதாரணமாகத்தான் இருக்கிறான் குருநாதர் சூழ்ச்சிக்காரர். அண்ணன் விஷயத்தில் அக்கறையே காட்டவில்லை'' என்றான்.

''ஏன் அப்படி?'' கவலையோடு கேட்டார் தந்தை.

"நீங்கள் மூத்த பிள்ளையையே கேட்பீர்கள் என்று



திட்டமிட்டிருக்கிறார். நீங்கள் என்னைக் கேளுங்கள். பின்னர் அண்ணனை அழைத்துக் கொள்ளலாம்'' என்றான் விக்ரமன்.

"ஐயோ! இப்படி செய்து விட்டாரே! கையிலே பொருளில்லா விட்டாலும் பிள்ளைகளுக்குக் கல்விச் செல்வம் நிறைந்திருக்க வேண்டும் என்று நினைத்தல்லவா ஒரு பிள்ளையை இழக்க முடிவு செய்தேன்!'' என்று வருந்தினாள் தாய்.

"நான் சொன்னபடி நடந்து கொண்டால் நாம் வெற்றி பெறுவோம். சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் முறியடிப்போம்'' என்றபடி பறந்து சென்றான். தன் உடலுக்குள் புகுந்து குருகுலத்தை அடைந்தான்.

சில தினங்களில் தருமநந்தனும் அவன் மனைவியும் குருகுலம் வந்தனர். குருநாதர் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். பார்த்திபனை சிறப்பான ஆடை அணிவித்து அவர்கள் முன்நிறுத்தினார்.

விக்ரமன் மாட்டுக்காரப் பையன்

போல் தலையில் சிவப்பு முண்டாசும் இடுப்பில் அழுக்குத் துண்டுமாய் நின்றிருந் தான்.

"இவர்கள் இருவருமே உங்கள் பிள்ளை கள்தான். இளையவனுக்கு மந்தபுத்தி. படிப்பு ஏறவில்லை. மாடு மேய்க்கிறான். மூத்தவன் பார்த்திபனுக்கு கற்பூர புத்தி. எதையும் 'கப்'பென்று பிடித்துக் கொள் வான். யானையேற்றம், குதிரையேற்றம், மல்யுத்தம், வில்வித்தை, கத்திச் சண்டை எல்லாம் கற்பித்திருக்கிறேன். நலிந்திருக்கும் உங்களுக்கு நாட்டைப் பிடிக்க உதவுவான். எனக்கு இளையவனைக் கொடுத்தால் போதும். தானம் வந்த மாடுகளை நன்றாக மேய்ப்பான். நிலத்தை உழுது பயிரிடு வான். படிக்காவிட்டாலும் பரவாயில்லை" என்றார் குருநாதர்.

தருமநந்தன், "ஐயா! குருதட்சணை மட்டமாக இருப்பது குற்றம். நாடோடி யான எனக்கு இளைய மகனே போதும். மூத்தவனை தாங்கள் எந்த நாட்டு அரசரிடமாவது தளபதியாக்கி மேன்மை பெறுங்கள்" என்று தீர்மானமாகக் கூறி விக்ரமனோடு புறப்பட்டார். மூத்த மகனைக் கண்டு மனத்துள் வருந்தினாள் தாய்.

"கழுதைக்கு அலங்காரம் பண்ணினா லும் அது குதிரையாகுமா? மண்ணில் கிடந்தாலும் வைரம் வைரம்தான்! போய் பழைய உடுப்பை மாட்டிக் கொண்டு மாடு மேய்" என்று சிடுசிடுத்தார் குருதேவர். அவருக்கு ஏமாந்த எரிச்சல். பார்த்திபன் மௌனமாக உள்ளே சென்றான்.

கொஞ்ச தூரம் நடந்ததும் விக்ரமன், "அப்பா! நான் சேவலாக மாறி குரல் கொடுக்கிறேன். அரண்மனையில் சண்டை போடும் ஜோடிச் சேவலில் ஒன்று இறந்து விட்டது. ஜோடி சேர்க்க அரண்மனைச் சேவகர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இங்கு வரும் அவர்களிடம் நூறு பவுன் விலை பேசுங்கள். நாளைக் காலை இங்கு திரும்பி வந்து விடுவேன். திருப்தியாய் சாப் பிட்டு ஓய்வெடுங்கள்" என்றவன், "கொக் கரக்கோ" எனக் கூவினான்.

விக்ரமன் திட்டமிட்டபடியே எல்லாம் நடந்தது.


சேவலைக் கூண்டிலே அடைக்கச் சொன்னான் அரசன். மறுநாள் சேவல் சண்டை காண அனைவரும் ஆவலாக இருந்தனர். நள்ளிரவில் எதையோ சாப்பிட்டுத் தள்ளாடி வந்த பெருச்சாளி ஒன்று இறந்தது. அதன் உடலில் புகுந்து கொண்ட விக்ரமன் வளை தோண்டிக் கொண்டு பெற்றோரிடம் போய்ச் சேர்ந் தான். மூவரும் தருமநந்தன் அரசாண்ட ஊருக்குப் போனார்கள்.

பல வருஷங்களானபடியாலும் தருமநந் தன் தாடி, மீசை, மூப்போடு இருந்ததாலும் யாருக்கும் அவர்களை அடையாளம் தெரியவில்லை.

சுடுகாட்டில் அரசரின் பஞ்சகல் யாணிக் குதிரை இறந்து போகவே அதைத் தகனம் செய்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர் சேவகர்கள்.

அவர்கள் தலை மறைந்ததும் தீயை அணைத்து குதிரையின் உடலை வெளியே எடுத்தான் விக்ரமன்.

"விக்ரமா! ஏன் இப்படி செய்கிறாய்?" என்று கேட்டார் தந்தை.



"அவர் ஏன் தும்மிகிட்டே போறாரு, ஜலதோஷமா?"

"இல்லை. அவர்தான் 'பொடி' நடையா போறாரே!"

— பி. நடராஜன்

"அப்பா! இறந்த நிலையிலும் பஞ்சகல்யாணி என்ன அழகாக இருக்கிறது! நம் கையிலுள்ள பணம் தீர்ந்து விட்டது. சாப்பிட, தங்க பணம் வேண்டாமா? நான் இதன் உடம்பில் புகுந்து கொள்கிறேன். சந்தையில் கொண்டு போய் ஆயிரம் பொன் விலை கூறுங்கள். அரசரின் குதிரைத் தலைவனே வாங்குவான். அம்மா என் உடலை அதுவரை காத்துக் கொண்டிருக்கட்டும்" என்றான்.

விக்ரமன் தீர்மானம் செய்தபடியே எல்லாம் நடந்தது.

"நேற்று இறந்த என் குதிரையின் அச்சாக ஒரு குதிரை கிடைத்திருக்கிறது" என்றான் வேந்தன்.

குருநாதர் அதைப் பார்க்க குதிரைக் கொட்டடிக்குப் போனார். குருநாதரைக் கண்ட குதிரை கோபத்தோடு முன்னங் கால்களைத் தூக்கியது. குருநாதர் ஞான திருஷ்டியில் குதிரையின் முற்பிறவியை ஆராய்ந்தார்.

விக்ரமனின் சதி புரிந்தது.

"மன்னா! உன் பஞ்சகல்யாணி சாது. இது கொலை வெறி உடையது. உனக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும். இது மயங்கி விழும் வரை சவுக்காலடிக்க வேண்டும்" என்றார்.

மன்னன் உத்தரவுப்படி சேவகர்கள் குதிரையை சவுக்காலடித்தனர். தூரத்தில் பணிப்பெண் இறந்த மீன்களைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

ஒரு மீனின் உடலில் புகுந்து துள்ளிக் குதித்து அருகிலுள்ள குளத்துக்குப் போனான் விக்ரமன். சவுக்கடியால் குதிரை செத்து விட்டதாகக் காவலர் நினைத்தனர்.

ஆனால் குரு ஏமாறவில்லை. ஞான திருஷ்டியில் விக்ரமன் போன இடத்தைத் தெரிந்து கொண்டார்.

"அரசே! இந்தக் குளத்தில் ஒரு மீன் கூட இல்லாமல் வலை வீசிப் பிடித்து கொதிக்கும் வெயிலில் போடச் சொல்லுங்கள். ஒரு அரக்கன் குதிரை உடலிலிருந்து மீனாக மாறி குளத்துக்குள் போய் விட்டான்" என்றார் குரு.

மன்னன் அவ்வண்ணமே உத்தரவிட்டான்.

இறந்த உடல் எங்கே இருக்கிறது என ஆராய்ந்த விக்ரமன் மரத்தில் செத்துக் கிடந்த கிளியின் உடலில் புகுந்து கொண்டு பறந்து சென்றான்.

'அரக்கன் ஆகாயத்திற்குப் போய் விட்டான். நான் வருகிறேன்' என்று மன்னரிடம் விடைபெற்ற குருநாதர் கழுகு வடிவெடுத்துக் கிளியைத் துரத்தினார்.

கிளி அந்தப்புரம் சென்று இளவரசியின் மடியில் விழுந்தது. இளவரசி அதை அன்புடன் தடவிக் கொடுத்தாள். துரத்தி வந்த கழுகின் மீது அம்பெய்யுமாறு உத்தரவிட்டாள். கழுகு பார்வையிலிருந்து மறைந்து விட்டது. கிளி யாருமில்லாத சமயம் நடந்தவற்றை அவளிடம் கூறியது.

"இப்போதே நீங்கள் உங்கள் பெற்றோர் இருக்குமிடம் சென்று விக்ரமனாக வாருங்கள்" என்றாள் இளவரசி.

"குரு என்னைக் கொல்ல திட்டமிட்டிருக்கிறார். நான் சொன்னபடி நீ செய்தால் நான் உயிர் பிழைப்பேன். குருநாதர் கழைக் கூத்தாடி வேடமிட்டு பல வித்தைகளைச் செய்து காட்டி உன் தந்தையை மகிழ்விப்பார். அரசர் பரிசு கொடுக்க முன்வரும் போது என்னைக் கேட்பார். கொடுக்க முடியாதென்று மறுத்து விடு. ஒரு இறந்த தவளையையும் கிளியையும் கெட்டுப் போகாதபடி பாடம் பண்ணி வைத்துக்



''ராமு! நீ எங்கேடா குடியிருக்கே?''
'நடுத்தெருவுலடா.''
''ஏண்டா உனக்கு வீடில்லையா?''
''வீடுதான் நடுத்தெருவுல இருக்குன்னு சொன்னேன்டா!''

– கே.ஆர்.உதயகுமார்

கொள். தாதியர் திரும்பி வருவதற்குள் நான் தவளையின் உடலில் புகுந்து கொள் வேன். நீ கிளியின் கழுத்தைத் திருகிப் போட்டு விடு. யாருக்குமே வேண்டாம் என்று கோபமாகச் சொல்" என்றான் விக்ரமன்.

இளவரசி விக்ரமன் சொன்னபடி ஒரு இறந்த தவளையையும் கிரியையும் கொணர்ந்து பாடம் பண்ணி வைத்திருந் தாள். மறுநாள் கழைக்கூத்தாடியாக குரு வந்தார். அரசனை மகிழ்வித்துக் கிளியை வெகுமதியாகக் கேட்டார்.

இறந்த தவளை உயிர் பெற்று துள்ளவே செத்த கிளியின் கழுத்தைத் திருகிப் போட்டாள் இளவரசி.

கழைக்கூத்தாடி வேடத்திலிருந்த குரு 'கிளி செத்ததைப் பார்க்க வேண்டும்' என்றார். அரசர் அவரை அந்தப்புரத்துக்கு அழைத்து வர குருநாதர் பாம்புக் கூடை யைத் திறந்து விட்டார். பாம்பு தவளையை விழுங்க வர தவளை 'சொத்'தென்று செத்து விழுந்தது. அதே சமயம் இளவரசி பாடம் பண்ணி வைத்திருந்த கிரி பாம்போடு சண்டையிட,

மன்னரும் இளவரசியும் தாதியரும் காவலரும் மூச்சு விட மறந்து இந்தப் போராட்டங்களைப் பார்த்தனர்.

பாம்பு, "தம்பி! என்னை விட்டு விடு. நான் உன் அண்ணன் பார்த்திபன். குருநாதர் எனக்கும் எல்லா வித்தைகளும் கற்றுக் கொடுத்து விட்டார். என்னைப் பாம்பின் உடலில் புகச் சொன்னார். நானும் சாகசங்கள் செய்து காட்டினேன்" என்றது.

விக்ரமன், "குருநாதரைத் தக்க காவலில் வைத்து என்னையும் அண்ணனையும் என் பெற்றோரிடம் அனுப்புங்கள். மற்றதை இளவரசியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்றான்.


மன்னன் அப்படியே செய்தான். பாம்பும், கிரியும் கூடிக் குலவியபடி பெற்றோரிடம் வந்தன. தருமநந்தனிடம் மன்னிக்கும்படி வேண்டி விக்ரமனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தான் அரசன்.

பெற்றோர் பூரிக்கும்படி பார்த்திபனுக் கும் வேறொரு அரச குமாரிக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது. குருநாதரை மன்னித்து அரச குருவாக்கிக் கொண்டான் பார்த்தி பன். பாம்பும் கிரியுமே அவர்கள் நாட்டுச் சின்னமாக இருந்தன.

குறுக்கெழுத்துப் புதிர் விடை!



1 அ	ந்	2 த	மா	ன்	■	ம்	ய	3 ஐ
மா	■	டை	■	ம	■	4 ஓ	■	ப்
வா	■	■	5 எ	ரு	து	■	■	ப
சை	ச்	6 ப	■	7 த	■	8 கா	ஞ்	சி
■	■	■	■	■	■	■	■	■
ன்	ர	9 வீ	■	10 ம	■	11 பா	க	ன்
ண	■	■	று	ன்	12 க	■	■	லோ
ர்	■	13 கூ	■	ற	■	14 வீ	■	பி
15 க	ணி	னி	■	ம்	ர	தி	த்	16 பா



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ப்ரியா, பிரசாத் போல் நீங்களும் உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கோகுலத்தை அன்பளிப்பாக வழங்கலாமே! கூடவே, உங்கள் சந்தாவையும் நீடித்துக் கொள்ளலாமே! உடனே கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

பெயர் : ....


முகவரி : ....


....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.







முதலாம் குலோத் துங்கன்...

சமூக அறிவியல் ஆசிரியர் பாடத்தை ஆரம்பிக்கும் முன் அதைப் பற்றிய பொதுவான கருத்துகளை மாணவர்களிடம் கேட்பார். அன்று முதலாம் குலோத்துங்கனைப் பற்றிப் பாடம் எடுக்க எண்ணி, "முதலாம் குலோத்துங்கனைப் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்" என்றார் என் நண்பனிடம். அவன் எழுந்து நின்று மௌனம் சாதித்தான். "பயப்படாமல் உனக்குத் தெரிந்ததைச் சொல். உன்னை ஒண்ணும் செய்ய மாட்டேன்" என்றார் ஆசிரியர். "முதலாம் குலோத்துங்கனைப் பற்றி இரண்டாம் குலோத்துங்கனுக்குத் தெரிந்த அளவு எனக்குத் தெரியாது சார்" என்றான். அவன் பேச்சை ரசித்த ஆசிரியர் சிரித்துக் கொண்டே உட்காரச் சொன்னார்.

– ஆ. சக்திவேலன், காசிபாளையம்.

ஏற்ற, இறக்கம்!

பள்ளி ஆண்டு விழா நடைபெற இருந்தது. தமிழாசிரியர் கிராமிய நடனம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அதில் ஒருவனுக்கு சரியாக நடனம் வரவில்லை. அவனை அழைத்து, "உனக்கு டான்ஸ் சரியா வரலை. பேச்சுப் போட்டிக்கு வந்து விடு. நானே சொல்லித் தரேன்" என்றார் ஆசிரியர். அவனும் சம்மதித்தான். ஆசிரியர் எழுதிக் கொடுத்ததைக் கடகடவென்று படித்தான். ஆசிரியர் அவனைப் பார்த்து, "ஏற்ற, இறக்கத்தோடு படிப்பா" என்றார். "சார்! மேடையில் மைக்கையும் தூக்கிட்டு படியில் ஏறி, இறங்கிப் பேசணுமா?" என்றான் பரிதாபமாக. "கிண்டலா பண்றே? பேசறதை ஏற்றி, இறக்கிப் பேசினால் போதும். ஏறி, இறங்க வேண்டாம்" என்றார் கோபத்துடன் ஆசிரியர்.

– ஆர். பாலகுமார், எட்டாம் வகுப்பு, மாடர்ன் மெட்ரிக் பள்ளி, செம்பனார் கோவில்.

எதை வைத்து...


தமிழாசிரியர் பாடம் நடத்தி விட்டு, "நாளைக்கு அனைவரும் உங்களுக்குப் பிடித்தமான ஒரு கதையை எழுதிட்டு வரணும்" என்றார். எல்லோரும் மறுநாள் கதை எழுதிக் கொண்டு போனோம்.

பாடநேரத்தில் விட்டால்

தமிழாசிரியர் ஒவ்வொருவரின் நோட்டையும் படித்துக் கொண்டிருந்தார். என் நண்பனின் நோட்டைப் பார்த்தவர், "எதை வைத்து எழுதியிருக்கே?" என்று கேட்டார். அவனோ, "இங்க் பேனாவை வைத்துதான் சார்!" என்றான். ஆசிரியர் சட்டென சிரித்து விட்டு, "எந்தப் புத்தகத்தை வைத்து எழுதினே?" என்றார். அவன் மன்னிப்புக் கேட்டு விட்டுப் பெயரைச் சொன்னான்.

– சி. சுதாகர், துத்திப்பட்டு,
செஞ்சி தாலுகா.

காலடி வைத்தது யார்?



ஆசிரியர் அறிவியல் பாடம் நடத்தி விட்டு ஒவ்வொருவரிடமும் கேள்வி கேட்டுக் கொண்டு வந்தார். பின் வரிசையில் உட்கார்ந்திருந்த மாணவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பி, "நிலவில் முதலில் காலடி எடுத்து வைத்தது யார்?" என்று கேட்டார். தூக்கக் கலக்கத்தில் இருந்த அவனோ, "முனியப்பன்தான் சார்" என்றான். நாங்கள் சிரித்தோம். அவனோ மீண்டும் "முனியப்பன்தான் தினமும் வகுப்பறைக்கு முதலில் வருவான். அவன்தான் இன்னிக்கும் காலடி எடுத்து வைத்திருப்பான்" என்றான். ஆசிரியர் கோபத்துடன் முகத்தை கழுவிட்டு வரச் சொன்னார். அவன் திரும்பி வந்ததும் பதிலை ஐம்பது முறை எழுதச் சொல்லி விட்டார்.



– பி. மோகன்,
உப்பிடமங்கலம்,
கரூர் மாவட்டம்.

என்ன செய்வே?

அறிவியல் பாடவேளை. ஆசிரியர் பாலைவனம் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். என் நண்பனை எழுப்பி, "உன்னைத் தனியாகப் பாலைவனத்தில் இரண்டு நாட்கள் கொண்டு போய் விட்டால் என்ன செய்வே?" என்று கேட்டார். உடனே அவன் பெஞ்சிலிருந்து கீழே விழுந்தான். விழுந்தவன் சலனமற்றுக் கிடப்பதைப் பார்த்த ஆசிரியரும் நாங்களும் திகைத்தோம். ஆசிரியர் தண்ணீரை எடுத்து அவன் முகத்தில் தெளித்தார். சடாரென எழுந்தவன் சிரித்தபடியே, "இப்படியெல்லாம் தண்ணீர் கிடைக்காமல் மயங்கி விழுந்திருப்பேன் சார்" என்றான். "அடப்பாவி. பதில் சொல்லச் சொன்னால் செய்தே காண்பிக்கிறியா? இனி இப்படி செய்யாதே" என்று பெருமூச்சு விட்டார் ஆசிரியர்.

– கிருஷ்ணன்,
அறந்தாங்கி.

எங்கள் பள்ளியில் நடந்தது!

என்ன செய்வாய்?



வேகமாகச் செல்கிறது பறக்கும் கம்பளம்!

விதுரநீதி, பி.ந. வெங்கடாச்சாரி, பக்-68, ரூ. 13/- மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 600 017.

கண்ணன் உரைத்த கீதைக்கு இணையான உபதேசக் களஞ்சியம் விதுரநீதி. அது உருவாக என்ன காரணம் என்பதிலிருந்து தொடங்கி அந்த உபதேசங்களின் சாரத்தைச் சுருக்கமாகத் தொகுத்துத் தருகிறது இந்த நூல்.

திருக்குறள் கோனார் பொன்னுரை, பக்கம் - 308, ரூ. 19.90, பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014

உலகப் பொதுமறையான திருக்குறளை அறியாதோர் கிடையாது. அதேபோல் 'கோனாரை' அறியாத தமிழ் படித்தோர்/படிப்போர் உண்டா? மூலத்தோடு அருமையான தெளிவுரை. கைக்கு அடக்கமான பதிப்பு.

பறக்கும் கம்பளம், கூத்தபிரான், பக்-102, ரூ. 19.50. பழனியப்பா பிரதர்ஸ். 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

வானொலி அண்ணாவாக இருந்த போது சென்னை வானொலி சிறுவர் நிகழ்ச்சியில் தொடராக ஒலிபரப்பப்பட்டு லட்சக்கணக்கான குழந்தைகளால் விரும்பி மீண்டும் மீண்டும் கேட்கப்பட்ட தொடரின் நூல் வடிவம் இது. வானொலித் தொடரில் இருந்த அதே வேகம், இதிலும் இருப்பது வியப்பு. அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்பதை எதிர்பார்க்க வைத்தே கதை ஓட்டப்படுகிறது. முழுப் பக்கப் படங்கள் அழகூட்டுகின்றன.

காம்படிஷன் தேர்வுகளில் வெற்றி பெறுவது எப்படி?, சி.எஸ். தேவநாதன், பக்கம் 228, ரூ.45/- இராமநாதன் பதிப்பகம், பினாட் எண் 4698 ஏஏ 144 மெயின் ரோடு, அண்ணாநகர், சென்னை -600 040.

பள்ளி இறுதித்தேர்வை முடிக்கப் போகும் மாணவர்களுக்கு எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள முதல்படியாகப் பெரிதும் உதவும் நூல். பொது அறிவில் நாட்டமுள்ளவர்களுக்கும் வினாடி வினா நடத்துபவர்களுக்கும் உதவும்.

மாவீரன் பெர்சியகம் மெடூசா அரக்கியும், பேராசிரியர் எ.சோதி, பக்-88. ரூ. 20/- நன்மொழிப் பதிப்பகம், 41. கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 3.

படிக்கத் தெவிட்டாத கிரேக்க மாவீரன் பெர்சியசின் கதையை ஏராளமான படங்களுடன் அருமையாகத் தந்துள்ளார் ஆசிரியர். மாய மந்திர தந்திரங்களுக்குக் குறைவில்லை.

— ரே



பாகற்காயின் அழுகை!

கிச்சா தன்னுடைய தோட்டத்தை நோட்டமிட்டார். கத்தரி, பூசணி, தக்காளி, பாகற்காய், வெண்டைக்காய் எனத் தோட்டம் முழுவதும் காய்கறிகள். பளபளப்பாக, ஆரோக்கியமாகக் காட்சியளித்த காய்களைப் பெருமிதத்துடன் தொட்டுப் பார்த்தார். சிறிது நேரத்தில் வீட்டிற்குச் சென்று விட்டார்.

“பூசணி அக்கா! நம்ம ஐயா வீட்டில் ஏதாவது விசேஷமா?” என்றது முருங்கை மரம்.

“உனக்குத் தெரியாதா? நம்ம ஐயாவோட பொண்ணுக்கு அடுத்த வாரம் கல்யாணம். நம்மால் முடிந்த அளவு காய்களைக் கொடுக்கணும்” என்றது பூசணிக் கொடி.

“ஆமாம்! இது தான் நம்ம ஐயாவுக்கு நாம செலுத்தற நன்றிக்கடன். நம்மை எவ்வளவு அன்பா கவனிச்சிக்கிறார்!” என்று கூறியது கத்தரிச் செடி.

“என்ன பாகைத் தம்பி எதுவும் பேசாமல் சோகமாக இருக்கிறே? என்னாச்சு?” -அக்கறையுடன் கேட்டது பூசணிக் கொடி.

“நீங்கள் எல்லோரும் காய்களைத் தந்து ஐயா வீட்டுக் கல்யாணத்திற்குப் பயன்படுவீங்க. நானோ கசப்பானவன். என்னை யாரும் சீண்ட மாட்டாங்க” என்றபடி அழ ஆரம்பித்தது பாகற்கொடி.

“கவலைப்படாதே! என்றாவது ஒரு நாள் நீ முக்கியமாகப் பயன்படுவாய்” என்று ஆறுதல் கூறின மற்ற தாவரங்கள்.

கிச்சாவின் மகள் திருமணம் விமரிசையாக நடந்து முடிந்தது.

மறுவாரம் தோட்டத்திற்கு வந்த கிச்சா பாகற் கொடியைப் பார்த்து பதைபதைத்தார்.

“ஏண்டா முனியா, பாகற்கொடி இப்படி வாடி, வதங்கி சத்தில்லாமல் இருக்கு?” என்று கேட்டார் கிச்சா.

“ஏன் இப்படி இருக்குன்னு புரியவே இல்லைங்க ஐயா. நிறைய தண்ணீர் விடறேன்; உரம் போடறேன்.”

“அப்பாவுக்குச் சர்க்கரை நோய். தினமும் பாகற்காய்ச் சாறு குடித்தால் நல்லது என்று மருத்துவர் சொல்லியிருக்கார். இப்ப என்ன பண்றது? இன்னும் நல்லா கவனி வரேன்” என்றபடி கிளம்பினார் கிச்சா.

கிச்சாவின் பேச்சு பூசணி மற்றும் பாகற் கொடியின் காதுகளில் விழுந்தன.

“பாகையே! சந்தோஷமான நேரத்தில் உதவுவதைவிட கஷ்டமான நேரத்தில் உதவுவதுதான் பெரிய விஷயம். உண்மையான உதவி. இப்ப உனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. உரத்தையும் நீரையும் குடித்து முன்னாடி மாதிரி நிறைய காய்களை உண்டு பண்ணு” என்றது பூசணிக் கொடி.

அதை ஆமோதித்த பாகற்கொடி ஒரே வாரத்தில் மீண்டும் பழைய நிலையை அடைந்து கூடை கூடையாகக் காய்த்துத் தள்ளியது. பூசணிக்கு மட்டுமல்ல, கிச்சா, முனியனுக்கும் ரொம்பச் சந்தோஷம்.

– ப. கவிதா, பத்தாம் வகுப்பு,
ஷ்ரைன் வேளாங்கண்ணிப் பள்ளி,
சென்னை.

கேட்கட்டுமா டாக்டர்?

● **ஆர். பார்த்திபன், வந்தவாசி.**

? எனக்கு நகம் கடிக்கும் பழக்கம் உள்ளது. இதனைத் தவிர்க்க என்ன வழி?


! நகம் கடிப்பது தவறான பழக்கம் என்பதையும் மற்றவர்கள் பார்த்தால் அசிங்கப்படுவார்கள் என்பதையும் நீங்கள் மனமார உணர வேண்டும். நகங்கள் மிக எளிதாக அசுத்தம் அடையக்கூடியவை. அந்த அசுத்தங்கள் மூலம் பாக்டீரியா, வைரஸ், குடற்புழு முட்டைகள் போன்றவை உடலுக்குள் பரவும் வாய்ப்புகள் அதிகம். முக்கியமாக, மலம் கழித்த பின்பு ஆசன வாயைக் கழுவும்போது நகங்களில் மலக்கிருமிகள் எளிதாக ஒட்டிக் கொள்ளும். ஆகையால் சோப்பு பயன்படுத்தி கழுவி விட வேண்டும். அவ்வப்போது நகங்களை வெட்டிச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நகம் கடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு குடற்புழுத் தொல்லை நிரந்தரமாகி விடும். பாக்டீரியா மற்றும் வைரஸ் தொற்றுநோய்கள் அடிக்கடி வரும். இந்த ஆபத்துகளை எண்ணிப் பார்த்தால் நகம் கடிக்க மனம் வருமா? அப்படியும் முடியவில்லை என்றால் உங்களை தினமும் சந்திக்கின்ற எல்லோரிடமும் 'இனிமேல் நகம் கடிக்க மாட்டேன்' என்று உறுதி கொடுத்து விடுங்கள். பிறகு நீங்கள் நகம் கடிப்பதை அவர்கள் பார்க்க நேர்ந்தால் கேலி செய்வார்களே என்று பயந்து அந்தப் பழக்கத்திற்கு விடை கொடுத்து விடுவீர்கள். இப்படியும் முடியவில்லையா? வேப்பெண்ணெய்யை விரல்களில் தடவலாம். துணியிலான சுருக்குப் பைகளை கைக்குக் கட்டி விரல்களைத் தற்காலிகமாக மறைத்து விடலாம்.



● **க. முகுந்தன், மதுரை.**

? கம்ப்யூட்டர் விளையாட்டுகளைத் தொடர்ந்து பல மணி நேரங்களுக்கு விளையாடினால் கண்கள் பாதிக்கப்படுமா?

! நிச்சயமாக பாதிக்கப்படும். கம்ப்யூட்டர் முன் தொடர்ந்து அமர்ந்து



வேலை செய்யும்போது கண்கள் தொடர்ச்சியாக மானிட்டரையே பார்த்துக் கொண்டிருப்பதால் விழிப்படலம் சீக்கிரம் வறட்சியாகி விடும். இதனால் கண் சிவந்து விடும். கண் அசதி, தலைவலி போன்ற தொல்லைகள் வரும். அடிக்கடி கண் எரிச்சல் துன்பப்படுத்தும். விரைவிலேயே தூரப் பார்வைக் கோளாறு வந்து விடலாம். சிலருக்குத் தலை சுற்றல் வரலாம். இந்தக் கோளாறுகளுக்குக் 'கணினிப் பார்வை நோயியம்' (Computer Vision Syndrome) என்று பெயர்.

இக் கோளாறுகள் வராமலிருக்க சில ஆலோசனைகள். 1. கம்ப்யூட்டர் விளையாட்டுகளுக்கு ஒதுக்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். 2. கம்ப்யூட்டர் மானிட்டரைத் தொடர்ச்சியாகப் பார்த்துக் கொண்டிருக்காமல் அவ்வப்போது பார்வையை வேறு திசைக்குத் திருப்ப வேண்டும். 3. மானிட்டரைக் கூர்ந்து கவனிக்கும்போது கண் இமைகளை அவ்வப்போது மூடி மூடித் திறக்க வேண்டும்.

● **ப. அகிலா, திருச்சி.**

? மரபணு சிகிச்சை முறை என்றால் என்ன?

! உடலில் உள்ள மரபணுக்களில் (Genes) குறை உண்

டாகும்போது உடல் வளர்ச்சியில் ஒரு குறைபாடாகவோ ஒரு நோயாகவோ அது வெளிப்படும். இக் குறைபாடு அல்லது நோய் குறிப்பிட்ட அந்த நபரை பாதிப்பதோடு மட்டுமல்லாமல் அவரைத் தொடர்ந்து வருகின்ற சந்ததிகளையும் பாதிக்கும். இதனால்தான் இந்த நோயைப் பரம்பரை நோய் என்று அழைக்கிறோம்.

எடுத்துக்காட்டாக சர்க்கரை நோய் ஒரு பரம்பரை நோய். பெற்றோரிடமிருந்து அவர்களின் சந்ததிகளுக்கு இது கடத்தப்படுகிறது. ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது கணையத்தில் சுரக்கப்படும் இன்சுலின் எனப்படும் புரதமாகும். இந்தப் புரதத்தை உருவாக்குவது மரபணுக்கள். இந்த மரபணுக்கள் பழுதடையும்போது இன்சுலின் புரதம் உருவாகாது. இன்சுலின் சுரக்காது. இதன் விளைவாக ரத்தத்தில் சர்க்கரையின் அளவு உயர்ந்து விடும். சர்க்கரை நோய் வந்து விடும். இதற்கு இன்சுலின் ஊசி போட்டு அல்லது மாத்திரைகள் சாப்பிட்டு வர வேண்டும்.







இதற்குப் பதிலாக குறைபாடுள்ள மரபணுவை சரி செய்வதன் மூலமும் அல்லது பழுதடைந்த மரபணுவை நீக்கி விட்டுப் பதிலாக புதிய மரபணுவைப் பொருத்துவதன் மூலமும் சர்க்கரை நோய்க்குத் தீர்வு காணலாம். இதற்கு மரபணு சிகிச்சை (Gene Therapy) என்று பெயர். இச்சிகிச்சையின் பலனாக அந்த நபருக்கும் சரி, அவருடைய பரம்பரைக்கும் சரி சர்க்கரை நோய் வருவதில்லை. இது போல் நூற்றுக்கும் மேற்பட்ட பரம்பரை நோய்களுக்குத் தீர்வு காணலாம். இந்தச் சிகிச்சை முறை இப்போது செயல்முறை ஆராய்ச்சி நிலையில் மட்டுமே (Trial) உள்ளது. எதிர்காலத்தில் சாத்தியப்படலாம்.

புற்றுநோயைத் தடுக்க என்ன வழி?

● **தி.சே. அறிவழகன், திருப்புவனம்.**

? புற்றுநோயைத் தடுக்க என்ன வழி டாக்டர்?

! புகைபிடிக்கக் கூடாது. புகையிலை போடக் கூடாது. மூக்குப் பொடி பயன்படுத்தக் கூடாது. மது அருந்தக் கூடாது. கொழுப்பு உணவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஊறுகாய், கருவாடு, உப்புக் கண்டம் போன்ற உப்பு அதிகமுள்ள உணவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். வைட்டமின், தாதுச்சத்து மற்றும் நார்ச்சத்து நிறைந்த காய்கறிகளையும் பழங்களையும் அதி…க உண்ண வேண்டும். …து சாதனங்கள், செயற்கை உணவுகள் போன்றவற்றின் உபயோகத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பூச்சிக்கொல்லி மருந்துகளின் உபயோகத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டும். தனி நபர் சுகாதாரம் பேணப்பட வேண்டும். சுற்றுப்புற சுகாதாரம் காப்பாற்றப்பட வேண்டும்.

● **க. மணிகண்டன், சாத்தூர்.**

? எய்ட்ஸ் நோயைக் கண்டுபிடித்தவர் யார்?

! ராபர்ட் கேலோ (Robert Gallo) என்ற அமெரிக்க அறிவியலாளர் 1983ல் இந்த நோயைக் கண்டுபிடித்தார்.

டாக்டர் கு. கணேசன்

குளிரில் நடுங்கிய

"ஸ்வாமி! தங்கள் முகம் ஏன் வாடி இருக்கிறது?" என்று கேட்டாள் திரிபுரரின் மனைவி.

"இன்று வேணு கோபாலனுக்குச் சிவப்பு, பச்சை, ஊதா, நீலம், ஆரஞ்சு என்று எத்தனை ரகப்பட்டாடைகள் சார்த்தப்பட்டன தெரியுமா? நாம் இது வரை ஒரு ஆடைகூட சார்த்த நினைக்கவில்லையே! அது ஏன் என்று நினைத்தேன். எப்படியாவது நாம் ஒரு ஆடை சார்த்தி விட வேண்டும்" என்றார் திரிபுரர்.



திரிபுரரின் மனைவி மகா குணவதி. புன்னகையுடன், "நீங்கள் மந்திரியாக இருந்தபோது இந்த ஆசை வந்திருந்தால் ஜரிகை போட்ட பட்டாடைகளைக் குவித்திருக்கலாம். மதனகோபாலனுக்கு நாம் தந்துதான் நிறைய வேண்டுமா? சொத்துகளையெல்லாம் ஏழை எளியவர்களுக்குத் தானம் செய்துவிட ஆசைப்பட்டீர்கள்! கையில் ஒன்றும் இல்லையே! நாமே உஞ்ச விருத்தி எடுத்துச் சாப்பிடுகிறோம்!" என்றாள் இல்லத்தரசி.

"உஞ்ச விருத்தி எடுக்க மண் ஓடு போதாதா? இந்தப் பித்தளைப் பாத்திரத்தை விற்றுவிடட்டுமா? வரும்போது திருவோடு வாங்கி வருகிறேன். நாம் எளிமையாக வாழ வாழத்தான் இறைவனுக்குச் சமீபமாக நெருங்குகிறோம்" என்ற திரிபுரர் ஆவலோடு மனைவியைப் பார்த்தார். மறுத்து விடுவாளோ என்று பயம்.

அவளோ புன் சிரிப்புடன் "உங்கள் எண்ணம்தான் என் எண்ணம். தங்கள் ஆசை நிறைவேறினால் சரி" என்றாள்.

உஞ்சவிருத்திப் பாத்திரத்தோடு கடை வீதிக்கு விரைந்தார். அதை விற்ற பணத்தில் ஒரு நூலாடையும், ஓடும் வாங்கி ஓட்டை மனைவியிடம் கொடுத்துவிட்டு


கோபாலன்!

ஆடையுடன் பிருந்தாவனம் கண்ணன் கோவிலுக்குச் சென்றார்.

அர்ச்சகரிடம் ஆடையைக் கொடுத்து, "ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சாற்றி கற்பூர ஆரத்தி காட்டுங்கள்" என்று பணிவுடன் வேண்டினார். கோவிலில் நல்ல கூட்டம். ஒரு பக்கம் பஜனை நடந்து கொண்டிருந்தது.

திரிபுரர் கையிலிருந்த அந்த ஆடையை அலட்சியமாகப் பார்த்த அர்ச்சகர், "கோடீஸ்வரர்களும் லட்சாதிபதிகளும் பணத்தைக் கொட்டி வாங்கிய ஆடைகளையே ஒரு தடவைக்கு மேல் அணிவிக்க சந்தர்ப்பம் வரவில்லை! இந்த நூல் துணிக்கா கண்ணபிரான் காத்திருக்கிறார். ஒதுங்கி நில்லும்" என்றார்.

"அப்படி சொல்லக் கூடாது. இந்த ஏழையின் பக்தியும் ஆசையும் நூலாக இணைந்திருக்கிறது. ஒரு நிமிஷமாவது அணிவித்துக் கழற்றி விடுங்கள்" என்று கெஞ்சினார் திரிபுரர்.



"நான் பகவானைத் தொட்டுப் பணி புரியும் பாக்கியம் பெற்றவன். நான் தொட்டாலே பாலகிருஷ்ணன் திருப்திப் பட்டுவிடுவார்" என்று கூறியபடி கீழே விரித்து உட்கார்ந்து கொண்டார் பட்டர்.

திரிபுரர், சன்னதியை வலம் வந்து வணங்கிய பின் தன் இருப்பிடம் சென்று விட்டார்.

அன்று விசேஷ நாளானதால் அலங்காரம் கலைத்து இரவு அபிஷேகம் செய்தனர். மூலஸ்தான விக்ரகம் லேசாக ஆரம்பித்து கிடுகிடுவென நடுங்கியது. அர்ச்சகருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பக்தர்கள் பயந்தனர். என்ன கேடு வரப் போகிறதோ எனப் பலரும் கலங்கினர். நாலாபுறங்களிலும் தூபம், தீபம், அகில், கற்பூரம் இவைகளைக் காட்டினர். போர்வைகளையும் துப்பட்டிகளையும் போர்த்தினர். அப்படியும் நடுக்கம் நிற்கவில்லை. விஷயம் காட்டுத் தீயெனப்

ஆர். பொன்னம்மாள்

பரவ, அந்த இரவு நேரத்திலும் கோயிலில் கட்டுக் கடங்காத மக்கள் கூட்டம் அலை மோதியது. திரிபுரரும் வந்து சேர்ந்தார்.

அப்போது "என்பக்தர் திரிபுரன் கொடுத்த ஆடையை நீரில் நனைத்துப் பிழிந்து எடுத்து வந்து என் மேல் சுற்றினால் நடுக்கம் நிற்கும்" என்று அசரீரி வாக்குக் கேட்டது.

அர்ச்சகர் அந்தத் துணியை எடுத்துக் கொண்டு ஓடினார். நன்றாகக் கசக்கிப் பிழிந்தார். சாம்பிராணிப் புகையில் காட்டி வழியும் கண்ணீருடன், "தெரியாமல் அலட்சியம் பண்ணிட்டேன். மன்னிக்க வேணும்" என்று பயபக்தியுடன் வேண்டிக் கொண்டு அணிவித்தார்.

திரிபுரரும் அதைப் பார்த்தார். மூல விக்ரகத்தின் நடுக்கம் நின்றது. எல்லோரும் திரிபுரரின் காலில் விழுந்து வணங்கினர். அர்ச்சகரும் தன் செயலுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவர் பாதங்களில் விழுந்தார்.

"பரந்தாமா! ஊரறிய என் அன்பை வெளிப்படுத்த இப்படி ஒரு நாடகமா?" என உருகினார் திரிபுரர்.

கோகுலம் க்விஸ் முடிவு



ஆகஸ்ட் க்விஸ் போட்டியில் நிறைய பேர் பங்கு பெற்றாலும் 15 பேரே சரியான விடைகளை அளித்திருந்தனர்.


ரூபாய் பதிமூன்று பரிசு பெறுவோர்:

1. திவ்யா சாய்நாத், புனே.
2. எஸ். ஸ்ரீவித்யா, பதினோராம் வகுப்பு, தூய வளனார் உயர்நிலைப்பள்ளி, கும்பகோணம்.
3. ஜி. நெல்சன் ஜோசப், அம்மையார்குப்பம், திருவள்ளூர் மாவட்டம்.
4. ஜி. மஞ்சு, வீரவநல்லூர், நெல்லை மாவட்டம்.
5. எம். மல்லிகா, திருநெல்வேலி டவுன்.
6. ச. வெங்கடகிருஷ்ணன், ஜெயகோபால், கரோடியா தேசிய மேல்நிலைப் பள்ளி, கிழக்கு தாம்பரம், சென்னை.
7. கே.ஜெ. ராஷ்மி, பெங்களூர்.
8. டி.ஜி. சிவப்ரியா, மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.
9. மே. நீ. தமிழ்க்கோமகன், குடவாசல், திருவாரூர் மாவட்டம்.
10. வி. விக்னேஷ், சேலம்.
11. பி. அனுராதா, ஈரோடு.
12. எஸ். காயத்ரி, பத்தாம் வகுப்பு, எஸ்.ஆர்.எம். நைட்டிங்கேல் மேல்நிலைப் பள்ளி, மேற்கு மாம்பலம், சென்னை.
13. ஆர். காயத்ரி, சோழபுரம்.
14. எஸ். அரவிந்த், சென்னை.
15. வெ. நடராஜன், திம்மராஜபுரம், திருநெல்வேலி மாவட்டம்.

சரியான விடை

1. இந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடக்கவிருக்கும் இடம் சிட்னி.
2. பிரமிடுகளின் நாடு எகிப்து.
3. கேரட்டில் வைட்டமின் ஏ உள்ளது.
4. பருத்தி கரிசல் மண்ணில் நன்கு விளையும்.
5. சீவகசிந்தாமணி என்பது ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று.
6. குதுப்மினார் உள்ள இடம் டில்லி.
7. உலக எழுத்தறிவு தினம் கொண்டாடப்படும் மாதம் செப்டெம்பர்.
8. கல்லணையைக் கட்டியவர் கரிகால் சோழன்.
9. இனிமையாக ஒலி எழுப்பக் கூடியவை ஆண் குயில்கள்.
10. உலகிலேயே எண்ணெய் வளம் அதிகமுள்ள நாடு சவுதி அரேபியா.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.


• நீர்மூழ்கிக் கப்பல்

கோகுலம் நியூஸ்!

ரஷிய கடற்படைக்குச் சொந்தமான 'கர்ஸ்க்' என்ற நீர்மூழ்கிக் கப்பல் அணு விசையால் இயங்கக்கூடியது. ஆர்டிக் பகுதியில் பேரண்ட்ஸ் கடலில் ஆகஸ்ட் 12-ந் தேதி கடற்போர் ஒத்திகையில் ஈடுபட்டிருந்த போது இக் கப்பலில் இருந்து இரு முறை வெடிச் சத்தம் கேட்டது. அதன் பிறகு கப்பல் உடைந்து நீருக்குள் மூழ்கி விட்டது. இந்த நீர்மூழ்கிக் கப்பலில் 118 பேர் இருந்திருக்கின்றனர். உலக நாடுகள் கவலையடைய ரஷியா மீட்கும் பணியில் பெரு முயற்சி எடுத்தது. 350 அடி ஆழத்தில் இருக்கும் இக் கப்பலை மீட்பது சுலபமாக இருக்கவில்லை. இறுதியில் ஆக்ஸிஜன் இல்லாமலும் நீர் கப்பலுக்குள் புகுந்தும் 118 பேர் இறந்து விட்டனர். 14,000 டன் எடையுள்ள இக்கப்பலை மீட்க வேண்டுமானால் சுமார் 450 கோடி ரூபாய் செலவாகும் என்று கூறப்படுகிறது. 1950ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கடற்படையில் பயன்படுத்தத் துவங்கினர். இதுவரை 6 கப்பல்கள் இப்படி கடலில் மூழ்கியுள்ளன. இவற்றில் 2 கப்பல்கள் அமெரிக்காவைச் சேர்ந்தவை. மீதி 4 கப்பல்களும் ரஷியாவைச் சேர்ந்தவை.

பல கால் ரோபோ

உலகின் பல பகுதிகளிலும் ரோபோக்கள் பயன்பட்டு வருகின்றன. தாய்லாந்தில் ஆறு மற்றும் எட்டு கால்களுடைய ரோபோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பொருள்களை எடுத்துச் செல்லும் குழாய்களைப் பராமரிக்கவும் ஆய்வு செய்யவும் 6 கால் ரோபோ பயன்படவுள்ளது. 8 கால் ரோபோ மருத்துவத் துறையில் பயன்படப் போகிறது. தாய்லாந்தில் பாதுகாப்புப்

பணிகளுக்கான ரோபோக்கள் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ளன. இவை ஆயுதக் கிடங்குகளையும் தேசிய கலைப் பொக்கிஷங்களையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும் எனக் கூறுகின்றனர் ஆய்வாளர்கள்.

மக்கள் தொகை!

2050 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 900 கோடியாக இருக்கும் என்று ஐ.நா. செய்தி தெரிவிக்கிறது. இதில் இளைஞர்களை விட முதியவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. புதிய நூற்றாண்டில் பிறப்பு மற்றும் இறப்பு விகிதம் குறைவாக இருக்கும். 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பிறப்பு, இறப்பு விகிதத்துக்கும் தற்போதுள்ள பிறப்பு, இறப்பு விகிதத்துக்கும் வேறுபாடு இருக்கிறது. உலக அளவில் இறப்பு விகிதம் குறைந்து விட்டது. மனிதனின் சராசரி ஆயுட்காலம் 46 லிருந்து இன்று 66 ஆக உயர்ந்து விட்டது. ஜப்பானில் வயதானவர்கள் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளது. இந்தியா மற்றும் மேற்கு, மத்திய ஆப்பிரிக்காவில் மக்கள் தொகை பெருகி வருகிறது என ஆய்வு தெரிவித்துள்ளது.

எலும்பு அருங்காட்சியகம்!

தொன்மையான மனித எலும்பு அருங்காட்சியகம் ஒன்றை ஷாங்காய் நகரில் நிறுவ சீன அரசு முடிவு செய்துள்ளது. மனித மரபு வழி ஆராய்ச்சி மையமும் ஷாங்காய் இயற்கை அருங்காட்சியகமும் இணைந்து இத் திட்டத்தை செயல்படுத்துகின்றன. இதன்படி சீனாவில் பல பகுதிகளில் பல்வேறு காலகட்டங்களில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகள் சேகரிக்கப்பட உள்ளன. அவற்றைப் பாதுகாக்க நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அவற்றின் மரபணுக்கள் பிரித்தெடுக்கப்படும். இதன் மூலம் மரபணு பற்றிய விவரங்களை நேரிலேயே பார்த்து மனிதனின் பரிணாம வளர்ச்சியை துல்லியமாகப் புரிந்து கொள்ள முடியும் என சீன விஞ்ஞானி தெரிவித்துள்ளார். இதற்காக நிறுவப்பட்டுள்ள டி.என்.ஏ. ஆராய்ச்சிக் கூடத்தில் 3,200 ஆண்டுகள் பழமை வாய்ந்த எலும்புகளின் மரபணுக்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

உலக சமாதான மாநாடு


உலக அளவில் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு நிகழ்ந்துள்ள பல்வேறு போர்கள், சண்டைகளில் இதுவரை 2 கோடிக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். கடந்த பத்தாண்டுகளில் மட்டும் உலகில் 70 இடங்களில் ஆயுதங்களைக் கொண்டு நூற்றுக்கும் அதிகமான மோதல்கள் நிகழ்ந்துள்ளன. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தடுக்கவும் மத்தியஸ்தம் செய்யவும் ஐ.நா.வில் நிரந்தர அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட உள்ளது. நியூயார்க்கில் நடைபெற்ற உலக சமாதானத்துக்கான உச்சி மாநாட்டில்தான் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இம் மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர். இந்தியாவிலிருந்து 300 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி இந்த இதழ் தொடங்கி இன்னும் இரண்டு இதழ்களுக்குத் தொடரும். இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பி வைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.


இந்த மாதப் போட்டி: காய்கறிகள் சம்பந்தப்பட்ட விடுகதைகள். மற்ற மாவட்டங்களுக்கும் வாய்ப்பு வரும். காத்திருங்கள், பரிசை வெல்லுங்கள்!



எல்லா உயிரினங்களுக்கும் மூளை உண்டா?

நாம் பார்க்க, நடக்க, பேச, ஓட, சாப்பிட, சண்டையிட, சிந்திக்க என்று அனைத்து செயல்களையும் செயல்படுத்தி, கட்டுப்படுத்தி, மேற்பார்வையிடும் கட்டுப்பாட்டு அதிகாரி திருவாளர் மூளைதான்! 'மூளைச் சாவே' இறப்பு என மருத்துவத்துறை தீர்மானிக்கிறது.


மனிதனின் மூளை தேங்காய் ஓடு போன்ற கனமான மண்டையோட்டுக்குள் பாதுகாப்பாக இருப்பது நமக்கெல்லாம் தெரியும். நம்மைவிட சிறிய உயிரிகட்கெல்லாம் மூளை உண்டா? தாவரங்களுக்கு மூளை உண்டா? அதன் செயல்பாட்டைக் கட்டுப்படுத்துபவர் யார்? சின்னச் சின்ன புழு, பூச்சிகளுக்கெல்லாம் மூளை இருக்கிறதா?



கண்ணுக்குத் தெரியாத வைரஸ், பாக்டீரியா மற்றும் அமீபா போன்றவைகளும்கூட நகருகின்றன; இனப் பெருக்கம் செய்கின்றன. இவைகளுக்கு மூளை உண்டா? இவற்றுக்கு மூளை என்ற ஓர் உறுப்பு கிடையாது. இருந்தாலும்கூட, இவற்றின் அனைத்து செயல்பாடுகளையும் கவனிப்பது இவற்றினுள்ளிருக்கும் திரவம்தான். உடல் செயல்பாட்டை ஒருங்கிணைத்து செயல்பட வைப்பதுதான் மூளை எனில், உடல் வேலைகளைக் கண்காணிக்கும் பொருட்களை அல்லது உறுப்பை, மூளை என்றே கருதலாம். அமீபாவை விடப் பெரிய ஹைடிரா, ஜெல்லி மீன் போன்றவைகளில் மூளைக்கு அடிப்படையான நரம்பு செல்கள் உள்ளன. மூளை என்ற அமைப்பு மண் புழுவில் காணப்பட்டாலும்கூட, அதன் பணி மனித மூளை போல் சாதனை நிறைந்ததல்ல.

மூளையின் மிகச் சிறப்பான அம்சம் என்பது அதன் நினைவுப் பதிப்பகம்தான்! உடலின் எந்த செல்லும், ஒரு செல் உயிரினமும்கூட, முந்தைய அனுபவத்திற்கேற்ப அதன் பிரதிவினைகளை மாற்றியமைக்கிறது. இந்த இயல்பும்கூட, உயிரிகளின் உயிர் வாழ்தலுக்காகவே ஏற்பட்டதாகும். அபாயத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, உணவு தேடுமிடத்தை மீண்டும் அறிய என்ற இரு முக்கிய காரணங்களுக்காகவே

எஸ். மோகனா



மூளை நினைக்கத் தொடங்கியது. இச் செயல்பாடு, மிகச் சிறிய விலங்கினங்களான புழு, பூச்சிகளிடம்கூட காணப் படுகின்றன. தற்காப்பு, பாலினப் பணி மற்றும் அனிச்சை செயல்கள் போன்றவைக்கான விரிவான செயல் திட்டத்தை, அனைத்து விலங்கினங்களும் தங்களின் மூளைக்குள்ளே கொண்டுள்ளன. இல்லையேல் அவை உயிர் வாழ இயலாது. பாலூட்டியின் குட்டிகட்கு தங்களின் தாயிடமிருந்து பால் உறிஞ்சத் தெரியும்; பறவைக் குஞ்சுகட்கு, பெற்றோரிடமிருந்து உணவைப் பெற வாயைத் திறக்கத் தெரியும். தூண்டலுக்கேற்ப செயல்படுகின்றன. பெற்றோர்கள் அபாயக்குரல் கொடுத்தால் பறவைக் குஞ்சுகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றன. புதிதாகப் பிறந்த வாத்துக்குஞ்சு, தன் கண் முன் தெரியும், அசையும் பொருளை தாயெனக் கருதி அதன் பின் செல்லும்; அது வாத்தாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை.


பிறந்த ஆறு வருடங்களுக்குத்தான் குழந்தையால் பேசக் கற்றுக் கொள்ள முடியும். ஆறு வயது வரை பேசுவதையே கேட்டறியாத குழந்தையால் பேச இயலாது. குழந்தைப் பருவத்தில், ஒரு மொழியைத் திறம்படக் கற்றால், பின்னால் அக்குழந்தையால் பல மொழிகளை எளிதில் கற்க முடியும். ஏனெனில் ஒரு குழந்தையின் ஆறு வயது வரைதான் மூளை வளர்ச்சி அசுர வேகத்தில் இருக்கிறது. கிட்டத்தட்ட 90% வளர்ச்சி 6 வயதுக்குள் நடந்து விடுகிறது.

நம் மூளையின் கொள்ளளவு 1400 சிசி. இதில் பெரும் பகுதி பெருமூளை எனப்படும் செரிப்ரம்தான். இதுதான் நம்

புத்திசாலித்தனத்திற்கான பரிசைத் தட்டிக் கொண்டு செல்கிறது. இது சரியாக வலம், இடம் என பாதியாகப் பிரிக்கப்பட்டிருப்பதுடன், சுமார் 4½ மி.மீ கனமுள்ள ஓர் உறையையும் மாட்டிக் கொண்டிருக்கிறது. இதன் கீழே டெலிபோன் ஒயர்கள் போல், எக்கச்சக்கமான நரம்புத் தொகுதிகள். மூளைக்குள்ளே இருக்கும் 100 மில்லியன் செல்களும், குழந்தை பிறக்கும்போத இருந்தாலும்கூட, அவற்றினிடையே ஏற்படும் நரம்புப் பின்னல்கள், நம் அனுபவம், பார்வை, செயல் திறனுக்குத் தகுந்தாற் போல்தான் அமைகிறது.

மூளையின் ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனியான வேலைகள் உண்டு. அனுராதா ஸ்ரீராமின் பாடலுக்கும் பிரபுதேவாவின் டான்ஸுக்கும் குன்னக்குடியின் வயலின் வாசிப்புக்கும் காரணம், அவர்களின் வலப்பக்கப் பெருமூளையே! அப்துல் கலாமின் அறிவியல் சாதனை, பில்கேட்ஸின் கம்ப்யூட்டர் அமைப்பு, விஜயலட்சுமியின் செஸ் விளையாட்டு, ஆகியவற்றின் காரணி, அவர்களின் இடப்பக்க மூளையே! மனதின் மென்மையான மற்றும் கலை உணர்வுகளுக்கு வலப்பக்க மூளையும், கற்றல், படிப்பு, ஆராய்ந்தறிதல், காரண காரியம் தேடுதல் போன்றவைகளுக்கு மூளையின் இடப்பக்க மூளையும் பொறுப்பு. இவ்விரண்டு பகுதிகளையும் 'கார்ப்பால் கலாசம்' பாலமாக இணைத்து, இவை கலந்து உரையாடவும், உறவாடவும் உதவுகிறது. 'இல்லையேல், இடக்கை கொடுப்பது வலக்கைக்குத் தெரியாமல் தானம் செய்ய வேண்டும்' என்ற தர்மத்தைப் பற்றிய பழமொழி உண்மையாகிவிடும். உடலின் வலப்பக்கப் பகுதிகளை இடப்பக்க மூளையும், இடப்பக்கச் செயல்பாட்டினை வலப்பக்க மூளையும்தான் கட்டுப்படுத்துகிறது.

மூளையின் நியோ கார்டெக்ஸ் (neocortex) எனப்படும் மேலுறைதான் அபரிதமான பரிணாம வளர்ச்சியைப் பெற்றுள்ளது. பெருமூளை மிகப் பெரிதாக வளர்ந்து, நிறைய மடிப்புகளுடன் அதிகமான பரப்பை உள்ளடக்கியுள்ளது. மூளையின் அளவு மந்த புத்திக்காரருக்கும் புத்திசாலிக்கும் ஒரே மாதிரி இருந்தாலும் கூட, பெருமூளையின் மடிப்புகளைப் பொறுத்தே அறிவுத்திறன் மாறுபடுவதாகக் கருதுகின்றனர். பெருமூளையை மேல் பக்கம், கீழ்ப்பக்கம் எனப் பிரிக்கும் படியாக ஆழமான பள்ளம் அமைந்துள்ளது. இதன் பெயர் 'ரொலான்டோ பள்ளம்' (Rolando fissure) என்பதாகும். அதற்கு மேல் உள்ள பகுதி இயக்குப் பகுதி (Motor area)யாக இருக்கிறது. கீழ்ப்பகுதி உணர்வுப் பகுதியாகும். இயக்கும் மற்றும் உணர்வுப் பகுதிகளின், ஒவ்வொரு இடமும் உடலின் குறிப்பிட்ட உறுப்புகட்குச் சொந்தமானது. இப் பகுதிகளைச் சரியான 'மலை முழுங்கி மகாதேவன்' என்றே சொல்லலாம். ஏனெனில் வெளியிலிருந்து வரும் அனைத்து தகவல்களையும் உணர்வுப் பகுதி உள் வாங்கும்; ஆனால் இயக்க பகுதி, உள் வாங்கியதில் அவசியமானவைக்கு மட்டுமே பதில் கட்டளையிட்டு உறுப்புகளைச் செயல்படவைக்கும்.இச் செயல்பாடு உள் வாங்கியதில் 10%கூட இருக்காது.




மூளையின் உணர்ச்சி மற்றும் இயக்கு



பகுதிகள் தவிர, பெரு மூளையின் கார்டெக்ஸ் என்ற அற்புதமான பகுதியில்தான் மனிதனின் நினைவுத்திறன், அறிவுத்திறன், உள்ளுணர்வு, கற்றல் மற்றும் ஆராய்ந்தறியும் திறன், அனைத்தும் விரவிக் கிடக்கின்றன. பெரு மூளையின் பின் பகுதிக்கு ‘ஆக்சிபிட்டல் மடல்’ (Occipital lobe) என்று பெயர். நாம் கண்ணால் காணும் பொருட்களின் பிம்பம் தெரிவது இதிலுள்ள பார்வைப் பகுதியில்தான். நாம் பார்க்கும் பொருட்களை உணர்ந்து, விளக்கமறிந்து, ஆராய்ந்து பின் நினைவில் பதிக்கச் செய்வதும் இப் பகுதியே! கோபம், பாசம், வருத்தம், பாலுணர்ச்சி என்ற உணர்ச்சிக் குவியலுக்குச் சொந்தக்காரர் ‘லிம்பிக் சிஸ்டம்’ என்ற பகுதி! இது, பெருமூளையின் பக்கவாட்டிலுள்ள டெம்ப்பொரல் மடலுக்கு (Temporal lobe) கீழே காணப்படுகிறது. மல்லிகைப் பூவின் வாசனையை அறிவது, ரஹ்மானின் இசையை ரசிப்பது இப்பகுதிதான். வாத்தியார் நம்மைத் திட்டுவதைப் புரிந்து கொள்வதும் இப் பகுதியே!

மனிதக் கரு தோன்றிய இரண்டு வாரங்களுக்குள் முதன் முதலில் தோன்றும் உறுப்புகள் மூளையும் தண்டுவடமும்தான். இரண்டு மாதமான 25 மி.மீ நீளமுள்ள மனிதக் கருவின் மூளை முழு உருவைப் பெற்றிருந்தாலும், அதன் அளவு சின்ன மிளகு சைஸ்தான். மூன்று மாதக் கருவின் எடையில் பாதி, மூளைக்குத்தான்! நாம் தூங்கும்போதும் விழித்திருக்கும்போதும் மூளைக்குள்ளிருக்கும் நரம்பு செல்கள் தூங்குவதே இல்லை.வெளிச் செயல்களை உள் வாங்கிக் கொண்டே இருக்கின்றன. மூளை சரியான சென்சார் துறை. தூரத்தில் எத்தனைச் சத்தங்கள் கலந்து அவியலாய்க் கேட்டாலும், உங்களுக்குப் பிடித்தமானது மட்டும் வெகு துல்லியமாய் உங்கள் செவிப்பறை மூலம் மூளையை வந்தடையும். அதுபோல எத்துணை ஆழ்ந்த உறக்கத்திலும், தன் குழந்தையின் குரல், தாயை உசுப்பி விட்டு விடும். தனக்கு வேண்டியதை மட்டும் வடிகட்டி வாங்கிக் கொள்ளும்.



உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? நம் மூளை எல்லா உணர்வுகளையும் விட வலிக்குத்தான் அதிக முக்கியத்துவம் தருகிறது. வலிக்குத் தகுந்தாற்போல் உடனடியாக பிரதிவினை புரிகிறோம். ஏனெனில் உயிர் வாழ்தலுக்கு இந்த உடனடி செயல்பாடு அத்தியாவசியமானது. இல்லையெனில், உடலுறுப்பில் ஒரு பகுதி காயப்பட்டு, அதனால் இரத்தம் வெளியேறி, அப்

பகுதி சிதைந்து பாதிக்கப்பட்டால், நினைவு தவறி விடும் நிலைமை ஏற்படலாம். எனவேதான் நீங்கள் அறியாமல் இடித்துக் கொண்டாலோ அன்றி சுட்டுக்கொண்டாலோ, செய்தி வலியாக மூளைக்குத் தரப்பட்டு, எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தூண்டுகிறது. ஆனால் உடலின் வலியறியும் மூளை, தன்னை என்ன குத்தினாலும், சுட்டாலும் வலி உணர்வதே இல்லை. மூளை அறுவை சிகிச்சையின்போது, மயக்க மருந்து தரப்படுவது இல்லை.

பெண்ணின் மூளை, ஆணின் மூளையைவிடக் கொஞ்சம் சிறியது. செயல்பாடுகளும்கூட சிறிதே வேறுபடுகின்றன. பெண்களின் மூளை, ஆணின் மூளையைவிட, ஒலிகளை மிக நுட்பமாய் உணர்ந்து செயல்படுகிறது. பீட்டர் உல்ஃப் மற்றும் ஹாரோவிட்ஸ் என்ற இருவரும் பாஸ்டனிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையில் டிரம்மில் தட்டி, சிறுவர், சிறுமியரை ஆடச் செய்ததில் சிறுமியர் தாளம் தவறாமலும், சிறுவர் தாள கதி கலைந்தும் ஆடினர். இதன் மூலம் மூலம், பெண்களை ஒலி எளிதில் கவர்ந்து செயல்பட வைக்கிறதென்பது தெளிவாயிற்று.



உலகிலுள்ள உயிரிகளில் யானையும் திமிங்கிலமும் மட்டுமே, மனித மூளையை விட எடை அதிகம் உடைய மூளையைப் பெற்றிருக்கின்றன. ஆனால் உடல் எடையோடு மூளை எடையை ஒப்பிட்டால் மனித மூளையின் எடையே அதிகம். மனித மூளையின் எடை, உடம்பின் எடையில் 1/40 பாகம்; யானையின் மூளை எடை அதன் உடல் எடையில் 1/500 பாகம்; திமிங்கிலத்தின் மூளை, அதன் உடல் எடையில் 1/12,000 பாகம். மூளையின் எடைக்கும் அறிவுத் திறனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஐன்ஸ்டீனின் மூளையும், சாதாரண மனிதனின் மூளையும் ஒரே எடைதான். ஐன்ஸ்டீனின் புத்தி கூர்மைக்கும், அறிவியல் சிந்தனைக்கும் காரணம் அவரது மூளையின் 'பரைடல் மடல்' (Parietal lobe) மற்றவர்களை விட 15% அதிகம் இருந்தது தான் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

மூளையின் வளர்ச்சி, சுமாராக 20-25 வயதுவரைதான் இருக்கும். அதன் பின், வருடத்திற்கு ஒரு கிராம் என அதன் எடை குறைந்துகொண்டே இருக்கிறது. மூளையின் அனைத்து செல்களையும் (100 மில்லியன்), இதுவரை யாரும் பயன்படுத்தியதில்லை – இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த விஞ்ஞானியான ஐன்ஸ்டீன் உன்பட – என்றே அறிஞர்கள் கூறுகின்றனர். உடலின் எந்தப் பகுதி பாதிக்கப்பட்டாலும் அல்லது செல்கள் இறந்தாலும், அவ்வுறுப்பு தன் இழந்த பகுதியை ஓரளவுக்காவது புதுப்பிக்கும். ஆனால், எதேனும் பாதிப்பால், மூளை தன் செல்களை இழந்து விட்டால், அவ்வளவுதான்! போனது போனதுதான்! செல்களைப் புதுப்பிக்கும் தன்மை மூளைக்குக் கிடையாது. மூளைக்கு அளவிட முடியாத அசுரப் பசி என்றே கூறலாம். உடலின் எடையில் 1/40 பாகமே உள்ள மூளைக்குத் தேவை, உடலின் இரத்தத்தில் 1/5 பகுதி. கொஞ்ச நேரம்கூட பசி தாங்காதவன் மூளை. ஒரு நிமிடம் இரத்தம் மூளைக்குச் செல்லவில்லை என்றால், ஆள் காலிதான்! ஒரு சில வினாடி நேரம் இரத்தம், மூளையின் எந்த ஒரு பகுதிக்கேனும் செல்லவில்லை என்றால், அப் பகுதியிலுள்ள செல்கள் இறந்து விடும். மனிதனின் எந்த ஒரு உறுப்பு பழுதடைந்தாலும் அதற்கு மாற்று உறுப்பு பொருத்தும் அளவுக்கு மருத்துவத்துறை முன்னேறி விட்டாலும்கூட, மூளை மாற்று சிகிச்சை இன்னும் வெற்றிகரமாக நடை பெறவில்லை!

விளையாட்டு அரங்கம்

உலகெங்கும் 'ஒலிம்பிக்ஸ்.... ஒலிம்பிக்ஸ்' என்று பரபரப்பாகப் பேசப்பட்டு வந்த ஒலிம்பிக்ஸ் போட்டிகள் செப்டெம்பர் 15ந் தேதி துவங்குகின்றன. ஒலிம்பிக்ஸ் போட்டிகளை நடத்தும் ஆஸ்திரேலியா எட்டு ஆண்டுகளாகத் திட்டமிட்டு ஒவ்வொரு பணியையும் செய்து வந்துள்ளது.

இரு நூறு நாடுகளைச் சேர்ந்த பத்தாயிரம்



விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் பங்கேற்கின்றனர். உலகெங்கும் தொலைக்காட்சி மூலம் 370 கோடி மக்கள் பார்த்துப் பரவசமடைய உள்ளனர்.

ஒலிம்பிக்ஸ் வரலாற்றிலேயே முதன் முறையாக தொண்ணூறு லட்சம் டிக்கெட்டுகள் அச்சடித்து விற்கப்பட்டுள்ளன.

ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்கென ஐந்து வண்ண வளையங்கள் கொண்ட சின்னம் உள்ளது. இது போக போட்டி நடத்தும் நாட்டிற்கென தனியாக ஒலிம்பிக்ஸ் சின்னம் உருவாக்கப்படும். ஆஸ்திரேலியாவில் ஒலி, மில்லி, சிட் என்ற உருவங்கள் பிரத்யேகச் சின்னங்களாக உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இதில் ஒலி உற்சாகத்தின் அடையாளம் அனைவரையும் நேசிப்பவன். ஒலிம்பிக் சின்னத்தின் வளையங்களைப் பாதுகாப்பவன் இந்த ஒலி. சிட்: ஆஸ்திரேலிய மக்கள் கறுகறுப்பானவர்கள். அந்த நாட்டையும் மக்களையும் பிரதிபலிக்கும்படியாக 'சிட்'டை உருவாக்கியுள்ளனர். இவனைப் பார்த்தால் 'எப்படியும் வென்று விடலாம்' என்ற நம்பிக்கை பிறக்கும். 'ஜெயிப்பது முக்கியமல்ல; எப்படி விளையாடுகிறோம் என்பதுதான் முக்கியம்' என்பதை வலியுறுத்துபவள். மில்லி - இவள் அதி புத்திசாலி. பார்க்கப் பறவை போல் இருந்தாலும் ஜாலியானவள். விளையாட்டு என்றால் உயிர். விளையாட்டு மூலம் வாழ்க்கையின் அர்த்தத்தைக் கற்பித்து அமைதி நிறைந்த உலகை உருவாக்க வேண்டும் என்பதே இந்த மில்லியின் கனவு.

ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்காக 1,000 தங்க பதக்கங்கள், 1000 வெள்ளிப் பதக்கங்கள், 1,100 வெண்கலப் பதக்கங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான பதக்கங்களில் சில பதக்கங்களையாவது இந்தியா வெல்ல வேண்டும் என்பது நம் எல்லோரது விருப்பம். நிறைவேறுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!


ஒலிம்பிக்ஸ் கோலாகலத்தில் திளைக்கும் ஆஸ்திரேலியாவில் இன்னும் ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது. அது கிரிக்கெட் போட்டிகளுக்கென அமைக்கப்பட்டுள்ள இண்டோர் ஸ்டேடியம்தான்! இதில் வெயிலோ, மழையோ ஆட்டத்தை நிறுத்த முடியாது. மிக நவீன வசதியுடன் கூடியது. உலகிலேயே முதல் முறையாக கிரிக்கெட்டிற்கென இங்குதான் இத்தகைய ஸ்டேடியம் அமைக்கப்பட்டுள்ளது.


கடந்த சில மாதங்களாகப் பயிற்சியாளர்களின் கருத்து வேறுபாடு காரணமாக மகேஷ் பூபதியும், லியாண்டர் பயஸும் பிரிந்திருந்தனர். தற்போது மீண்டும் சேர்ந்து விட்டனர். அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிகளில் ஜோடி சேரும் இவர்கள் தொடர்ந்து டென்னிஸ் உலகில் சாதனை புரியட்டும்!

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


பிருந்தாவனம்

பன்றிக்குட்டிக்குப் பசிக்கிறது. கேரட் சாப்பிட வழி காட்டுங்களேன்!





கட்டத்தில் உள்ள நாயின் தலை எந்த நாய்க்குச் சொந்தம்?



1-ல் இருந்து 58 வரை உள்ள புள்ளிகளை இணைத்தால் உங்களுக்குப் பிடித்த உருவம் கிடைக்கும்.



Registered with the Registrar of Newspaper of India under No. 24260/72 Registered No. TN / Chief PMG-154 / 2000"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 " Registered as a Newspaper in Srilanka